GULLIVER'S TRAVELS—No. III

A

# VOYAGE TO LAPUTA

TAMIL

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

Rights Reserved] 1914 [Price As. 4

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

கலிவர் கடற்பிரயாணங்கள் — III

# லபுடா யாத்திரை


சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரிஜிஸ்தர் செய்தது]  1914  [விலை 4 அணா

Printed at
the Chandra Press,
Madras.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

# லபுடா யாத்திரை

4186.

## முதலாம் அத்தியாயம்

நான் வீட்டிற்குத் திரும்பிவந்து பத்துநாள் கூட இராது. **கார்னிஷ்** நாட்டாராகிய **வில்லியம் ராபின்ஸன்** என்னும் கப்பற்றலைவர் என் வீட்டிற்கு வந்தார். அவர் **ஹோப்வெல்** என்னும் முந்நூறு டன் (ton) கப்பல் ஒன்றுக்குத் தலைவர். நான் முன்னம் வேறொரு கப்பலில் **லேவண்ட்** தேசத்திற்குப் போனேன். அப்பொழுது இவர் அந்தக் கப்பலுக்குத் தலைவராயும், நாலிலொரு பங்கு பாத்தியமுள்ளவராயு மிருந்தார். நான் அவருக்குக் கீழ் ரணவைத்தியனாக இருந்தேன். ஆயினும் அவர் என்னைத் தனக்குக் கீழ்ப்பட்ட ஓர் உத்தியோகஸ்தனாகப் பாவியாது, தனது சகோதரனாகப் பாவித்து அன்பாய் நடத்திவந்தார்.

இப்பொழுது அவர் என் வீட்டிற்குவந்த காரணம், நான் எனது பிரயாணத்தினின்றும் திரும்பிவந்து விட்டதைக் கேள்விப்பட்டு என்னைப் பார்க்க விரும்பியதே யன்றி வேறல்லவென்று தோற்றியது. ஏனென்றால் என்னைக் கண்டு அவர் வார்த்தையாடிய தெல்லாம், சாதாரணமாய் நெடு நாட்களாய்ப் பிரிந்திருந்தவர்கள் சந்தித்தால் என்ன வார்த்தையாடுவார்களோ அவ்வளவே யாகும். ஆனால் அது முதல் இவர் அடிக்கடி என்னை வந்து பார்ப்பதுண்டு. ஒரு

முறை வந்தபோது "என்ன சங்கதி? காரியங்களெல்லாம் ஓர் ஒழுங்குக்கு வந்துவிட்டனவா?" என்றார்; மறுமுறை வந்தபோது "போகிறது. எல்லாம் ஒருவாறு ஒழுங்காய் விட்டதுபற்றி மெத்தச் சந்தோஷம்" என்றுசொல்லி, அதைத் தொடர்ந்தாற்போல், "நான் இன்னும் இரண்டொரு மாதங்களில் ஈஸ்ட் இண்டீஸ்க்குப் புறப்படநேரும்" என்றார்; கடைசி முறைவந்தபொழுது என்னையும் தம்மோடு வரும்படி வெளிப்படையாய் அழைத்தார்; அவர் சொன்னதாவது: "உம்மிடம் நான் ஒன்று சொல்கிறேன், கோபித்துக் கொள்ளாதீர். நான் ஈஸ்ட் இண்டீஸ்க்குப் போகும்பொழுது நீரும் என்னோடு வரவேண்டும். உம்மை என் கப்பலில் ரண வைத்தியராக வைத்துக்கொள்கிறேன். உமக்குக்கீழ் வேறொர் உப ரணவைத்தியனும் இரண்டு வேலைக்காரர்களும் அமர்த்தப்படுவார்கள். சாதாரண சம்பளத்துக்கு இரண்டத்தனை உமக்குத் தருகிறேன். கடற்பிரயாணங்களில் உமக்கு என் அனுபவத்திற்குக் குறையாத அனுபவம் உண்டல்லவா? ஆதலால் நீர் எப்படிச் சொல்கிறீரோ அப்படி நடந்து கொள்கிறேன். என்னைப்போல் கப்பலில் உமக்கும் அதிகாரம்செல்லும்."

இவை மட்டுமல்ல. அவர் இன்னும் எவ்வளவோ அன்பான வார்த்தைகள் சொன்னார். அவர் மிகவும் யோக்கியர் என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால், அவர் வேண்டுகோளை மறுப்பதற்கு எனக்கு மனமில்லை. மேலும், கடற்பிரயாணம் செய்து நான் பட்ட கஷ்டங்களுக்குக் கணக்கில்லையாயினும், இன்னும் யாத்திரை செய்யவேண்டுமென்ற ஆவல் எனக்கு அதிகமிருந்தது. இப்பொழுது பயணம் புறப்படுவதில் எனக்குத் தோன்றிய கஷ்டமெல்

லாம், என் மனைவி மனமிசைந்து விடை கொடுக்க வேண்டுமே என்பத தான். கடைசியில் அவளும் இசைந்து எனக்கு விடைகொடுத்து விட்டாள்.

நாங்கள் 1706-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் ஐந்தாம் தேதி கப்பலேறினோம். 1707-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் பதினோராந் தேதி, **சேன்ட் ஜார்ஜ்** கோட்டை சென்று சேர்ந்தோம். கப்பற் பிரயாணிகளிற் பெரும்பாலார் அசௌக்கிய முற்றிருந்தபடியால், அவர்கள் சௌக்கிய மடையட்டுமென்று, மூன்று வாரங்கள் அவ்விடத்திலேயே தங்கியிருந்தோம். பிறகு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கப்பலேறி **டான்க்யுன்** நகரம் சென்றோம் அங்கே சற்று நீண்டகாலம் தங்க வேண்டுமென்று எங்கள் தலைவர் தீர்மானித்தார். ஏனென்றால் அங்கே அவர் வாங்க நினைத்த பல சாமான்கள் அப்பொழுது தயாராகவில்லை. அவைகள் தயாராக சில மாதங்கள் செல்லும்போ லிருந்தது. ஆதலால் அதுவரையில், கையில் பணம் முடைப்படாமலிருக்க வேண்டுமென்று அவர் ஒரு யுக்தி செய்தார். அதாவது: ஒற்றைப் பாய்மரமுடைய சிறு கப்பல் ஒன்றைச் சம்பாதித்து, டான்க்யுனியர் அயல் நாட்டார்க்கு விற்கும் பலவகையான சரக்குகளை மிகுதியாய் வாங்கி அதன் நிறைய ஏற்றி பதினான்கு மனிதர்களோடு அதை என்வசம் ஒப்பித்து, "நான் இங்கிருந்து ஆகவேண்டிய காரியங்களைப் பார்க்கிறேன். நீர் இதற்குச் சமீபத்திலுள்ள தீவுகளுக்குச் சென்று இந்த சரக்குகளை வியாபாரம் செய்து வாரும்" என்று என்னை அனுப்பினார். என்னோடு வந்த பதினால்வரில், மூவர் டான்க்யுனியர்.

நாங்கள் புறப்பட்டு மூன்று நாட்களுக்குமேல் ஆக வில்லை. அதற்குள்ளாக ஒரு பெரும்புயல் அடிக்கத் தொடங்கியது. அது ஐந்து நாள் தொடர்ந்து அடித்து எங்கள் கப்பலை முதலில் வட வடகிழக்காகவும், பிறகு கிழக்கு நோக்கியும் துரத்தியது. ஆறும்நாள் புயல் சற்று ஓய்ந்தது. ஆயினும் மேலைக்காற்று பலமாய் வீசியது. பத்தாவது நாள் இரண்டு கொள்ளைக் கப்பல்கள் எங்களைத் துரத்தி வந்தன. நாங்கள் வெகு சீக்கிரத்தில் அக் கொள்ளைக் கப்பற்காரர்களிடம் சிக்கிக் கொண்டோம். ஏனெனில் எங்கள் சிறுகப்பல் நிறைய சரக்கேற்றப்பட்டிருந்தபடியால் வேகமாய்ச் செல்வதற்குக் கூடாது போயிற்று. மேலும் எங்களை நாங்களே காத்துக்கொள்ளக்கூடிய ஸ்திதியில்கூட நாங்கள் இல்லை.

இரண்டு கொள்ளைக் கப்பற்றலைவர்களும் தங்கள் படையுடனே எங்கள் கப்பலில் வந்து ஏறினார்கள். நான் என்னோடு வந்த எல்லோரையும் குப்புறப் படுத்துக்கொள்ளும்படி முன்னதாகவே சொல்லியிருந்தேன். அப்படியே அவர்கள் படுத்திருந்தனர். கொள்ளைக்காரர்கள் வந்து பார்த்தபொழுது நாங்கள் அனைவரும் குப்புறப் படுத்திருக்கக் கண்டு, எங்கள் கைகளை வலிய கயிறுகளால் இறுகக்கட்டிச் சிலரை எங்களுக்குக் காவல் வைத்துவிட்டு, கப்பல் முழுவதையும் சோதனைசெய்து பார்க்கச் சென்றார்கள்.

எங்களுக்குக் காவலாக வைக்கப்பட்டவர்களில் ஒரு டச்சுக்காரனாய் இருந்ததை நான் கவனித்தேன். அவன், இரண்டு கப்பல்களுள் ஒன்றுக்கேனும் தலைவனாயிராவிட்டாலும், சிறிது அதிகார ஸ்தானத்தில் இருப்பவனாகக்

காணப்பட்டான். எங்கள் முகக்குறியால் நாங்கள் இங்கிலீஷ்காரரென்பதை அவன் அறிந்துகொண்டு, எங்களையெல்லாம் முதுகோடு முதுகு சேர்த்துக் கட்டிக் கடலில் எறிந்து விடுவதாக எங்கள் பாஷையிலேயே தட்டுத் தடுமாறிச் சொன்னான். நான் கூடியவரையில் டச்சு பாஷை நன்றாய்ப் பேசுவேன். ஆதலால் அவனிடம் நாங்கள் இன்னாரென்பதைத் தெரிவித்து, "நீர் எங்கள் தேசத்துக் கருகிலுள்ள தேசத்தாரா யிருக்கிறீர். நம் இருதேசங்களும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையுள்ளனவா யிருக்கின்றன. மேலும் நாங்களும் கிறிஸ்தவர்கள், நீரும் கிறிஸ்தவர். கிறிஸ்தவர்களுள்ளும் இருதிறத்தாரும் ப்ராடெஸ்டன்ட் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். ஆதலால் நீர் தயவுசெய்து எங்கள்மீது இரக்கம் வைத்து உமது தலைவனிடம் சொல்லி எங்களை ஒன்றும் செய்யாது விட்டுவிடச் செய்தீரானால் உமக்குப் பெரும் புண்ணியம் உண்டு" என்றேன். இப்படிச் சொன்னது அவனுக்கு மிகுந்த கோபத்தை யுண்டாக்கி விட்டது. அவன், தன்னோடிருந்தவர்களிடம் மிகுந்த ஆத்திரத்துடன் ஏதேதோ சொன்னான். அவன் பேசிய பாஷை ஜப்பானிய பாஷையா யிருக்குமென்று நினைக்கிறேன். அந்தப் பேச்சினிடையே 'க்ரிஸ்டியானஸ்' என்னும் வார்த்தையை அடிக்கடி உபயோகித்தான்.

கொள்ளைக் கப்பல்கள் இரண்டனுள் ஒன்று மற்றதைவிடப் பெரியதாயிருந்தது. அதற்குத் தலைவனாயிருந்தவன் ஒரு ஜப்பானியன். அவனுக்கு டச்சு பாஷை கொஞ்சந் தெரியும். அதையும் மிகப் பிழைபடப் பேசுவான். அவன் என்னிடம்வந்து என்னைப் பல கேள்விகள்

கேட்டான் நான் அவைகளுக்கெல்லாம் மிகவும் வணக்க மாய் விடையளித்தேன். கடைசியாக அவன் "பயப்ப டாதே, உங்களைக் கொல்லமாட்டோம்" என்றான். நான் அதற்குச் சந்தோஷித்து அக் கப்பற்றலைவனுக்கு வணக்க மாய்த் தலைதாழ்த்து விட்டு, அந்த டச்சுக்காரன் புறம் திரும்பி அவனை நோக்கி, "என்னைப்போன்ற ஒரு கிறிஸ்த வனைக் காட்டிலும், அன்னிய மதஸ்தன் ஒருவன் அதிக இரக்கமுடையவனாயிருப்பதைக் காண, எனக்கு வெட்கமா யிருக்கிறதே" என்றேன். ஆனால் சற்றுநேரத்தில் 'ஏன் இந்த மடத்தனமான வார்த்தைகளைச் சொன்னோம்' என் றெண்ணி என்னை நானே நொந்து கொள்ள நேர்ந்தது. ஏனென்றால் அந்தக் குரோதகுணப் பாவி, என்னைக் கடலில் எறிந்துவிடும்படி கொள்ளைக் கப்பற்றலைவர்கள் இருவருக் கும் போதித்தான். ஆனால் அத் தலைவர்களுள் ஒருவன் எங்களைக் கொல்வதில்லையென்று முன்னமேயே வாக்குக் கொடுத்து விட்டதால் அவர்கள் அவன் போதனையைத் தள்ளிவிட்டார்கள். ஆயினும் அவன் அவர்களை மிகவும் வற் புறுத்தி என்னைக் கொல்லாவிட்டால் வேறொரு தண்டனை யாவது கொடுக்கும்படிச் செய்தான். அந்த தண்டனை, கொலையைவிடக் கொடியதாயிருந்தது. என்னோடு வந்த மனிதர்களை இரண்டு பங்காகப் பகுத்துத் தங்கள் கொள் ளைக் கப்பல்கள் ஒவ்வொன்றில் ஒவ்வொரு பங்காக ஏற்றிக் கொண்டார்கள் நான் நடத்திவந்த கப்பலை அக்கொள்ளைக் காரர்கள் சிலர்வசம் ஒப்புவித்து விட்டனர். என்னை ஒரு று படகில் ஏற்றி நான்கு நாட்களுக்கு வேண்டிய போஜ னத்தை அதில் வைத்துக் கடலில் தனியே விட்டு விடுவ தென்று தீர்மானித்தார்கள். அப்படியே செய்தும் விட்

டார்கள். அந்த ஜப்பானியக் கப்பற்றலைவன் மட்டும் என்மீது மனமிரங்கி, தன்னுடைய சொந்த உபயோகத்துக்காக வைத்திருந்த ஆகாரத்திலிருந்து எனக்கு இன்னும் ஒரு நான்கு நாட்களுக்கு போதுமான ஆகாரத்தை எனக்குக் கொடுத்தான். நான் அந்தச் சிறு படகில் தனியே மிதந்து கொண்டு போனேன். அந்த டச்சுக்காரப் பாவி, கப்பல் ஓரத்தில் நின்று கொண்டு, தன் பாஷையில் எவ்வளவு திட்டக் கூடுமோ அவ்வளவும் சொல்லி என்னைத் திட்டிச் சபித்தான்.

கொள்ளைக் கப்பல்களைக் காணுவதற்குச் சற்று முன்னே, நான் என் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு, தென்கீழ்த் திசையில் பலதீவுகள் இருப்பதைப் பார்த்திருந்தேன். அத்தீவுகளுள் ஒன்றை நாடி எனது சிறு படகை வலித்து, மூன்று மணிநேரத்தில் அதை அடைந்தேன். அத் தீவு முழுவதும் பாறை நிலமாக இருந்தது. அங்கே பல குருவி முட்டைகள் கிடைத்தன. உடனே நெருப்புண்டாக்கி, செத்தை குப்பைகளைச் சேர்த்து அனல் மூட்டி அதில் அம் முட்டைகளைப் பொரித்துத் தின்றேன். அன்று முழுவதும் இவ்வாகாரத்தை யன்றி வேறெதுவும் நான் உட்கொள்ளவில்லை. ஏனெனில், நான் கையில் வைத்திருந்த ஆகாரத்தை எவ்வளவு மிதமாகச் செலவு செய்யக்கூடுமோ அவ்வளவு மிதமாகச் செலவு செய்துகொண்டு நாட்களைக் கடத்தத் தீர்மானித்திருந்தேன். அன்றிரவு ஒரு மலையடியில், தரைமீது வைக்கோலைப் பரப்பி அதிற் படுத்து நித்திரைசெய்தேன்.

மறுநாள் நான் அந்தத் தீவைவிட்டுப் புறப்பட்டு அதற்கப்பாலிருந்த தீவொன்றை நாடிச் சென்றேன்.

இப்படி ஒவ்வொரு தீவாகக் கடந்து செல்லும்பொழுது, ஐந்தாம் நாளன்று, முன் நான் விட்டுவந்த தீவுக்குத் தென் கிழக்காய் ஒரு தீவு காணப்பட்டது.

இந்தத் தீவு, நான் முதலில் எண்ணியதைவிட அதிக தூரத்தில் இருந்தது. அதை அடைவதற்கு ஐந்துமணி நேரத்திற்குக் குறையாமலாயிற்று. இறங்குவதற்கு வசதி யான துறை ஒன்று பார்க்கவேண்டி, நான் அத்தீவை ஒரு தரம் சுற்றிவந்தேன். ஓரிடத்தில் ஒரு சிறு கழி தென்பட் டது. அதன் அகலம் என் படகின் அகலத்தைப்போல மும் மடங்கிருக்கும்.

அத்தீவின் பெரும்பாகம் பாறை நிலமாகவே இருந் தது. சிற்சில விடங்களில் மட்டும், பசும்புல் சிறிது தலை காட்டியிருந்தது; இனிய வாசனைச்செடிகள் சில இங்கு மங்கும் காணப்பட்டன மலைக்குகைகள் அனேகம் அங் கிருந்தனவாதலால், நான் என் ஆகாரத்தில் சிறிது சாப் பிட்டுவிட்டு எஞ்சியதை ஒரு மலைக்குகையில் பத்திரப்படு த்தி வைத்தேன். கற்பாறைகளில் கணக்கற்ற முட்டைகள் கிடப்பது கண்டு அவைகளையெல்லாம் சேகரித்தேன். காய்ந்த புல்லும் சேகரித்துக்கொண்டு வந்தேன். ஏனெ னில் மறுநாள் முட்டைகளை நன்ருய்ப் பொரித்துத் தின்ன வேண்டுமென்று எண்ணங்கொண்டேன். என் கையில் சக்கி முக்கிக்கல், பூதக்கண்ணுடி, கடிகாரம் முதலிய கருவிக ளெல்லாம் சித்தமாயிருந்தன. அன்றிரவு, எனது ஆகாரத் தைப் பத்திரப்படுத்தி வைத்த குகையிலேயே, முட்டை பொரிக்க வைத்திருந்த வைக்கோலைப் பரப்பி அதிற் படு த்துக்கொண்டேன். ஆனல் எனக்குச் சரியான தூக்கம் வர வில்லை. ஏனெனில் என் மனம் பலபல எண்ணங்களை எண்

ணியது. 'சமுத்திரத்தின் நடுவில் உள்ள மனித சஞ்சார மற்ற ஒரு சிறு தீவில் வந்து அகப்பட்டுக்கொண்டோமே. இங்கு நாம் எத்தனை நாள் உயிரோடிருக்கக் கூடும்? சில நாட்கள் சென்றால் நம்முடைய கதி என்னாகும்?' என்றிவ்வாறு என் நிலைமையை நினைந்து வியாகூலப்பட்டுக்கொண்டிருந்தேன். இங்ஙனம் நெடுநேரமிருந்து, பிறகு ஒருவாறு மனந்தேறி, படுக்கை நீங்கி எழுந்து குகைக்கு வெளியே வந்தேன். பொழுதுவிடிந்து வெகு நாழிகையாயிருந்தது. சிறிதுநேரம் குன்றுகள்மீது நடந்தேன். ஆகாயம் தெளிவாயும், சூரியோஷ்ணம் உக்கிரமாயும் இருந்தமையால், சூரியன் கண்ணெதிரே படாதபடி நான் முகத்தை வேறுபுறமாகத் திருப்பினேன். அப்பொழுது, சொடிதாய்க் காய்ந்துகொண்டிருந்த வெய்யில் கடிதாய் மறைந்தது. அங்ஙனமானது, சாதாரணமாக மப்பு மந்தாரங்களால் சூரியன் மறைபட்டதால் நிகழ்ந்ததென்று நினைக்க ஏதுவில்லை. நான் சூரியன் இருந்த இடத்தைத் திரும்பிப் பார்த்தேன். அப்பொழுது சூரியனுக்கும் எனக்கும் இடையே ஏதோ ஒரு பெரிய ஸ்தூல வஸ்து, நானிருக்கும் தீவை நோக்கி வருவதைக் கண்டேன். அதன் உயரம் சுமார் இரண்டு மைல்களுக்குக் குறையாது. ஏழெட்டு நிமிஷங்கள் வரையில் சூரியன் என் கண்ணுக்குத் தென்படவேயில்லை. மேகமென்று கருதுவதற்குக் காற்று அவ்வளவு குளிர்ந்தேனும், வானம் மிகவும் கறுத்தேனும் இல்லை. ஓர் உயர்ந்த மலையடியில் நின்றால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறேயாவு மிருந்தன. அந்த வஸ்து நான் இருந்தவிடத்தை நெருங்கி வரவர, அதன அடிப்புறம் மிகவும் பிரகாசமுள்ளதாகத் தோன்றியது. கீழேயுள்ள கடல்நீர் அதில் பிரதி

பலித்தது. அது ஓர் உறுதியுள்ள பொருளாகவும் காணப்பட்டது. நான் தரை மட்டத்திலிருந்து சுமார் இருநூறடி உயரத்தில் நின்றுகொண்டிருந்தேன். அந்த வஸ்து எனக்கு நேராய்ஒரு மைல் தூரத்திற்குள்ளாக இறங்குவதைக் கண்டேன். உடனே என் சட்டைப்பையில் இருந்த சிறிய தூர திருஷ்டிக் கண்ணாடியை எடுத்து அதன் மூலமாய் அதை உற்று நோக்கினேன். அந்த ஸ்தூல வஸ்துவின் பக்கங்கள் சரிவாயிருப்பதையும், அதில் அனேக மனிதர்கள் ஏறுவதையும் இறங்குவதையும் கண்டேன். ஆனால் அவர்கள் செய்வதென்னவென்று தெரியக்கூடவில்லை.

தன் உயிரினிடத்து இயற்கையாகவுள்ள ஆசையினால் என் உள்ளத்தில் என்னை யறியாமல் ஒருவகை உவகையுண்டாயிற்று. இனி, மனித சஞ்சாரமற்ற இத்தீவிலிருந்து தப்பிவிடலாம், நாதியற்ற என் நிலைமை மாறிவிடும் என்று எனக்குத் தோன்றியது. ஆனால், எனக்கெதிரே வந்திறங்கியது ஒரு தீவாகவும், அத்தீவு அந்தரத்தில் நிற்பதாகவும், அதில் உள்ள மனிதர் தம் விருப்பம்போல் உயர எழும்பவும், தாழ இறங்கவும் வல்லவர்களாகவும் தோற்றியபோது எனக்குண்டான ஆச்சரியம் இவ்வளவென்று, இதை வாசிப்பவர் யூகித்தறிய முடியாது. அச்சமயம், இந்த அபூர்வக் காட்சியைப்பற்றிச் சிந்திப்பதற்கு எனக்கு மனமில்லை. அந்த அந்தரத்தீவு அசைவற்று நின்றமையால், அது இனி என்னசெய்கிறது, பார்க்கலாமென்று ஆவலாய்க் காத்திருந்தேன்.

சிறிதுநேரத்திற்குப் பிறகு அத்தீவு எனக்குச் சமீபமாக வரத் தலைப்பட்டது. அதன் பக்கங்களிலெல்லாம், படிப்படியாய் இருப்பதைப் பார்த்தேன். கீழ்ப்படிகளில்

சிலர் இருந்து, நீண்ட தூண்டில்களை வைத்துக்கொண்டு மீன் பிடிப்பதைக் கண்டேன். நான், கிழிந்துபோன எனது தொப்பியையும், கைக்குட்டையையும் விசிறி விசிறி அத் தீவினரை அழைத்தேன். தீவு சமீபித்து வரவர, என்னால் கூடியவரையில் உரத்துக் கூவி, அவர்களை அழைத்தேன். கவனித்துப் பார்த்தபொழுது, அத்தீவில் எனக்கு எதிராக இருந்த புறத்தில் அத் தீவினர் எல்லோரும்கூடி வந்திருப் பதைக் காணலாயினேன். அவர்கள் என்னைச் சுட்டிக்காட் டித் தமக்குள் ஏதோ பேசிக்கொள்வதாகத் தோற்றியது. அதனால், அவர்கள், நான் கூப்பிடுவதற்கு பதில் உரை யேனும் சைகையேனும் செய்யாவிட்டாலும், நான் இங் கிருப்பதை நன்றாய்த்தெரிந்து கொண்டார்களென்று அறிந் தேன். அம்மனிதர்களுள் நாலைந்துபேர், வெகு அவசரமாக படிக்கட்டுகள் மீதேறி ஓடி, அத்தீவின் உச்சிக்குச்சென்று மறைந்துவிட்டனர். அவர்கள், என்னைப்பற்றி ஏதோ தெரி விக்க, மற்றையோரால் தம் தலைவனிடம் அனுப்பப்பட் டிருக்க வேண்டுமென்று அனுமானித்தேன். என் அனு மானம் சரியாகவே யிருந்தது.

வர வர ஜனங்கள் அதிகமாகக் கூடினார்கள். அரை மணிநேரத்திற்குள், அந்தத் தீவு எழும்பி நகர்ந்து நான் நின்ற இடத்திற்கு நூறு கஜதூரத்தில் வந்தது அதன் கீழ்ப்பாகம் என் கண்ணுக்கு நேராக விருந்தது. அப் பொழுது நான் அதில் இருந்தவர்களை நோக்கித் தாழ்ந்து வணங்கி மிகவும் மரியாதையாய் அவர்களைக் கூப்பிட்டேன். அவர்கள் ஒன்றும் பதில் அளிக்கவில்லை. எனக்கு எதிரே இருந்தவர்கள் மற்றவர்களைவிட சற்று கௌரவமான மனி தர்களென்ற அவர்கள் நடை உடை பாவனைகளால் தோன்

றியது. அவர்கள் அடிக்கடி என்னைப் பார்த்துப் பார்த்துத் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். கடைசியில் அவர்களுள் ஒருவன், மரியாதையாகவும், தெளிவாகவும், ஓர் இனிய பாஷையில் என்னைக் கூப்பிட்டான். அந்த பாஷை இட்டாலிய பாஷைபோ லிருந்தது. ஆதலால், அவர்கள் காதுக்கேனும் இனிமையா யிருக்கட்டும் என்று நான் இட்டாலிய பாஷையிலேயே பதில் கூறினேன். ஒரு வர் பாஷை ஒருவர்க்குப் புரியாவிட்டாலும், அவர்கள் என் கருத்தை எளிதில் அறிந்து கொண்டதாக எனக்குத் தோற்றியது.

அவர்கள், மலைமீதிருந்து இறங்கி கரைக்கு வரும்படி எனக்குச் சைகை செய்தார்கள். நான் அங்ஙனமே சென் றேன். உடனே அவர்கள் தாங்களிருந்த தீவின் ஓரம் என் தலைக்கு நேராக வரும்படி தீவை நகர்த்தி, ஒரு சங் கிலி முனையில் சிறு ஆசனம் ஒன்றைக் கட்டி அதை எனக்கு நேராக இறக்கினார்கள். நான் அவ் வாசனத்தைப் பிடித்துத் தொத்தி அதில் ஏறிக்கொண்டேன். பிறகு அவர்கள் என்னை உயரத் தூக்கிக் கொண்டார்கள்.

# இரண்டாம் அத்தியாயம்

நான் அந்தத் தீவில் சென்று சேர்ந்ததும் என்னைச் சுற்றிலும் ஜனங்கள் கூட்டமாய்ச் சேர்ந்து விட்டார்கள். அவர்களுள் எனக்குச் சமீபமாக நின்றவர்கள் மற்றவர் களைவிடச் சற்று உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் என்னை மிகவும் ஆச்சரி யத்தோடு பார்த்தார்கள். நானும் அவர்களை ஆச்சரியத் துடனேயே பார்த்தேன். ஏனெனில், நான் அதுவரையில், அவர்களைப்போல அதிசய உருவமும், நடையுடைகளும் உடைய மனிதர்களைப் பார்த்ததேயில்லை. அவர்கள் எல் லோர்க்கும், தலை இடது அல்லது வலது புறமாகச் சாய்ந் திருந்தது; கண்களிரண்டில் ஒன்று உள்நோக்கியும் மற் றொன்று மேல் நோக்கியும் இருந்தன. அவர்களது மேலாடை மீது, சூரியன், சந்திரன், நட்சத்திரம் முதலிய கிரகராசிகளும், யாழ், வீணை, குழல், மத்தளம், தாளம் முதலிய ஐரோப்பாவில் உள்ள நமக்குத் தெரியாத பல வகை வாத்தியக் கருவிகளும் சித்திரிக்கப்பட் டிருந்தன. வேலைக்காரர்களாகத் தோற்றிய சிலரை நான் கவனித் தேன். அவர்கள் ஒவ்வொருவரும் கையில் ஒவ்வொரு தடி வைத்திருந்தார்கள். அந்தத் தடிகள் ஒவ்வொன்றின் முனையிலும், காற்றடைத்த பைபோல ஏதோ ஒன்று கட்டப்பட் டிருந்தது. அந்தப் பைக்குள் கடலை முதலிய தானியங்களேனும் கூழாங்கற்களேனும் சிறிது போடப் பட்டிருக்குமென்று பிறகு கேள்வியுற்றேன். இந்தப் பைக

ளால் அவர்கள் தங்களருகில் நிற்பவர்கள் காதிலும் வாயி லும் அடிக்கடி தட்டிக் கொண்டிருந்தனர். அதன் கருத்து இன்னதென எனக்கு அச்சமயம் விளங்கவில்லை. அந்த ஜனங்கள் எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்ந்திருப்பதால், மற்றவர்களோடு பேசவேண்டுமானல் வாயிலும், மற்றவர்கள் பேசுவதைக் கேட்கவேண்டுமானல் செவியிலும் தட்டி உணர்த்தும்படி அவ்வளவுதூரம் மெய் மறந்திருப்பார்கள் என்று தோற்றுகிறது. இதற்காகவே, சற்று நல்ல ஸ்திதியில் உள்ளவர்களும், தங்கள் வீட்டு வேலைக்காரர்களுள் தட்டுகிறவன் (அவர்கள் பாஷையில் க்ளிமேனேல்) என்ெருருவனை நியமித்து வைத்திருக்கிறார் கள். வெளியே எங்கேனும் சென்றாலும் அவனை உடன் கொண்டு செல்கிறார்கள். அவனுடைய வேலை என்ன வென்றால், இரண்டு மூன்று பேர்கள் கூடியபோது, தன் கையில் உள்ள பையால், எவன் பேசவேண்டுமோ அவன் வாயில் மெதுவாகத் தட்ட வேண்டியது; பேசுவதைக் கேட்பவன் அல்லது கேட்பவர்களுடைய வலதுகாதையும் அங்ஙனமே மெல்லத் தட்டிவிட வேண்டியது. சில சமயங்களில் இந்தத் தட்டுகிறவர்கள் தம் எஜமானருடைய கண்களையும் மிருதுவாய்த் தட்டவேண்டி வரும். ஏனெனில் அவர்கள் தெருவில் நடக்கும்போது கூட, சிந்தனையில் ஆழ்ந்திருப்பார்களாதலால், எதிரே இருப் பது இன்னதென் றறியார்கள்; தட்டுகிறவன் இல்லாவிட் டால், பள்ளம் முதலியவைகளில் விழுந்தாலும் விழுவர்; ஸ்தம்பம் முதலியவைகளில் மோதிக்கொள்ள நேர்ந்தாலும் நேரும்; வருவார் போவார்மேல் விழும்படியும் நேரும். இவ்வகையான ஆபத்துக்களுக்கு உள்ளாகாத வண்ணம்

பாதுகாப்பதற்கே, தட்டுகிறவன் அவர்கள் கண்களிற் றட்டி ஜாக்கிரதை செய்வது.

இந்த விஷயத்தை முன்னதாகத் தெரிவித்துவிட்டேன். இல்லாவிட்டால், என்னை அம்மனிதர்கள் அத்தீவின் உச்சிக்கு அழைத்துப் போனபோதும் அங்கிருந்து அரசனரண்மனைக்குக் கொண்டுபோனபோதும் நிகழ்ந்த விஷயங்களைச் சொன்னால், அறிந்து கொள்வது கஷ்டமாயிருக்கும். நாங்கள் மேலேறிச் சென்றபொழுது பலதடவைகளில் அவர்கள் தங்களைத் தாமே மறந்து, என்னைத் தனியே விட்டு விட்டார்கள். அச் சமயங்களி லெல்லாம், தட்டுகிறவர்கள்தாம் அவர்கள் உணர்வை எழுப்பி விட்டார்கள். தமக்குப் புதுமையான எனது நடையுடைகளையாவது, என் முகஅமைப்பையாவது, சிந்தனை அதிக மில்லாத சாமானியர்கள் இடும் கூச்சலையாவது அவர்கள் சிறிதும் கவனிப்பதாகத் தோற்றவில்லை.

கடைசியாக நாங்கள் அரண்மனையிற் புகுந்து அரசன் சமுகத்தை யடைந்தோம். இருபுறத்திலும் மதிவல்ல மந்திரிகள் முதலாயினோர் சூழ்ந்திருக்க அவர்களுக்கு நடுவே சிம்மாதனத்தின் மீது அரசன் வீற்றிருப்பதை நான் கண்டேன் சிம்மாதனத்திற் கெதிரே பெரியமேஜையொன்றிருந்தது. அது முழுவதும் கோளங்களும் கணிதநூற் கருவிகளும் நிறைந்திருந்தன. அரசரின் மாட்சிமை நாங்கள் சென்ற காட்சியைக் கடைக்கணித்தும் பார்க்கவில்லை. இத்தனைக்கும் நாங்கள் சென்றதால் உண்டான அரவத்திற்குக் குறைவில்லை. ஆனால் அவர் அச்சமயம் ஏதோ ஒரு பெரிய சங்கையை ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்த ஆராய்ச்சி முடிவுபெறுவதற்கு ஒருமணி நேரம்போல்

ஆயிற்று. அவருக்கு இருபாரிசத்திலும் இரண்டு சேவகர்கள் பைமுனைக்கோல் கொண்ட கையராய் நின்றனர். அரசர் ஆராய்ச்சி முடிந்ததறிந்து அவ்விருவருள் ஒருவன் தன் பைமுனைக்கோலால் அவர் வாயில் மெல்லத் தட்டினான்; மற்றவன் அவர் வலது காதை அங்ஙனமே தட்டினான். உடனே அரசர் தூக்கத்தினின்று திடீரென விழித்தவர் போல் கண்விழித்து என்னையும் என்னைச் சூழ்ந்திருப்பவர்களையும் பார்த்து எம் வருகையை ஞாபகப்படுத்திக்கொண்டார். எமது வருகை முன்னமேயே அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர் ஏதோ சில வார்த்தைகள் பேசினார். உடனே ஒரு வாலிபன் பைம்முனைக் கோலோடு என் அருகில் வந்து, அக்கோல் முனையால் என் வலதுகாதை மெதுவாய்த் தட்டினான். அவ்வகையான தட்டுதல் எனக்குச் சிறிதும் வேண்டுவதில்லையென்று நான் சைகைகளால் கூடியவரையில் தெளிவாகத் தெரிவித்தேன். அதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். ஆனால், அதனால் அரசருக்ும் அரச சபையில் உள்ளவர்களுக்கும் என் அறிவைப் பற்றி மிகவும் கேவலமான அபிப்பிராயம் உண்டாயிற்றென்று தெரிந்து கொண்டேன்.

அரசர் என்னைப் பல கேள்விகள் கேட்டதாகத் தோற்றியது நான் அவரிடம் எனக்குத் தெரிந்த பாஷைகளிலெல்லாம் பேசிப் பார்த்தேன். நான் அவர்கள் பேசுவதை அறிந்து கொள்ளவும் முடியாது, என் பேச்சை அவர்கள் அறிந்து கொள்ளச் செய்யவும் முடியாதென்று கண்டபின், அரசர் என்னைத் தமது அரண்மனையின் ஒரு புறத்திற்கு அழைத்துப் போகும்படி சிலருக்குக் கட்டளை

யிட்டார். (இவர், அயல் நாட்டாரை உபசரிப்பதில் தமக்கு முன்னிருந்த அரசர்களைவிட மிகவும் சிறந்தவராம்.) நான், அரசர் கட்டளைப்படி அரண்மனையின் ஒரு புறத்துக்கு அழைத்துக் கொண்டு போகப்பட்டேன். எனக்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்வதற்காக இருவர் நியமிக்கப்பட்டனர். எனக்குப் போஜனம் வந்தது. தக்க பதவியில் உள்ள நால்வர் என்னோடு உண்பதற் கமர்ந்து என்னைக் கௌரவித்தார்கள். அவர்களை அரசருக்குச் சமீபத்தில் பார்த்த ஞாபகமிருக்கிறது. இரண்டு முறை போஜனம் பரிமாறப் பெற்றது. ஒவ்வொருவர்க்கு மூன்று வட்டில்கள் சமர்ப்பிக்கப் பட்டன. முதன் முறையில், ஆட்டுத் தொடையொன்று நேர்முக்கோண வடிவாகவும் மாட்டுக் கறித்துண்ட மொன்று நேர்நாற்கோண வடிவாகவும், அடையொன்று வட்டவடிவாகவும் சமைந்திருந்தன. இரண்டாவது முறையில், யாழ் என்னும் இசைக்கருவியைப்போல் சமைக்கப் பெற்ற இரண்டு வாத்துகளும், குழலென்னும் இசைக்கருவியைப் போல் செய்யப்பெற்ற பலகாரங்களும், ஊது கொம்பைப் போல் அமைக்கப் பெற்ற மாட்டுக் கன்றின் இருதயமும் பரிமாறப் பெற்றன. பரிசாரகர்கள் ரொட்டியை, வட்டத் தூண் போலும், கோபுரம் போலும், இன்னும் பலவகையான கணித உருவங்கள் போலும் அறுத்துவைத்தனர்.

நாங்கள் சாப்பிடும்பொழுது, அனேக வஸ்துக்களுக்கு அவர்கள் பாஷையில் இடப்பட்டுள்ள பெயர்கள் என்னவென்று கேட்கத்துணிந்தேன். அவர்கள் தமது 'தட்டுகிறவர்கள்' உதவியால், என் கேள்விகளுக்கு மிகவும் சந்தோஷத்தோடு பதில் உரைத்தார்கள். தங்களோடு பேசு

வதற்கு எனக்குக் கற்றுக்கொடுத்து விட்டால், நான் அவர்களது அறிவின் ஆற்றலை அறிந்து அதிக ஆச்சரிய முறுவேனென்று கருதினர்கள். நான் ரொட்டி, தண்ணீர் முதலானவைகளை, பெயர்சொல்லிக் கேட்க விரைவில் கற்றுக்கொண்டேன்.

போஜனம் முடிந்த பிறகு என்னேடு சாப்பிட்டவர்கள் போய்விட்டார்கள். அப்பால், அரசர் உத்தரவுப் படி, 'தட்டுகிறவன்' ஒருவனுடன், பேனு, மைக்கூடு கடிதம், இரண்டு மூன்று புத்தகங்கள் முதலியவற்ருேடு ஒரு கனவான் வந்தான். தான் எனக்குத் தங்கள் பாஷையைக் கற்றுக்கொடுக்க வந்திருப்பதாகச் சைகைகளால் தெரிவித்தான். அவன் நான்கு மணிநேரம் என்னேடு இருந்தான். அந்நான்கு மணி நேரத்தில், நான் அவர்கள் பாஷையில் அனேகவார்த்தைகளைக் கடிதத்தில் வரிசையாக எழுதி ஒவ்வொரு வார்த்தைக்கு நேராக அதனதன் பொருளையும் எனது பாஷையில் எழுதிக்கொண்டேன். இதையல்லாமல் பல சிறு வாக்கியங்களையும் கற்றுக்கொண்டேன். எவ்வாறெனில், எனது உபாத்தியாயர் அங்குள்ள வேலைக்காரர்களை, இதை எடு, அதை எடு, இங்கே வா, அங்கே போ, உட்காரு, எழுந்திரு என்று பலவகையான கட்டளைகள் இடுவார்; அப்பொழுது அவர் சொல்வதைக் கவனமாய்க் கேட்டு எழுதிக்கொள்வேன். அவர் ஒரு புத்தகத்திலிருந்து, சூரியன், சந்திரன், நட்சத்திரம், முக்கோணம், நாற்கோணம், முதலிய உருவங்களைக் காட்டி அவைகளின் பெயர்களையும் சொல்லிக்கொடுத்தார். தமது நாட்டார் உபயோகிக்கும் வாத்தியக் கருவிகளின் விவரத்தையும், அவைகளில் வாசிக்கப்பெறும் இசைகளின் பெயர் வேறுபாடுகளையும் கற்றுக்

கொடுத்தார். அவர் என்னைவிட்டுப் போனபிறகு, நான் அவர் கற்பித்தவைகளையெல்லாம் மீட்டும் பலமுறை கருத்தூன்றிப் படித்து நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்வேன். இங்ஙனம் சில நாட்களில் அவர்கள் பாஷையை ஒருவாறு கற்றுக்கொண்டேன்.

'பறக்கும் அல்லது மிதக்கும் தீவு' என்பதற்கு அவர்கள் பாஷையில் 'லாபுடா' என்றசொல் உபயோகப்பட்டு வருகிறது. இந்தச் சொல்லின் உற்பத்தி என்னவென்று சரியாய் நிச்சயிக்கக்கூடவில்லை. பழையகாலத்து வழக்கில் 'லாப்'என்பதற்கு "உயர்ந்த" எனவும், 'அன்டா' என்பதற்கு "தலைவன்" எனவும் பொருள். இவ்விரு தனி மொழிகளும் கூடி 'லாபன்டா' என்றாய், பிறகு நாளடைவில் 'லாபுடா' எனத் திரிந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால், இங்ஙனம் கூறுவதில் எனக்குச் சம்மதமில்லை; இது வலிந்து பொருள் கொள்வதாயிருக்கின்றது. அந்நாட்டு வித்வான்களிடம், நான் எனக்குத் தோன்றிய ஒரு பொருளைச் சொன்னேன். அதாவது: 'லாபுடா' என்ற பதம், ஆதியில் **க்வாசி லாப் அவுட்டேட்** என்றிருக்கவேண்டும்; லாப் என்பதற்குச் சரியானபொருள் "சூரியகிரணங்கள் கடலில் நாட்டியஞ்செய்வது"; "அவுட்டேட்" என்பதற்கு "சிறகு" எனப்பொருள். நான் கூறும் இந்தப் பொருளைத்தான் கொள்ள வேண்டுமென்பது எனது அபிப்பிராயமல்ல; எப்பொருள் கொள்ளத்தக்கது, எப்பொருள் தள்ளத்தக்கது என்று துணிவது இதை வாசிக்கும் நன்மதியாளர் கடன்.

அரசர் என்னை எவர்கள்வசம் ஒப்புவித்தாரோ, அவர்கள், எனக்குச் சரியான உடைகள் இல்லாதிருப்பது

கண்டு, மறுநாளே ஒரு தையற்காரனை வரவழைத்து, எனக்கு ஒரு ஜதை உடுப்புகளுக்கு அளவெடுத்துப் போகும்படிக் கூறினார்கள். அத் தையற்காரன் அளவெடுத்தது சாதாரணமாக ஐரோப்பா கண்டத்துத் தையற்காரர்கள் அளவெடுப்பதைப் போலில்லை. அவன் முதல் முதல் எனது உயரத்தை ஒரு நூதனவகையாக அளந்துகொண்டான். பிறகு எனது சரீரத்தின் அளவையும் உருவையும் அளவு கோலாலும், வட்டம்வரை கருவியாலும் கடிதத்தில் குறித்துக்கொண்டு சென்றான். பிறகு ஆறு நாட்கள் கழித்து உடுப்புகளைத் தைத்துக்கொண்டு வந்தான். ஆனால் அவைகள் எனக்குச் சரியாய்ப் பொருந்தவில்லை; கண்ணுக்கும் நன்றாயில்லை. கணக்கிட்டதில் ஏதோ சிறிது தவறிவிட்டான். ஆனால் இவ்விதமான அசம்பவங்கள் அடிக்கடி நேருவதைக் கண்டுள்ளேனாதலால், நான் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

சரியான உடையில்லாமையாலும், உடம்பு சிறிது அசௌக்கியமாயிருந்தபடியாலும் நான் சிலதினங்கள் தொடர்ந்தாற்போல் ராஜசமுகத்திற்குச் செல்லவில்லை. அதனால் அவர்கள் பாஷையில் இன்னும் பல வார்த்தைகளைக் கற்றுக்கொள்வதற்கு இடம் ஏற்பட்டது. அப்பால் நான் ராஜ சமுகத்திற்குச் சென்றபொழுது, அரசர் கூறிய விஷயங்களில் பலவற்றை அறிந்துகொண்டேன். அவருக்கு ஒருவகையாக மறுமொழிகளும் கூறவல்லவனானேன்.

அரசர் அத்தீவை, லகாடோவுக்குச் செலுத்தும்படிக் கட்டளையிட்டார். லகாடோ என்பது, அசையா நிலத்தில் அவ்வரசர் ஆளுகைக்குட்பட்ட ராஜ்யத்திற்குத் தலைநகர். அது நாங்கள் இருந்தவிடத்திலிருந்து இருபத்தேழு காத

தூரத்தில் உள்ளது. தீவு வடகிழக்காய்க் கொஞ்சதூரம் சென்று பிறகு நேர்கிழக்காய்ச்சென்றது நான்கு நாட்கள் அங்ஙனம் சென்று ஐந்தாநாள் மாலையில் மேற்கூறிய நகரத்துக்கு நேர் உச்சியில் சென்றது. அது அந்தரத்தில் சென்ற பொழுது சற்றாயினும் நகருகிறதென்ற உணர்ச்சி எனக்கில்லை. அவ்வளவு அமரிக்கையாய்ச் சென்றது. பிரயாணம் ஆரம்பித்த இரண்டாநாள் பகல் பதினொருமணியிருக்கும்; அரசர், தமது மந்திரி பிரதானி முதலானவர்கள் சூழக் கொலுவமர்ந்திருந்தார்; அவர் சமுகத்தில் மூன்றுமணி நேரம் விடாமல், பலவகை வாத்தியங்கள் வாசிக்கப்பெற்றன. அந்தச் சத்தத்தால் என் இருசெவிகளும் செவிடுபட்டுவிடும்போல் தோற்றியது.

**லகாடோ** நகர்க்குச் செல்லும் வழியில் பல ஊர்களிருந்தன. அவற்றுள் சிற்சில ஊர்களில் குடிகளின் குறைமுறைகளைக் கேட்பதற்காகத் தீவை நிறுத்தும்படி அரசர் கட்டளையிட்டார். அங்ஙனம் நிறுத்தப்பட்ட விடங்களிலெல்லாம், அரசர்க்கு மனுப்பத்திரங்கள் அனுப்பப்பட்டன. எவ்வாறென்றால், மேலிருந்து ஒரு கயிறு தொங்கவிடப்படும்; கீழ் நிலத்தில் உள்ள குடிகள் தமது மனுப்பத்திரத்தை அந்தக் கயிற்றின் முனையில் முடிந்துவிடுவார்கள்; அதை மேலிருந்து ஒருவர் இழுத்து, கடிதத்தை அவிழ்த்து அரசனிடம் கொடுப்பார். இவ்விதமே தின்பண்டம் முதலியவைகளும் கீழிருந்து அனுப்பப்படும்.

எனக்குக் கணித சாஸ்திரத்திலிருந்த பயிற்சி, அவர்கள் பாஷையைப் பயிலுவதில் மிகவும் பயன்பட்டது. ஏனெனில் அவர்கள் பாஷை பெரும்பாலும் கணித சாஸ்திரத்திலும், இசைநூலிலும் சம்பந்தப்பட்டதாயுள்ளது.

இசையிலும் எனக்குச் சிறிது பயிற்சி உண்டு. அவர்கள் கருத்துக்களெல்லாம், வரிகளையும் வடிவங்களையும் பற்றியே எழுவதைக் கவனித்தேன். உதாரணமாக அவர்கள் ஒருவர் உருவழகை வருணிக்க விரும்பினால், அதை வட்டம், சதுரம், சக்கரம், முக்கோணம், அறுகோணம், நேர்கோணம், குவிகோணம், (acute angle) விரிகோணம் (obtuse angle) முதலிய கணிதசாஸ்திர வடிவங்களோடு ஒப்பிட்டே வருணிக்கின்றனர். அரசன் மடைப்பள்ளிச் சுவரில், பலவகையான கணித சாஸ்திரக் கருவிகளும், இசைக்கருவிகளும் மாட்டப்பெற்றிருப்பதைக் கண்டேன். அந்தக் கருவிகளின் உருவங்களைப்போலவே உணவுகள் சமைப்பது வழக்கம்.

அவர்கள், வீடுகள் கட்டியிருக்கும் வகையோ மிகவும் கேவலம். இரண்டு சுவர்கள் சேருமிடம், நேர்கோணமாய் அமைந்திருக்க நான் பார்த்ததேயில்லை. இவ்விதமான குறைவுகளுக்குக் காரணம் அனுபவ கணிதத்தில் அவர்களுக்குள்ள அலக்ஷியமே. அதை மிகவும் அற்பமாகவும் அறிவு சம்பந்த மற்றதாகவும் கருதுகிறார்கள். கொல்லர் முதலிய வேலைக்காரர்களுக்கு, அவர்கள் கற்பிக்கும் கணித சாஸ்திரம் அவ்வேலைக்காரர்களின் அற்ப அறிவுக்குத் தெளிவாய் விளங்குவதில்லை. ஆதலால்தான் இந்தக் குறைக்கு இடமுண்டாகிறது. கடிதத்தின்மீது எழுதுகோலையும், வட்டவரைவு, நேர்கோல், கோணமானி முதலிய கணிதநூற் கருவிகளையும் உபயோகிப்பதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள் தாம். ஆனால், தமது தின முயற்சிகளிலும் செய்கைகளிலும் அவர்களைப்போல ஒழுங்கீனமான மனிதர்களை நான் கண்டதில்லை. இதுமட்டுமல்ல கணிதம், இசை

இந்த இரண்டு சாஸ்திரங்களைத் தவிர மற்ற சாஸ்திரங்களை உணர்ந்தறிவதில் அவர்கள் மிகவும் மந்தபுத்தியும் குழம்பியமனமும் உடையவர்களாயிருக்கிறார்கள். தருக்க ஞானம் அவர்களுக்கு மிகுதியும் குறைவு. எல்லோரும் ஒரே அபிப்பிராயங்கொண்டிருந்தாலொழிய அப்படி இருப்பது மிகவும் அருமை. அவர்கள் கலகமின்றி ஒன்றுகூடி ஒரு பொருளை ஆராய்வதில்லை. யூக உணர்வு, சித்திர உணர்வு, கற்பனுசக்தி, என்னும் இவைகளுக்கும் அவர்களுக்கும் வெகு தூரம். அவ்வுணர்ச்சி வகைகளைக் குறிப்பதற்கு அவர்கள் பாஷையில் பதங்களுமில்லை. அவர்கள் அறிவும் சிந்தையும், கணிதம், இசை இவ்விரண்டினுள்ளேயே சுற்றிக்கொண்டிருக்குமே யன்றி அவைகளுக்கு வெளியே எட்டிப் பார்ப்பதுமில்லை.

அவர்களிடத்து நான் கண்டு கொண்டாடி வியந்தது என்னவெனில், தேச வர்த்தமானங்களிலும், ராஜதந்திரங்களிலும் அவர்களுக்கு இருந்த மிகுந்த மனுேவிருப்பமே. ராஜாங்க விஷயங்களைப்பற்றி அவர்கள் ஆராய்ந்துரைக்கும் முடிவுரைகளும், மறுதலைப்பட்ட கட்சிகளைப்பற்றி உறுத்து வாதமிடுவதும் எனக்குப் பேரதிசயம் விளைத்தன. நமது ஐரோப்பா கண்டத்திலுள்ள கணித சாஸ்திரிகளிடத்தும் இந்த குணுதிசயங்களைக் கண்டிருக்கிறேன். ஆனல், கணித சாஸ்திரங்களுக்கும், ராஜ தந்திரங்களுக்கும் என்ன ஒற்றுமை என்பது எனக்கு இன்னும் விளங்கவில்லை. இந்த ஜனங்கள் கருத்தென்னவென்ருல், ஒரு சிறு வட்டத்துள் எத்தனை கோணமாத்திரைகள் (Degrees) இருக்கின்றனவோ, அத்தனை கோண மாத்திரைகளே ஒரு பெரு வட்டத்தினும் இருக்கின்றனவாதலால், இவ்வண்டகோள

விவகாரங்களைக் கையாடுவதற்கு, ஒரு சிறு கோள பதார்த்தத்தைக் கையில் வைத்துச் சுற்றி ஆட்டுவதற்கு வேண்டிய ஆற்றலைவிட அதிகம் வேண்டுவதில்லை யென்பதே. இந்தக் கருத்து அவர்களுக்கு இருப்பது மனித இயற்கைக்கு ஒத்ததே என்று நான் எண்ணிக்கொண்டேன். அற்ப அறிவுள்ள நாம் நம் அறிவுக்குஎட்டாததும் எட்டக்கூடாததுமான விஷயங்களைப்பற்றி விநோதமும் பிடிவாதமுமான அபிப்பிராயங்கள் கொள்வது, மனித இயற்கையேயன்றி வேறென்ன ?

இது நிற்க; இந்த ஜனங்களுக்கு இடையறுத மனக்கலக்கம் இருக்கிறது; அரைக்கணமேனும் மன அமைதி இருப்பதில்லை. இவர்கள் கலக்கத்திற்கான காரணங்கள், இவர்களைக் கலக்குவதுபோல மற்ற மனிதர்கள் மனங்களைக் கலக்குவனவல்ல. இவர்கள் மன அமைதியைக் கலக்கக் காரணமாய் நிற்பன: ஆகாய மண்டலங்களில் நிகழும் நிகழ்ச்சிகளே. உதாரணமாக, சூரியமண்டலம் இப்பூமண்டலத்தை நெருங்கி வந்துகொண்டேயிருப்பதால், நாளடைவில் இப்பூமியை விழுங்கிவிடுமே யென்றும்; சூரியனிடமிருந்து வெளிப்படும் அணுக்கள் முடிவில் அச்சூரியன் மீதே படிந்து அதன் ஒளியை மறைத்துப் பூமியை இருளில் அழுத்திவிடுமே யென்றும்; முன் ஒருமுறை இவ்வுலகை நெருங்கி வந்த வால்வெள்ளி இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்திருந்தால் இவ்வுலகம் அதன் உஷ்ணத்தால் பஸ்மீகரமாய்ப் போயிருக்குமே யென்றும்; அங்ஙனமே இனிவரும் வால்வெள்ளி அனேகமாய் இவ்வுலகைச் சுட்டெரிக்கும், அப்போது நாம் அனைவரும் அழிந்தொழிந்து போவோமே யென்றும் கவலைப்படுவார்கள். இன்னும் முப்பத்தொரு,

வருஷங்களுக்குள் அவ்வால் வெள்ளி வரவேண்டுமென்றும் கணக்கிட்டிருந்தார்கள். அந்த வால் வெள்ளி தனது சஞ்சாரத்தில், சூரியனுக்கு ஒரு குறித்த தூரத்தில் வருமானல், பழுக்கக் காய்ச்சிய இரும்பின் உஷ்ணத்தைவிட பதினயிரமடங்கு அதிக உஷ்ணத்தைப் பெறும். அப்படிச் சூரியனை நெருங்கத் தவறினாலும், பத்து லட்சத்துப் பதினன்குமைல் நீளமுள்ளதும், கனல்மயமானதுமான வாலோடு, அது தன் சஞ்சாரத்தில் பூமிக்கு நேரே ஒரு லட்சமைல் தூரத்தில் வருமானாலும் பூமி எரிந்து சாம்பலாய்விடுமே யென்று வருந்துவார்கள். வருவாய்க்கு இடமில்லாமல் ஒவ்வொரு நாளும் தன் ஒளியைச் செலவழித்துக்கொண்டு வரும் சூரியன் முடிவில் தன் ஒளியனைத்தையும் இழக்கும், அதனால் அதனிடமிருந்து ஒளிபெற்று வாழும் இவ்வுலகமும் மற்ற கிரகங்களும் அழிந்துவிடுமேயென்று கலங்குவார்கள்.

இவ்விதமான விஷயங்களையெல்லாம் சதா நினைத்து நினைத்து மனம் நைவதால் அவர்கள் படுக்கையிற் படுத்தால் நல்ல நித்திரை கொள்வதுமில்லை; உலக வாழ்க்கையின் இன்ப நலங்களில் மனம்பற்றிக் களிப்பதுமில்லை. அறிமுகமுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் முதல் விசாரணை சூரியபகவானின் யோக க்ஷேமங்களைப்பற்றியே. "நேற்று அஸ்தமித்தபோது சூரியன் எவ்வாறிருந்தது? இன்று உதித்தபோது எவ்வாறிருந்தது? வரும் வால் வெள்ளிக்குத் தப்ப ஏதாவது மார்க்கமுண்டா?" இவை போன்ற கேள்விகள்தாம் அவர்கள் முதன் முதல் கேட்பார்கள். அவர்கள் சம்பாஷணை, பேய்பிசாசங்களைப்பற்றிய பயங்கரமான கதைகளை ஆவலாய்க் கேட்பதும் இரவில் படுக்கையில் படுத்துக்கொண்டு அக்கதைகளை நினைத்து பயந்து உறக்கங்கொள்ளாது வருந்துவதுமாயிருக்கும் சிறுவர்கள் சம்பாஷணையைப் போலவேயிருக்கும்.

அத்தீவிலுள்ள ஸ்திரீகள் மிகவும் நிம்மதியாகக் காலங் கழிப்பவர்கள். தம் கணவர்களிடத்து அவமதிப்பும், கீழே யுள்ள பூமியிலிருந்து வரும் அன்னியர்களிடத்துப் பட்ச மும் உள்ளவர்கள். இவர்கள் கணவர்கள் எப்பொழுதும் சிந்தனையிலேயே ஆழ்ந்திருப்பதால் தம் மனைவியர் செயல் களைக் கவனிப்பதில்லை.

அந்தத் தீவு உலகத்திலுள்ள இடங்களிலெல்லாம் மிகவும் சிறந்த இனிய இடமென்றே எனக்குத் தோற்று கிறது ஆனால் அங்குள்ள ஸ்திரீகளும் பெண்களும் அதை விரும்புவதில்லை. விரும்பியவாறெல்லாம் செய்ய விடப்பட்டும், உண்டுடுத்துக் களிக்கவேண்டிய சௌகரி யங்களெல்லாம் கொடுக்கப்பட்டும், அவர்கள் பூமியி லிறங்கி வசிக்கவே விரும்புவது வழக்கம். ஆனால், அரசன் அனுமதியின்றி அவர்கள் பூமியில் இறங்க விடப்படுவ தில்லை. ஏனெனில் தக்க அந்தஸ்திலுள்ளவர்கள் தம் ஸ்திரீ களை பூமிக்குச் செல்லவிட்டால், திரும்பவும் அவர்களை அங்கிருந்து கொண்டுவருவது மிகவும் கஷ்டமாவதை அனுபவத்தில் பலமுறை கண்டுள்ளனர்.

ஒருமாத காலத்துக்குள் நான் அவர்கள் பாஷையில் கூடியவரையில் பழக்கமடைந்துவிட்டேன். அரசர் கேட் கும் அனேக கேள்விகளுக்குத் தெளிவாய் பதில்கூறவல்லவ னானேன். அரசர், நான் பிறந்த நாட்டின் சரித்திரம், மதம், நடையுடைபாவனை, ராஜாங்க நிர்வாகம், சட்ட திட் டங்கள் முதலியவற்றைப்பற்றி என்னை ஒன்றும் கேட்கவே யில்லை. அவர் கேள்விகளெல்லாம் கணித சாஸ்திரத்தைப் பற்றியனவே. அவைகளுக்கு நான் பதில் கூறுங் காலங்களில் தட்டுகிறவர்கள் இருவர் இருபுறத்திலுமிருந்து அவர் காதையும் வாயையும் தட்டியும் அவர் என் மறுமொழி களைக் கவனியாது அலட்சியமாயிருந்தார்.

# மூன்ரும் அத்தியாயம்

நான் அந்தத் தீவின் விசேஷங்களைச் சுற்றிப் பார்த்துவர விரும்பி, அரசரை அனுமதி கேட்டேன். அவர் மனம் உவந்து எனக்கு அனுமதி அளித்ததுமன்றி, எனது உபாத்தியாயரையும் என்னுடன் அனுப்பினர். நான் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள விரும்பியது, அத்தீவு இயங்கும் வகை எப்படியென்பதே. விரும்பியவாறே அறிந்துகொண்டேன். அதன் விவரத்தை இதை வாசிப்போர்க்கு என்னுல் இயன்றவளவு தெளிவாகக் கூறுகிறேன்:

மிதக்கும் அல்லது பறக்கும் அத்தீவு, வடிவத்தில் ஒரு சரியான வட்டமாயிருக்கிறது. அதன் சுற்றளவு 7837 கஜம் அல்லது நான்கரைமைல் உள்ளது; (அதாவது பதினுயிரம் ஏக்கர் விஸ்தீரணம் உடையது). கனம் முந்நூறு கஜம். கீழிருந்து பார்ப்பவர்களுக்குத் தோற்றும் அதன் அடிப்பாகம், இருநூறு கஜகனத்துக்கு ஒரே சமமான வைரப் பாறையாலமைந்துள்ளது. அதற்குமேற் பலவகைப்பட்ட தாவாரங்களும் அடுக்கடுக்காய் முறைப்படி அமைந்துள்ளன. அவைகளுக்கெல்லாம் மேலே பத்துப்பன்னிரண்டடி கனத்திற்குச் சாதாரண மண்தரையாயுள்ளது. மேற்பரப்புமட்டும் ஒரே சமமாயில்லாமல், சக்கரக் கோடியிலிருந்து (circumfrence) நடுவை நோக்கிச் சரிந்துள்ளது. அதனுல்தான், அத்தீவிற் பெய்யும் மழைநீர் முதலியன சிற்ருறுகளாய், தீவின் நடுப்பாகத்தை நாடி ஓடி, அங்குமிங்கும் வெட்டப்பட்டிருக்கும் நான்கு பெரிய குளங்களில்

விழுந்துவிடுகின்றன. ஒவ்வொரு குளமும், சுமார் அரை மைல் சுற்றளவுள்ளதாய், தீவின் மத்தியத்தினின்று இரு நூறு கஜதூரத்தில் அமைந்துள்ளது. இந்தக் குளங்களில் விழும் நீர், கரைகடந்த வெள்ளமாய்த் திரளாமல், ஒவ்வொரு நாளும் சூரியோஷ்ணத்தால் கவரப்படுகிறது. மேலும், மன்னவன் மனம் வைத்தால், அத்தீவை மேகமண்டலத்துக்குமேல் எழுப்பிவிடலாமாதலால், அவ்விதம் செய்து, மழை பனிகள் அதில் விழுந்து வெள்ளமாய்ப் பெருகுவதைத் தடுக்கவும் கூடும். எத்தகைய மேகமாயிருந்தாலும் இரண்டு மைல்களுக்குமேல் ஏறுதென்பது தத்துவ சாஸ்திரங்கள் துணிபு. அத்தேசத்தில் அவ்வளவு உயரத்துக்குமேல் மேகங்கள் ஒரு பொழுதும் எழுந்ததில்லை.

தீவின் மத்தியில் ஒரு சுரங்கம் உள்ளது. அதன் சுற்றளவு ஐம்பது கஜம்; ஆழம், வைரப்பாறையின் மேற்பரப்புச்குக் கீழ் நூறு கஜதூரம் சென்றுள்ளது. வான சாஸ்திரிகள் ஒரு பெரிய விமானத்தில் ஏறிக்கொண்டு அச்சுரங்கத்துள் செல்வது வழக்கம். அதனால், அதற்கு **ப்ளண்டோனு காக்னேல்** (அல்லது வான சாஸ்திரிகள் குகை) என்று பெயர். இந்தக் குகையில் இருபது விளக்குகள் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் வெளிச்சம் சுற்றிலும் உள்ள வைரச் சுவரில் பட்டுப் பிரதிபலிப்பதால், குகை முழுவதும் ஒளி நிறைந்து விளங்கும். அங்கே, தூரதிருஷ்டிக் கண்ணாடி, கோணமானி முதலிய பலவகைப்பட்ட வான சாஸ்திரக் கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால், இவைகளெல்லாவற்றையும் விட விசேஷமானதும், அத்தீவின் க்ஷேமத்துக்கு இன்றியமையாததுமான ஒரு வஸ்து உள்ளது. அதாவது,

சேணியன் நூனுழி அல்லது நாடாபோன்ற உருவமுள்ள, ஒரு பிரமாண்டமான காந்தக்கல்லே. அதன் நீளம் ஆறு கஜம். மிகவும் கனமான பாகத்தில் நீளத்துக்குமேல் மூன்று கஜ கனம் உள்ளது. இதற்கு நடுவே வைர அச்சாணி ஒன்று செல்கிறது. அந்த அச்சாணியால், அக் காந்தக்கல் வெகு சுலபமாக சுழலுமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. இதைச் சுற்றிலும் ஒரு வைரவளேயம் உள்ளது. அதன் கனம் நான்கடி; அகலமும் அவ்வளவே; சுற்றளவு பன்னிரண்டு கஜம். இந்த வளேயம், ஆறு கஜ உயரமுள்ள எட்டு வைரக்கால்களின் மீது செங்குத்தாக நிறுத்தப்பெற்றிருக்கிறது. வளேயத்தின் உட்புறத்தின் மத்தியில் பன்னிரண்டங்குல ஆழத்திற்குப் பள்ளமாய் வெட்டியுள்ளது. இந்தப் பள்ளத்தில்தான், காந்தக்கல்லின் இரு புறத்திலுமுள்ள அச்சுமுனேகள் பொருந்தி கல்லே விருப்பம்போல் சுற்றச் செய்கின்றன.

காந்தக்கல்லே எவ்வகையான பலத்தினுலும், அதன் இடம் விட்டுப் பெயர்க்க ஏலாது. ஏனெனில், அதைச் சுற்றியுள்ள வைரவளேயமும், அவ்வளேயத்தின் கால்களும், தனித்தனியே செய்து பொருத்தப்பட்டனவல்ல; தீவின் அடிப்பாகமான வைரப்பாறையைக் குடைந்து செய்யப் பட்டு, தீவின் அடிப்புறமும் அவையும் ஒன்ருயமைந் துள்ளன.

இந்தக் காந்தக்கல்லினுலேயே, அத்தீவு மேலே எழவும், கீழே தாழவும், ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குப்போகவும் வல்லதாகிறது. எவ்வாறெனில், அத்தீவின் அரசன் ஆக்கினே செல்லும் எல்லேயுள், அந்தக் காந்தக் கல்லின் ஒரு முனேக்கு இழுக்கும் சக்தியும், மறு முனேக்

குத் தள்ளும் சக்தியும் உண்டு. ஆதலால், இழுக்கும் முனை கீழும், தள்ளும் முனை மேலுமாகும்படி காந்தக்கல்லை நிறுத்தினால், தீவு கீழிறங்கும்; இழுக்கும் முனை மேலும் தள்ளும் முனை கீழுமாகும்படி நிறுத்தினால் தீவு மேலெழும்பும். காந்தக்கல் நேராய் நில்லாது சாய்ந்திருக்கும்பொழுது தீவின் இயக்கமும் அவ்வாறே இருக்கும்; ஏனெனில், காந்தத்தின் சக்தி அதன் இருப்பு எவ்விதமோ அவ்விதமே செல்லும்.




இந்த சாய்ந்த இயக்கத்தால், தீவை நினைத்த இடத்திற்குச் செலுத்த ஏலுகிறது. இதைத் தெளிவாக விளக்குவோம்: அ ஆ என்பது பல்னிபார்பியின் இராச்சியத்தின் ஊடே கிழித்த ஒரு கோடாக இருக்கட்டும். இ ஈ என்பது காந்தக்கல்லை குறிக்கட்டும். இதில் இ என்பது இழுக்கும் முனை. இது இ என்னும் இடத்திற்கு நேராய் நிற்கட்டும். இப்பொழுது காந்தக்கல்லை இ ஈ என்னும்

நிலைக்கு அதாவது இழுக்கும் முனை, மேலாகும்படிக் கொண்டுவந்தால் தீவு ஈ என்பதை நாடிச் சாய்ந்த திசையாகச் செல்லும். ஈ என்னுமிடத்தை யடையவும், கல்லை உ என்னும் இடத்தை நோக்கி இழுக்கும் முனை அமையுமாறு திருப்பினால், தீவு அவ்விடத்தை நாடிச் சாய்ந்த திசையாகவரும். அங்கு வந்ததும், கல்லை உ ஊ என்னும் நிலையில் தள்ளும் முனை கீழாகும்படி அமைத்தால், தீவு ஊ என்னும் இடத்தை நோக்கி உந்தப்படும். அங்கு அடைந்ததும், இழுக்கும் முனை எ என்னும் இடத்தை நோக்கித் திருப்பப்படுமானால் தீவு அவ்விடத்திற்கு வரும். அங்கு இழுக்கும் முனை மேலாம்படி, கல்லைச் செங்குத்தாக நிற்கச்செயதால், தீவு ஏ என்னும் இடத்தை நாடி எழும். இவ்விதமாகவே, கல்லைப் பலவகையாகத் திருப்புவதால் தீவை வேண்டியபடி இயக்கலாம்.

ஆனால் இங்கொன்று கவனிக்கப்பட வேண்டும். இந்தத் தீவின் அரசனது ஆளுகைக்குட்பட்ட நிலப்பரப்பின் எல்லைக்கப்பாலும், ஆகாயத்தில் நான்கு மைல் உயரத்துக்கு மேலும் இவ்வந்தரத்தீவு இயங்க இயலாது. இதற்கு, அங்குள்ள வானசாஸ்திரிகள் (இவர்கள் அந்தக் காந்தக் கல்லைப்பற்றி பெரிய பெரிய நூல்கள் எழுதியிருக்கிறார்கள்.), கூறும் காரணமாவது: காந்தக்கல்லின் சக்தி நான்குமைல் உயரத்துக்குமேலும், கடலில் கரையிலிருந்து பதினெட்டு மைல்களுக்கப்பாலும், அத்தீவின் அரசரது ஆளுகைசெல்லும் எல்லைக்கு வெளியிலும் இல்லையென்பதே.

காந்தக்கல்லின் இருமுனையும் பூமிக்கு ஓரே அளவான தூரத்தில் அமையும்படிச் செய்தால், தீவு இயங்காமல்

நின்றுவிடும். ஏனெனில், காந்தக்கல்லின் இழுக்கும் முனை யும் தள்ளும் முனையும் பூமிக்கு ஒரே அளவான தூரத்தில் இருப்பதால், தீவு ஒரேசமயத்தில் ஒரே அளவான பலத் துடன் மேலிழுக்கவும் கீழ் தள்ளவும் படுகிறது. ஆகவே எழும்பவும் முடியாமல் இறங்கவும் முடியாமல் ஒரு நிலை யாய் நின்றுவிடுகிறது.

காந்தக்கல்லின் பாதுகாப்பு சில வான சாஸ்திரிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இவர்கள், வானத்தில் உள்ள கிரகராசிகளைக் கவனிப்பதில் தமது காலத்தின் பெரும்பாகத்தைச் செலவிடுகின்றார்கள். அதற்காக அவர் கள் உபயோகப்படுத்தும் கருவிகள், நம் நாட்டிலுள்ள கருவிகளைக்காட்டிலும் சிறந்தனவாயிருக்கின்றன. அவர் கள் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் மூன்றடி நீளத்துக்குமே யில்லை. ஆயினும், அவைகள் நூறடி நீளமுள்ள நம் நாட்டு தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை விட, தெளிவாக நட்சத்திர மண்டலங்களைக் காட்டுகின்றன. ஆதலால், வான சாஸ்திர விஷயமாக ஐரோப்பா கண்டத்து வானசாஸ்திரிகள் கண்டு பிடித்துள்ள விஷயங்களைப் பார்க்கிலும் அவர்கள் அதிக மாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் நிலையான நட் சத்திரங்கள் ஆயிரம் இருப்பதாக அறிந்துள்ளார்கள்; நாம் அறிந்துள்ள அத்தகைய நட்சத்திரங்கள் அத்தொகைக்கு மூன்றில் ஒருபாகங்கூட இல்லை. இதையல்லாமல் செவ் வாயைச் சுற்றிச் சென்றுகொண்டிருக்கும் இரண்டு சிறு நட்சத்திரங்கள் இருப்பதாகவும், அவைகளுள் செவ்வாய்க் குச் சமீபத்திலுள்ளது அதன் குறுக்களவுக்குச் சரியாய் மூன்றுமடங்கான தூரத்திலும், மற்றது ஐந்து மடங்கான தூரத்திலும் இருப்பதாகவும், முன்னது செவ்வாயைப்

பத்துமணி நேரத்தில் ஒரு முறையும் பின்னது இருபத்தொன்றரை மணி நேரத்தில் ஒருமுறையும் சுற்றிவருவதாகவும், ஆதலால் அவைகள் ஒவ்வொன்றும் தோற்றுங் காலங்களின் சதுரப்பெருக்கங்களுக்குள்ள (Squares) வித்தியாசமும், செவ்வாயின் மத்தியிலிருந்து அதைதற்குள்ள தூரங்களின் முப்பெருக்கங்களுக்குள்ள (Cubes) வித்தியாசமும் எம்முறையில் அமைந்திருக்கிறதோ, அம்முறையிலேயே அமைந்துள்ள தெனவும் கண்டிருக்கிறார்கள். இந்த உண்மையால் அந்த நட்சத்திரங்கள் இரண்டும், மற்ற வான ராசிகளில் காணப்படும் வசீகரசக்தியின் நியமம் எதுவோ, அதே நியமத்துக்குட்பட்டுள்ளன வென்பதும் தெளிவாகிறது.

அவர்கள், வெவ்வேறு வகைப்பட்ட தொண்ணூற்று மூன்று வால் வெள்ளிகளிருப்பதாகக் கண்டு அவைகளின் காலங்களையும் மிகவும் நுட்பமாய்க் குறித்திருக்கிறார்கள். இது உண்மையாயிருக்குமானால் (அவர்கள் உண்மையென்று மிகவும் உறுதியாகவே சொல்கிறார்கள்), இதை உலகமறியச் செய்வது நல்லது. அதனால், வானசாஸ்திரத்தில் வால் வெள்ளிகளைப்பற்றி ஒழுங்கான அபிப்பிராய-முடிவில்லாத குறை நீங்கும். இதுநிற்க.

அந்தத்தீவின் அரசனது ஆளுகைக்குட்பட்ட நகரங்களில் எதிலாயினும், குடிகள் கலகம் முதலியன செய்தாலும், முறைப்படிச் செலுத்தவேண்டிய இறைக்கடன்களை செலுத்த மறுத்தாலும், அவர்களைத் தண்டிப்பதற்கு அரசனுக்கு இரண்டு வழிகளுண்டு. முதலாவதும் சாந்தமானதுமான தண்டனை, அக்குடிகள் வசிக்கும் நகரத்துக்குமேல் நேராகத் தீவை நிறுத்திவைப்பது. இதனால் சூரியவெளிச்சமும் மழையும் இன்றி ஜனங்கள் வியாதிமுதலிய தீங்குக

ளூற்று வருந்துவர். குற்றம் பெரிதாயிருந்தால், தீவி லிருந்து பெருங்கற்கள் கீழே தள்ளப்படும்; மலைக் குகைகள் முதலியவிடங்களிற் சென்றொளித்துக்கொண் டாலொழிய ஜனங்கள் இந்தக் கற்களால் மண்டை யுடைந்து மரணமுற வேண்டியதுதான். இந்த தண் டனையையும் பொருட்படுத்தாது அவர்கள் மேலும் மேலும் கலகம் விளைப்பார்களானால் அப்பொழுதுதான், இரண்டாவது தண்டனை கையாளப்படும். அதாவது, தீவையே அவர்கள் வசிக்கும் இடத்தின்மீது இறக்கிவிடு வது. இதனால், குடிகளேயன்றி அவர்கள் வீடு வாசல்கள் அனைத்தும் அடியோடு நாசமுறும். ஆனால் இந்தக் கடுந் தண்டனையை அரசன் கையாளுவது மிகவும் அரிது; விரும்புவதுமில்லை. அதைக் கையாளும்படி மந்திரிகள் போ திப்பதுமில்லை; ஏனென்றால், இவர்களுடைய வீடு வாசல் களெல்லாம் நிலத்திலேயே இருப்பதால் அவைகளும் அழிந்துவிடும். தீவு முழுவதும் அரசன் ஒருவனுக்கே உரிய வாசஸ்தலம்.

ஆனால், அத்தீவின் அரசர்கள் அந்த தண்டனையைச் செய்ய ஒருபொழுதும் முன் வராததற்குக் காரணம் மற் றும் ஒன்றுண்டு. அழிப்பதற்குக் கருதும் நகரத்தில், உயர்ந்த மலைகளேனும், கோபுரம் முதலிய கட்டிடங்களே னும் இருக்குமானால், தீவின் அடிப்பாகம் அவைகளின் மீது பட்டுச் சேதமாய்விடும். முன்னம் கூறியது போல, தீவின் அடிப்பாகம் இருநூறு கஜ கனமுள்ள ஓரே கற் பாறையாக அமைந்திருந்தாலும், மோதும் அதிர்ச்சியால் பிளவுறவும் கூடும். இவ்விஷயம் குடிகளுக்கும் தெரியும். ஆதலால், அவர்கள் தமது சுதந்தரங்களைப் பற்றியேனும்,

பாத்தியதைகளைப் பற்றியேனும் எவ்வளவு தூரம் அரசனுடன் வாதிடுவதென்பதை நன்கறிவார்கள். அரசனுக்குக் கோபம் அளவுகடந்து விட்டால் மட்டும், தன் கோபத்திற்குக் காரணமான நகர் மீது தீவை இறக்கச் செய்வான். அப்பொழுதுகூட, குடிகள் மீது இரக்கமுடையவனைப் போல, தீவை மெல்ல மெல்ல இறக்கச் சொல்வான்; உண்மையில் குடிகள்மீது இரக்கமல்ல; தீவின் அடிப்புறம் சேதமுறுமோ என்ற பயமே. அடிப்புறம் சேதமுற்றல் தீவுமுற்றுமே நிலை குலைந்து அழிந்து விடும் என்பதை, தத்துவசாஸ்திரிகள் அரசனுக்கு மனதிற் பதிய அறுவுறுத்தி யிருக்கிறார்கள்

அரசன், அவன் பட்டமகிஷி, மூத்தபுத்திரர்கள் இருவர் ஆகிய இவர்கள் தீவைவிட்டு ஒருபொழுதும் அகலக் கூடாதென்பது தேச சட்டம்.

# நான்காம் அத்தியாயம்.

---

நான், இந்தத் தீவில் கஷ்டப்படுத்தப்பட்டே னென்று சொல்லமுடியாது. ஆயினும், எல்லோரும் என்னை மிகவும் அலட்சியமாகவும் இழிவாகவும் கருதுவதாக, நான் எனக்குள் நினைத்துக்கொண்டே னென்பது மட்டும் உண்மை. ஏனெனில், அரசனாயினும் குடிகளாயினும், கணிதம், கானம் என்னும் இவ்விரு சாஸ்திரங்களைத் தவிர வேறு எவ்வகையான ஞானத்திலும் பிரியமுள்ளவர்களாகக் காணப்படவில்லை. அந்த இரண்டு சாஸ்திரங்களிலும் அவர்களுக்கு நான் மிகவும் தாழ்ந்தவனாக இருந்தபடியால் என்னை அவர்கள் மதிப்பதில்லை.

எனக்கோ, அந்தத் தீவிலுள்ள அதிசயங்களையெல்லாம் பார்த்துவிட்டபடியாலும், அந்த ஜனங்களோடிருந்து சலித்துப் போய்விட்டபடியாலும், அவ்விடத்தைவிட்டு நீங்குவதற்கு மிகவும் ஆவலிருந்தது. மேற்கூறிய அந்த இரண்டு சாஸ்திரங்களிலும் அவர்கள் மிகவும் வல்லவர்களென்பதில் தடையில்லை. அதுபற்றி அவர்களிடத்து எனக்கு மிகுந்த மதிப்புண்டு. எனக்கும் அந்த இரு சாஸ்திரங்களிற் சிறிது பயிற்சியுண்டு. ஆனால், அவர்கள் எப்பொழுதும் ஆழ்ந்தசிந்தனையில் அழுந்தியிருப்பதால் அவர்களோடு பழகுவது மிகவும் அருவருப்பாயிருந்தது. ஆதலால், நான் அங்கிருந்த இரண்டுமாத காலத்திலும், ஸ்திரீகள், வியாபாரிகள், தட்டுகிறவர்கள், அரண்மனைச் சேவகர்கள் ஆகிய இவர்களோடுதான் அதிகமாய்க் கலந்துபேசுவது. இதனால்,

நான் மிகவும் கேவலமாகக் கருதப்பட்டேன். ஆயினும் இந்த ஸ்திரீகள் முதலானவர்களிடம் உரையாடினால்தான் கேட்ட கேள்விகளுக்கு ஒழுங்கான பதில் கிடைக்கும்.

ராஜசபையில் ஒருபெரிய பிரபு இருந்தார். அவர் அரசனுக்கு நெருங்கிய உறவினர். அந்த ஒரு காரணத்தால் மட்டுமே, அவர் மரியாதையாக நடத்தப்பட்டு வந்தாராயினும் அங்குள்ளவர்களெல்லாரையும்விட மிகவும் மூடராகக் கருதப்பட்டார். அவர், அரசனுக்குப் பல மேலான காரியங்கள் செய்துள்ளவர்; நுட்ப புத்தியும் சிறந்த கல்வியும் உடையவர்; மிக்க கௌரவ குணமுடையவர்; ஆனால், ராக ஞானமுள்ளவரல்ல. பல சமயங்களில் அவர் தாளத்தில் தவறிவிட்டதாகக் காணப்பட்டார். மேலும், மிகவும் எளிய ஒரு கணிதத்தைக் கணிப்பதற்கு எவ்வளவு தெளிவாகக் கற்றுக்கொடுத்தாலும் அது அவர் மூளையில் ஏறுவது மிகவும் கஷ்டம். இவர் என்னிடத்தில் மிகவும் அன்புகாட்டிவந்தார்; அடிக்கடி என்னை வந்து பார்ப்பார்; ஐரோப்பா கண்டத்துச் சங்கதிகளைப்பற்றி ஆவலாய்க் கேட்பார்; நான் சென்றுள்ள பற்பல நாடுகளின் ஒழுக்க வழக்கங்கள், சட்டதிட்டங்கள், கல்வி முதலியவற்றைக் குறித்து விசாரிப்பார்; நான் கூறுபவைகளை, மிகவும் கவனமாய்க்கேட்பார்; அவைகளைப்பற்றித் தமக்குத் தோற்றும் அருமையான அபிப்பிராயங்களை வெளியிடுவார். அவருக்கு அருகில், தட்டுகிறவர்கள் இருவர் எப்பொழுதும் நிற்பார்கள். ஆனால், ராஜசபையிலும், கௌரவமுள்ளவர்கள் முன்னிலையிலும் தவிர அந்தத் தட்டுகிறவர்கள் உதவியை அவர் நாடுவதில்லை. நாங்கள் இருவரும் தனித்திருக்கும்போது அவர்களை அருகிலிருக்க வேண்டாமென்று அனுப்பிவிடுவார்.

எனக்காக இராஜனிடத்திற் பரிந்துபேசி, அத்தீவை விட்டுப்போக எனக்கு உத்தரவு கொடுக்கும்படிச் செய்ய வேண்டுமென்று, நான் இந்த மேதகையாரைக் கேட்டுக் கொண்டேன். அவர் அந்தப்படியே கேட்டார்; அரசன் உத்தரவையும் பெறச்செய்தார். ஆயினும், நான் அவ் விடத்தே விட்டு நீங்குவதில் அவருக்கு மிகவும் வருத்தமே. என்னை அங்கேயே இருக்கும்படி பலவிதத்திலும் வேண்டினர். நான் மிகவும் வந்தனத்துடன் அவர் வேண்டுகோளை மறுத்துவிட்டேன்.

பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி நான் அரசனிடத்திலும், அரச சபையினரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன். அரசர் சுமார் இருநூறு பவுன் பெறுமானமுள்ள பொருள் எனக்கு வெகுமதியாகக் கொடுத்தார். அவர் உறவினரும் எனது நண்பருமாகிய பெருந்தகையார், அரசர்கொடுத்த பொருளைப்போல் இரண்டு மடங்கான பொருள் எனக்கு நன்கொடையாகக் கொடுத்ததுமன்றி, ராஜாங்கத் தலைநகராகிய லகாடோவிலுள்ள தம் சிநேகிதர் ஒருவருக்கு சிபார்சு கடிதம் ஒன்றும் கொடுத்தார். அச்சமயம் தீவு ஒரு மலைக்குமேல் இரண்டு மைல் உயரத்தில் நின்றது. நான் முதன் முதல் எவ்வாறு அத்தீவில் ஏற்றப்பட்டேனோ அவ்விதமே இப்பொழுது என்னை இறக்கிவிட்டார்கள்.

பறக்குந்தீவின் அரசர் ஆளுகைக்குட்பட்ட நிலமெல்லாவற்றிற்கும் பால்னி பார்பி என்பது பொதுப்பெயர். அதன் தலைநகர்க்கு, நான்முன் கூறியதுபோல லகாடோ என்றுபெயர். ஸ்திரமான நிலத்தில் கால் வைக்கவும், எனக்குச் சிறிது மனதிருப்தி உண்டாயிற்று. அந்நாட்டாரைப்

போலவே நான் உடை உடுத்தியிருந்தமையாலும், அவர்கள் பாஷை எனக்குக் கூடியவரையில் நன்ருய்த் தெரியுமானதினுலும், நான் சிறிதும் கவலையின்றி ஊருக்குள் சென்றேன். வழிப்போக்கர்களைக்கொண்டு என் சினேகிதர் சிபார்சு கடிதம் யாருக்குக் கொடுத்தாரோ, அவர் வீட்டை அறிந்து சென்று, கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அவர் என்னை மிகவும் ஆதரவாக ஏற்றுக்கொண்டார். அவர் ஒருபெரிய பிரபு; மியூனுடி என்னும் பெயருடையவர்; தம் வீட்டிலேயே எனக்கு ஜாகை அமர்த்திக்கொடுத்து, என்னை உபசரித்துவந்தார் அவ்வூரில் இருந்த காலமெல்லாம், நான் அவர் வீட்டிலேயே ஜாகை வைத்துக்கொண்டிருந்தேன்.

நான், அவர் வீட்டுக்குச்சென்ற மறுநாள், அவர் என்னைத் தமது இரதத்தில் ஏற்றிக்கொண்டு நகரைச் சுற்றிக்காட்டினுர். அந் நகர், லண்டன் பட்டணத்திற் பாதி விஸ்தீரணமுள்ளது. ஆனுல் அதிலுள்ள வீடுகளெல்லாம் நூதனமாகக் கட்டப்பட்டிருக்கின்றன; பல, பழுது பார்க்கக்கூடாத நிலையில் இருந்தன. தெருவில் நடமாடும் ஜனங்கள் மிக வேகமாய் நடந்தார்கள்; கோர ரூபமுடையவாகளாய்க் காணப்பட்டார்கள்; அவர்கள் கண்களிமைக்கவில்லை; பெரும்பாலும் கந்தல் உடையே அணிந்திருந்தார்கள். நாங்கள் அந்நகரின் மதில் வாசல்களில் ஒன்றைக் கடந்து அடுத்துள்ள கிராமங்களைப் பாாத்துக்கொண்டு மூன்றமைல் தூரம் சென்ருேம் வழியில், வேலைக்காரர்கள் பலர், பலவகையான ஆயுதங்களைக்கொண்டு பூமியில் ஏதேதோ வேலைகள் செய்துகொண் டிருந்தார்கள். அவர்கள் செய்வதின்னதென்று எனக்கு விளங்கவில்லை. நிலம் நன்ருயிருந்ததாயினும், அதில் தானிய வர்க்கங்களேனும் புல்

பூண்டேனும் நான் காணவில்லை. நகரத்திலும் கிராமங்களி லும் நான் காணநேரிட்ட இந்த நூதனமான விஷயங்களைப் பற்றி எனக்கெழுந்த ஆச்சரியத்தை என்னால் அடக்க முடியவில்லை. ஆதலால், என்னை அழைத்துச் செல்பவரை நோக்கி, "வீதியிலும் வீதிப்புறத்திலும் பலர்கூடி மிக சுறு சுறுப்பாய் ஏதேதோ வேலை செய்கிறார்களே. அவர்கள் செய்வதென்ன? தயவுசெய்து விளக்கமாகத் தெரிவியுங் கள்" என்று கேட்டேன். ஏனெனில், அவர்கள் ஏதும் பிர யோஜனமுள்ள வேலைசெய்வதாக எனக்குத் தோன்ற வில்லை. அங்குள்ள நிலங்களைப்போல பாழ்பட்டநிலங்களும், அங்குள்ள வீடுகளைப்போல ஒழுங்கின்றிக் கட்டப்பெற்ற வீடுகளும், அவர்களைப்போல துக்கமும் துயரமும் காட்டு முகங்களும் நடைநொடிகளுமுடைய ஜனங்களும் நான் வேறெங்கும் கண்டதில்லை.

என்னை விருந்தேற்ற மியூனடி பிரபு, மிகவும் உயர்ந்த வகுப்பைச்சார்ந்தவர்; **லகாடோ** நகருக்குச் சிறிதுகாலம் தலைமை வகித்திருந்தார்; ஆனால் அவருக்குத் தலைமை வகிக்குந் திறம் போதாதென்று மந்திரிகள் சிலர் கூடி அவரை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டனர். ஆயினும், அரசர்மட் டும், அவருக்குப் போதுமான கல்வி யுணர்வில்லாவிட்டா லும், நல்லகுண முடையவரென்று கருதி, அவரைப் பரி வுடன் பார்த்துவந்தார்.

நான், அந் நாட்டாரின் நடை யுடைபாவனைகளைப் பற்றிக்குறை கூறியபோது, அவர், "நீர் இந்நாட்டினரைப் பற்றி அபிப்பிராயங் கூறுவதற்குப் போதுமான காலம் இங்கில்லை. உலகில் வெவ்வேறு வகைப்பட்ட நாட்டினர், வெவ்வேறு வகையான ஆசாரங்களுடையவர்களாயிருப்

பது இயல்புதான்'' என்று கூறினாரே யொழிய வேறுபதில் ஒன்றும் கூறவில்லை. ஆனால், நாங்கள் வீடு சென்று சேர்ந்த பிறகு ''எனது வீட்டின் அமைப்பு எப்படி இருக்கிறது? இதில் நீர் காணும் குற்றங்கள் என்ன? என் வீட்டுவேலைக் காரர்களின் நடையுடைகளில் உமக்கு என்ன குறைகள் தோற்றுகின்றன?'' என்று கேட்டார். இந்தக் கேள்விகள் அவர் கேட்டதால் ஒன்றும் பாதகமில்லை. ஏனெனில், அவர் வீடும், அவரைச் சார்ந்த மற்ற யாவும் மிகவும் ஒழுங்காகவும், சிறப்பாகவும், பழுதின்றியும் இருந்தன. நான் அவர் கேள்விகளுக்கு உத்தரமாக ''பிரபு, தங்கள் அறிவினாலும், உணர்வினாலும், தங்களுக்குள்ள செல்வாக்கினாலும், தங்களையடுத்துள்ள யாவற்றிலும்; மூடத்தனத்தாலும், ஏழ்மையாலும் பிறரை யடுத்துள்ளவற்றில் காணப்படும் குறைகள் காணப்படவில்லை'' என்றேன். அவர், ''நீர் என்னோடு, சுமார் இருபதுமைல் தூரத்திலுள்ள எனது கிராமத்துக்கு வந்தால் அங்கு நாம் இவ்வகையான விஷயங்களைப்பற்றித் தாராளமாய்ப் பேசிக் கொண்டிருக்க சாவகாச மிருக்கும்'' என்றார். ''தங்களிஷ்டம்போல் நடக்கக் காத்திருக்கின்றேன்'' என்று நான் ஒப்பினேன். ஆகவே மறுநாள் காலை நாங்கள் இருவரும் அங்கு செல்லப் புறப்பட்டோம்.

செல்லும் வழியில், குடியானவர்கள் நிலத்தைச் சீர்திருத்துவதற்குச் செய்யும் பலவகையான உபாயங்களையும் கவனிக்கும்படி அவர் கூறினார். எனக்கு அவர்கள் செய்வதொன்றும் விளங்கவில்லை. ஏனென்றால், சிற்சில இடங்களைத் தவிர்த்து, பெரும்பாலான இடங்களில், ஒரு புல்முனையாயினும், வேறு பயிர்களின் தோற்றமாவது

இல்லவே இல்லை. ஆனால் மூன்றுமணிநேரம் பிரயாணம் செய்தபிறகு, காட்சி முற்றும் மாறிவிட்டது. நாங்கள் ஓர் அழகான கிராமத்திற் பிரவேசித்தோம்; குடியானவர்களின் வீடுகள் சிறிது சிறிது இடைவிட்டு மிகவும் ஒழுங்காகக் கட்டப்பட்டிருந்தன; வேலி சூழ்ந்த நிலங்கள் பலவற்றில் பலவகையான பயிர்கள்—திராட்சை முதலியவைகள்—பயிரிடப்பட்டிருந்தன. அவ்விடத்தைப்போல மனோகரமான இடம் வேறெங்கும் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை. என் முகம் மலர்வதைப் பிரபு கண்டு, பெருமூச்சுவிட்டு, "இவ்விடத்திலிருந்துதான் எனது கிராமம். இங்கிருந்து என் கிராம வீட்டிற்குச் செல்லும்வரையில் இவ்விதமாகத் தான் இருக்கும். என் கிராமத்தை நான் இவ்வளவு சீர்கேடாக வைத்திருப்பதற்காக என் நாட்டார் என் மீது குறை கூறுகிறார்கள்; எல்லோரும் என் நிலத்தைப் பார்த்துத் தமது நிலத்தையும் அவ்வாறு கெடுத்துக்கொள்வார்களென்று நிந்திக்கிறார்கள். ஆனால் இதைப் பார்த்து இந்தப்படி செய்பவர்கள் வெகு சொற்பம். என்னைப்போலவே, வயது சென்றவர்களும், மனம்போன போக்குடையவர்களும், மனத்திட்பம் இல்லாதவர்களுமே என்னைப் பின்பற்றி நடப்பார்கள்" என்றார்.

கடைசியாக, நாங்கள் வீடுசென்று சேர்ந்தோம். அந்த வீடு மிகவும் உன்னதமாகவும், சிறந்த சிற்ப நூல் விதிகளுக்குச் சிறிதும் மாறுபடாமலும் கட்டப் பெற்றிருந்தது. தோட்டம், துரவு, முதலிய யாவும் முறைப்படி அமைந்திருந்தன. நான் ஒவ்வொன்றையும் கண்டபோது, எனக்கு உண்டான மகிழ்ச்சியை, மனமாரத் தெரிவித்தேன். அப்போதெல்லாம், என் நண்பர் நான் கூறியவற்றைச்

சிறிதும் கவனிக்கவில்லை. போஜனம் முடிந்தபிறகு மூன்றா வது மனிதர் எவரும் எம்மோடு இல்லாதிருந்த சமயத்தில் அவர் என்னை நோக்கி, மிகவும் வருத்தத்துடன் "இந்த வீடுவாசல்களை யெல்லாம் இடித்தெறிந்துவிட்டுத் தற்கால நவீன முறைப்படி அமைக்கும்படி நேர்ந்தாலும் நேரும். என் பயிர் முதலியவைகளையும் அடியோடு அழித்துவிட்டு, புதிய முறைப்படி பயிரிடவேண்டிவரும். எனது குடியான வர்களுக்கும் அவ்விதமே செய்யக் கட்டளை கொடுக்கும் படியாகும். இல்லாவிட்டால், பாவியென்றும், மூடனென் றும், பைத்தியம் பிடித்தவனென்றும் பலரால் தூற்றப் படுவதுமன்றி, அரசர் மனஸ்தாபத்திற்கு ஆளானாலும் ஆவேன். இங்கே சில விஷயங்கள் நடந்தன. அவைகளைப் பற்றி அவர்கள் உமக்குச் சொல்லவில்லைபோ லிருக்கிறது. அவர்களுக்குள்ள சிந்தனையில் இங்கு நடந்தவைகளைக் கவ னிக்க அவர்களுக்கு அவகாசம் இருந்திராது. ஆயினும், நான் அவைகளை உமக்குச் சொல்கிறேன். பிறகு, நீர் என்னை யும் என்னுடையவைகளையும் இவ்வளவு மதிப்பாகக் கருத மாட்டீர்" என்று பின்வருமாறு கூறலாயினர்:—

"சுமார் நாற்பது வருஷங்களுக்குமுன், இங்கிருந்த சிலர், காரியமாகவோ, விநோதார்த்தமாக லபுடாவுக்குச் சென்றார்கள். அங்கு ஐந்துமாதகாலம தங்கியிருந்து, சிறிது கணிதசாஸ்திரம் கற்றுக்கொண்டு நூதன நூதன மான அபிப்பிராயங்களோடு திரும்பிவந்தார்கள். அப்பால், இவர்களுக்கு இந்நாட்டின் ஆசார அநுஷ்டானங்கள் ஒன் றும் பிடிக்கவில்லை. ஆதலால், சித்திரவித்தைகள், தத்துவ சாஸ்திரங்கள், பாஷையமைதி, யந்திர அமைப்புகள் யாவற் றையும் மாற்றி நவீன முறையில் அமைக்க ஏற்பாடுசெய்

தார்கள். இதற்காக, லகாடோவில் ஒரு சங்கம் ஸ்தாபிக்க, அரசனிடமிருந்து அனுமதிபெற்றார்கள். அந்தப் பைத்தியம் பலரையும் பற்றியது. அதனால் என்ன வாயிற்றென்றால், இந்த ராஜ்யத்தில் அவ்விதமான சங்கமொன்று இல்லாத பட்டணம் ஒன்றுகூட இல்லை. இந்தச் சங்கங்களைச் சார்ந்த கல்லூரிகளில், நிபுணர்கள் பலர், விவசாயம், சிற்பம் முதலியவைகளைப் புதியமுறையிற் புதுவகையான ஆயுதங்களை உபயோகித்துக் கற்றுக்கொடுக்கிறார்கள். இம்முறையால், பத்தாள்கள் வேலையை ஒருவன் செய்யலாமாம்; ஒரு அரண்மனையை ஒருவாரத்தில் என்றும் பழுதுறா வகையான சாமக்கிரியைகளைக்கொண்டு கட்டிவிடலாமாம்; உலகத்துள்ள கனிவர்க்கங்களெல்லாம், நினைத்தகாலத்தில் பழுக்கும்படியும், இப்பொழுது விளைவதைவிட நூறுமடங்கு அதிகமாக விளையும்படியும் செய்யலாமாம். இவைகளுக்குள், ஒரே ஒரு அசௌகரியம் என்னவெனில், இம்முறைகள் ஒன்றும் இன்னும் முற்றுப்பெறவில்லை யென்பதே. ஆதலால், அதற்கிடையில், நாடுமுழுவதும் மிகவும் சீர்கேடாயிருக்கிறது; வீடுகளெல்லாம் பாழாக இருக்கின்றன; ஜனங்களெல்லாம் சரியான ஊண் உடையின்றியிருக்கிறார்கள். இவைகளால், அவர்கள் மனந்தளராமல், ஐம்பது பங்கு அதிக ஊக்கத்தோடும் உழைப்போடும் தங்கள் முறைகளை முற்றுவிப்பதில் கருத்தூன்றி யிருக்கிறார்கள். என்மட்டில், எனக்கு அவ்வளவு ஊக்கமின்மையால் நான் பழையகாலத்து வழக்கப்படி காலந்தள்ளி வருகிறேன்; என் முன்னோர்கள் கட்டிய வீட்டில் வசித்துக்கொண்டு அவர்கள் காலங்கழித்தது போலவே காலங்கழிக்கிறேன். வேறு சில கனவான்களும் என்னைப்போலவே இருந்துவரு

கிறார்கள். ஆனால், எங்களை எல்லோரும் ஏளனம்செய்வதுடன், நாங்கள் கல்வியபிவிருத்திக்குக் குறுக்கே நிற்கும் பாதகர்கள் என்றும், தேசநன்மையைக் கருதாது எமது சௌகரியத்தையே கருதும் சோம்பேறிகளெனவும் இழித்துரைக்கப்படுகின்றோம்"

இவ்வாறு உரைத்து, அவர் மீட்டும் என்னை அந்தச் சங்கங்களுக்குக் கொண்டுபோய் அவைகளில் நடப்பனவற்றை நேரிற் காட்டக் கருதியிருப்பதாகவும், அதனால் அவைகளைப்பற்றி யாதும் சொல்லவில்லையென்றும் கூறினார். அவர் ஒரு மலையின் பக்கத்திலிருந்த பாழுங் கட்டிடம் ஒன்றை எனக்குக் காட்டி, "இந்தக் கட்டிடத்திற்கு அரைமைல் தூரத்தில் என் யந்திரம் ஒன்றிருந்தது. அது ஒரு பெரிய ஆற்றின் ஓட்டத்தால் இயக்கப்பட்டது; எனக்கும் என் குடியானவர்களுக்கும் போதுமானதாய்ச், சௌகரியமுள்ளதா யிருந்தது. ஏழு வருஷங்களுக்கு முன்னம் இந்தச் சங்கத்தார் சிலர் வந்து தமது நூதன முறைபால் இம்மலைக்கருகில் ஒரு யந்திரம் ஸ்தாபித்து மலைமீது ஒரு கால்வாய் வெட்டி அதில் தண்ணீரை யேற்றி விழச் செய்து அதனால் அவ்வியந்திரத்தை நடத்தப்போவதாகவும், அதற்காக என் யந்திர ஸ்தாபனத்தை இடித்துவிட வேண்டுமென்றும் கூறினார்கள். அப்பொழுது ராஜ தயவு எனக்கு இல்லாமையாலும், என் சிநேகிதர்கள் வற்புறுத்தியதாலும், அவர்கள் விருப்பத்திற்கு இணங்கிவிட்டேன். உடனே அவர்கள் என் யந்திரஸ்தாபனத்தை அழித்துவிட்டு இம்மலையடியில் ஒன்று ஸ்தாபிக்க இரண்டு வருஷகாலமாய் நூறு ஆட்களை வைத்துக்கொண்டு ஏதேதோ வேலை செய்தார்கள். முடிவில் ஒன்றும் பிரயோஜனப்

படவில்லை அது முதல் அவர்கள் தம் முயற்சி பயன்படா மைக்குக் காரணம் நான்தான் என்று என்மீது குறைகூறி என்னை இகழ்ந்து வருகிறார்கள்'' என்றார்.

நாங்கள் சிலநாள் கிராமத்திலிருந்து, பிறகு நகரம் போய்ச் சேர்ந்தோம். என் நண்பர், தமக்குச் சங்கங்களில் நல்ல பேரில்லாமையால், என்னோடு தாம் அங்கு வருவ திற்கு மனமில்லாதவராய், தமது சினேகிதர் ஒருவரோடு என்னை அனுப்பினார். அந்த சினேகிதரிடத்தில் நான் நூதன முறைகளை அறிந்து கொள்வதில் மிகவும் பிரியமும் எளிதில் எதையும் நம்பும் சுபாவமு முடையவனென்று கூறினார் அவர் கூறியது மெய்யே. சிறுவயதில், நூதன முறைகள் கண்டு பிடிப்பதில் நான் மிகவும் முயற்சி செய்ததுண்டு.

# ஐந்தாம் அத்தியாயம்

---

நான், முதன் முதல் லகாடோ நகரத்துச் சங்கத்திற்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டேன். இந்தச் சங்கம் ஒரே கட்டிடமாயில்லை. ஒரு வீதியின் இருபுறத்திலும் தொடர்ச்சியான பலவீடுகளாய் அமைந்திருந்தது. அந்த வீடுகள் முன்னம் குடியின்றி பாழடைந்திருந்தனவாம். அவைகளை சங்கத்தார் விலைக்கு வாங்கித் தம் சங்கற்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டனர்.

சங்கத்துப் பாதுகாவலன் என்னை அன்பாய் வரவேற்றான். சங்கம் முழுவதையும் பார்ப்பதற்கு எனக்குப் பல நாட்கள் சென்றன. அதில் உள்ள ஒவ்வொரு அறைகளிலும் நவீன முறைகளைக் கண்டுபிடிக்க முயலும் ஒருவன் அல்லது பலர் இருந்தனர். நான் பார்வையிட்ட அறைகள் ஐந்நூற்றுக்குக் குறையா.

முதல் அறையில் நான் ஒருவனைக்கண்டேன். அவன் முகமும் கரங்களும் சரியாயிருந்தன; தாடியும் மீசையும் அடர்ந்து வளர்ந்திருந்தன; உடம்பிற் பல விடங்களில் சுடுகாயங்கள் காணப்பட்டன. அவன் இடுப்பில் அணிந்திருந்த வஸ்திரம், மேல் அணிந்திருந்த குடுத்துணி, உடம்பின் தோல் யாவும் ஒரே நிறமா யிருந்தன. அவன், ஒரு வகையான செடியிலிருந்து சூரிய கிரணங்களைக் கிரகித்து அவைகளை நன்றாய் மூடிய சிறு புட்டிகளில் அடைத்து வைத்துக்கொண்டு, வெயில் இல்லாத காலத்தில் வெயில்

வேண்டுமானால் அந்தச் சிறு புட்டிகளைத் திறந்து சூரிய கிரணங்களை வெளியில் விட்டு வெயில் உண்டாக்கக் கூடுமென்று யூகத்தாலறிந்து, அதை அனுபவத்திற்குக் கொண்டு வருவதற்காக எட்டு வருஷகாலமாக உழைத்துக் கொண்டிருக்கிறானாம். அவன், இன்னும் எட்டுவருஷ காலத்தில் பட்டணத்துத் தலைவர் தோட்டங்களுக்குக் கூடிய வரையில் சகாயமான விலைக்குத் தான் சூரிய கிரணங்கள் கொடுக்க முடியுமென்றும், ஆனால் தன்னிடத்தில் அச்சமயம் சரக்கு மிகுதியாயில்லை யெனவும், அவ்வருஷம் அச் செடி மிகவும் கிராக்கியா யிருப்பதாகவும் கூறி, தனக்கு இத்தகைய குயுக்தியான வேலைகளில் மேலும் மேலும் ஊக்கம் உண்டாக்க ஏதாவது பொருளுதவி செய்யுமாறு என்னை வேண்டினான். இந்தச் சங்கத்தில் வேலை செய்பவர்கள் தம்மைப்பார்க்க வருகிறவர்களிடம் இவ்வாறு பிச்சை கேட்பது வழக்கமென்று மியுனடி பிரபுவுக்கு நன்றாய்த் தெரியுமாகையால், அவர் என்னை இவ்விடத்திற்கு அனுப்பும்போதே என்னிடம் சிறிது பணம் கொடுத்திருந்தார். அந்தப் பணத்திலிருந்து சொற்பத்தொகை நான் இந்தச் சூரியகிரண வியாபாரிக்கு இனமாகக் கொடுத்தேன்.

பிறகு, நான் அவ்விடம் விட்டு நீங்கி மற்றோர் அறைக்குப் போனேன். அதன் வாசலை அணுகவும் சகிக்கக் கூடாத ஒரு துர்க்கந்தம் வீசியதால், நான் முன்வைத்த காலைப் பின் வைத்துத் திரும்பினேன். அப்பொழுது எனக்கு வழிகாட்டியாக வந்தவர், என்னைத் திரும்பிச் செல்லவொட்டாமல் தடுத்து, "வேண்டாம், வந்த நீர் திரும்பிப்போனால் இவர்கள் தம்மை அவமதித்ததாகக் கருதி வன்மங்காட்டுவார்கள். ஆதலால் துர்க்கந்தத்தைச் சகித்

துக்கொண்டு உள்சென்று பார்த்து வருவதே நலம், நாற்றம் பொறுக்காமல் மூக்கைப்பிடிப்பது கூடத் தவருகும்" என்ருர். அதன்மேல் நான் அவ்வறைக்குட்செல்ல உடன் பட்டு சென்றேன்.

இந்த அறையுள்ளிருந்த நிபுணர் சங்கத்தின் பழைய மாணவர். அவர் முகமும் தாடியும் வெளிறிய மஞ்சள்நிறமா யிருந்தன. என்னோடு வந்தவர், என்னைப்பற்றி அவருக்குக் கூறவும் அவர் என்னைக்கட்டி அணைத்தார். இந்தமரியாதை அவர் செய்யாதிருந்தால் உத்தமமாயிருந்திருக்கும்.

அவரை விட்டகன்று நாங்கள் மற்ருெருவரைப் பார்க்கச்சென்ருேம். இவர், பனிக்கட்டியைத் துப்பாக்கி மருந்தாகப் பொடிசெய்ய முயற்சித்துக்கொண்டிருந்தார். நெருப்பைத் தகடாசத் தட்டக்கூடு மென்பதைப்பற்றி இவர் ஒரு நூல் எழுதியுள்ளார். அதை என்னிடம் காட்டினர். அதனை அச்சிடுவதாகக் கருதியிருக்கிருர்.

மற்ருெரு புத்தி சாதுரியமுள்ள சிற்பியைப் பார்த்தோம். இவர், கட்டிடங்களை அஸ்திவாரத்திலிருந்து உச்சிக்குக் கட்டிக்கொண்டு போகும் வழக்கத்தைவிட்டு, உச்சியிலிருந்து ஆரம்பித்து அஸ்திவாரத்திற்குக் கட்டிக்கொண்டு வருவதற்கான முறைகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருந்தார். இங்ஙனம் கட்டுவது சாத்தியமானதே என்று எனக்கு விளக்கிக்காட்டியது மன்றி, உதாரணமாக, சிலந்தியும், தேனீயும் கூடுகட்டும் விதத்தை உற்றுநோக்கும்படியும் கூறினர்

கண்களிரண்டும் குருடுபட்ட மற்ருெருவரைப் பார்த்தோம். இவரிடத்தில் வேறு பல குருடர்கள் தொழில் பயின்று கொண்டிருந்தனர். இவர்கள் வேலை, சித்திரக்

காரர்களுக்கு வர்ணங்கள் கலந்து கொடுப்பது. ஒவ்வொரு வர்ணத்தின் நிறத்தையும் ஸ்பரிசத்தும் முகந்தும் அறிந்துகொள்ள அவர்கள் ஆசிரியர் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார்

மற்ருெரு அறையில் ஒரு நிபுணர், பன்றிகளைக் கொண்டு நிலத்தை உழுவதற்கு ஓர் உபாயங் கண்டுபிடித்திருந்தார். அதில் எனக்கு மிகவும் பிரியமாயிருந்தது. அந்த உபாயமாவது: ஓர் ஏக்கர் நிலத்தில் அவ்வாறங்குல தூரத்தில், எட்டங்குல ஆழத்தில், பன்றிகளுக்கு ஆகாரமாகக் கூடிய கஷ்கொட்டை, பேரீச்சங்கொட்டை முதலிய விதைகளை விதைத்துவிடுவது. பிறகு ஐந்நூறு அறுநூறு பன்றிகளை அந்த நிலத்தில் விட்டால், இவைகள், பூமிக்குள் புதைபட்டிருக்கும் விதைகளைத் தின்னுவதற்கு நிலம் முழுவதையும் குத்திக் கிளறிவிடும். இதனுல் நிலம் உழுபட்டுப் போவதுமன்றி, பன்றிகளின் சாணமும் நிலத்துக்கு எருவாக உபயோகப்பட்டுவிடுகிறது. ஆனுல், இம்முறையைப் பரீட்சித்துப் பார்த்ததில், அது மிகவும் தொந்தரவு கொடுப்பதாயும் அதிகச் செலவுள்ளதாயும் இருந்தது. பலனும் ஏற்படவில்லை ஆயினும், இம்முறையை இன்னும் விருத்தி செய்து உபயோகத்துக்குக் கொண்டுவர இடமிருக்கிறதென்று நம்பப்படுகிறது.

நான் மற்ருேர் அறைக்குப் போனேன். அங்கே சுவர் மேற்றளம் எங்கும் சிலம்பி வலைகள் தொங்கிக்கொண்டிருந்தன. அதனுள் வேலைசெய்யும் நிபுணர் ஒருவர்மட்டும் உள்ளே போகவர இடமிருந்தது. நான் அறைவாசலை நெருங்கவும் அவர் பதைபதைத்து "ஐயா, ஐயா, அங்குதானே நில்லும். வலைகளைக் கலைத்துவிடாதீர்" என்ருர். நான் திடுக்

கிட்டு நின்றேன். பிறகு அவர் என்னிடம் வந்து மிகவும் வருத்தத்துடன் "என்ன பாருங்கள், உலகத்தார் தெரியாத் தனத்தினால் இத்தனை காலமாக, பட்டுத்துணிக்குப் பட்டுப் பூச்சிகளையே உபயோகித்து வந்திருக்கின்றனரே! என்ன அறியாமை! வீட்டிலேயே வேண்டுமளவுவளாக்கக் கூடிய இந்த சிலம்பிப் பூச்சிகள் இருக்கும்போது பட்டுப்பூச்சிகள் என்னத்திற்கு? இந்தச் சிலம்பிப் பூச்சிகள், நூற்பதற்கு மட்டுமன்று, நெய்வதற்கும் அறிந்திருக்கின்றனவாதலால் பட்டுப்பூச்சிகளைவிட சிறந்தனவாயிற்றே" என்று கூறிச் சிலம்பிகளை உபயோகப்படுத்துவதால், சாயம்போடுவதால் ஏற்படும் செலவு முற்றும் இல்லாதொழிந்துவிடும் என்றும் உரைத்து விதவிதமான அழகிய நிறங்களுடைய பலவகை ஈக்களை எனக்குக் காட்டினார். இந்த ஈக்களை சிலம்பிகளுக்கு இரையாகக் கொடுப்பதால் அவைகள் பின்னும் வலைகளில் அவைகள் புசித்த ஈக்களின் சாயம் இறங்கிவிடுமாம். இந்த ஈக்களுக்கு, பிசுபிசுப்பான பதார்த்தங்களை இரைகொடுக்க முயற்சித்துக்கொண்டிருப்பதாகவும், அந்த முயற்சி நிறைவேறிவிட்டால், ஈக்களின் சத்தாக வரும் சிலம்பி நூல்களும், ஈக்கள் ஆகாரத்தின் தன்மையால் கெட்டியாயும் உறுதியாயுமிருக்கும், அப்பால் யார் யாருக்கு எவ்வெவ்வகையான நிறத்தில் ஆடை வேண்டுமானாலும் எளிதில் கொடுக்கக்கூடும் என்றும் சொன்னார்.

நான் இன்னும் உள்ள மற்ற அறைகள் பலவற்றிற்குச் சென்றேன். அங்கங்கே கண்ட நூதன விஷயங்கள் பல உண்டு. ஆனால் அவைகளையெல்லாம் விரித்துக் கூறினால் படிப்போர் மனம் சலிக்கும் என்றஞ்சி கூறாது விடுகின்றேன். விஷயங்களைச் சுருங்கச் சொல்லவேண்டுமென்பதே எனது கோட்பாடு.

ஆனால், நான் மேற்கூறியவைகளெல்லாம், சங்கத்தின் ஒரு பகுதியில் நடப்பனவாதலால், மற்றொரு பகுதியில் நடப்பவைகளுட் சிலவற்றையும் சொல்கிறேன். இப்பகுதியில் சிந்தனையில் வல்ல நிபுணர்கள் பலர் இருந்தனர். இவர்களைப்பற்றி ஏதும் சொல்வதற்கு முன் முற்பகுதியில் நான் பார்த்த மற்றொரு மேதாவியரைப்பற்றிச் சிறிது கூறுகின்றேன். இவர் மனிதவாழ்க்கையைச் சீர்திருத்துவதற்காக முப்பது வருஷங்களாக உழைத்துவருவதாகச் சொன்னார். இவரோடு சுமார் ஐம்பது மனிதர்களுக்குக் குறையாமல் வேலைசெய்துகொண் டிருக்கின்றனர்; சிலர் காற்றைக் கடினப்படுத்தி, கையால் எடுக்க விடுக்கக்கூடிய பொருளாகச் செய்ய முயன்றுகொண்டிருந்தனர்; சிலர் சலவைக் கற்களைப் பதப்படுத்தி, மெத்தை தலையணைகளுக்கு உபயோகப்படுத்த முயன்றுகொண்டிருந்தனர்.

இதுநிற்க; நான் முன் கூறிய சிந்தனையில் வல்லவர்கள் இருக்கும் பகுதியில் ஒரு சாஸ்திரியாரைப் பார்த்தேன். அவர் ஒரு பெரிய அறையில் சுமார் நாற்பது மாணவர்களுடன் இருந்தார். அவருக்கருகில் அவ்வறையின் அகல நீளத்தை அடைத்துக்கொண்டு ஒரு பெரிய சட்டம் இருந்தது. நான் அதைப் பார்த்துக்கொண் டிருந்தபோது சாஸ்திரியார் என்னை நோக்கி, "என்ன பார்க்கிறீர்? உமக்கு இந்தச் சட்டத்தின் பிரயோஜனம் என்னவென்று விளங்கவில்லை போலிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்கிறேன் கேளும்: இதனால் உலகத்துக்கு உண்டாகப்போகும் நன்மை இவ்வளவென்று சொல்லமுடியாது. இவ்வளவு அருமையான யோசனை இதுவரையில் எந்த மனிதன் மூளையிலும் நுழைந்ததில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில்

இதன் உபயோகத்தை எல்லோரும் அறிவார்கள். கணிதம்' பூகோளம், பூதபௌதிகம் முதலிய பல சாஸ்திரங்களில் ஒவ்வொன்றைத் தானும் கற்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள். ஆனால் என்னுடைய முறையால் அந்த சிரமம் குறைந்துவிடும்; மிகவும் மந்த புத்தியுள்ளவனும், சொற்பச்செலவிலும், சிறிது திரேகப் பிரயாசையாலும், தத்துவசாஸ்திரம், கணிதசாஸ்திரம், ஞானசாஸ்திரம் முதலிய நூல்களை, கல்வி அல்லது அறிவின் உதவியின்றி எழுதக்கூடும்'' என்றார். பிறகு என்னை அந்தச் சட்டத்தருகே அழைத்துக்கொண்டு போனார். அதன் இருபுறத்திலும் அவருடைய மாணவர்கள் வரிசையாய் நின்றார்கள். சட்டம் இருபதடி நீளம் இருபதடி அகலமுள்ளதாயிருந்தது. அதன் நான்குபுறத்திற்கும் மத்தியில் உள்ள பாகம் அனேக சிறுசிறு சதுர மரத்துண்டுகளால் நிரப்பப்பட்டிருந்தது. அம்மரத்துண்டுகள் அனைத்தும் மெல்லிய கம்பிகளால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு துண்டினது ஆறு சதுரமுகங்களிலும் கடுதாசி ஒட்டப்பட்டு, அக்கடுதாசிகளில் அவர்கள் பாஷையிலுள்ள வார்த்தைகள் யாவும் தத்தம் காலங்காட்டும் விகுதி, திணை விகுதி முதலிய இலக்கண வேறுபாடுகளோடு எழுதப்பட்டிருந்தன. ஆனால் அவைகள் ஒரு முறையிலில்லை. நான் இதைப் பார்த்துக்கொண்டிருக்க, அந்த நிபுணர் என்னைநோக்கி, "ஐயா யந்திரத்தை இடக்குகிறேன். கவனமாய்ப் பாரும்'' என்று சொல்லி, தமது மாணவர்களுக்குச் சமிக்கைசெய்தார். உடனே அம்மாணவர்கள் சட்டத்தின் ஓரங்களில் அமைக்கப்பட்டிருந்த நாற்பது இருப்புக் கைப்பிடிகளை ஆளுக்

கொன்றாகப் பிடித்துத் திருப்பினார்கள். அக்கணமே, பதங்கள் எழுதப்பட்ட மரத்துண்டுகள் அனைத்தும் நிலைபிறழ்ந்து, முன்னிருந்த பதங்களின் வேறான பல பதங்களைக் காட்டின. பிறகு, நிபுணர் சட்டத்தின் மேற்பரப்பில் தோன்றிய வரிகளை மெல்ல வாசிக்கும்படி முப்பத்தாறு மாணவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அங்ஙனமே வாசித்து வந்தபோது இரண்டு மூன்று வார்த்தைகள்கூடி ஒரு வாக்கியத்தின் பகுதியாகும்போலிருந்தால் அவைகளைக் கடிதத்தில் எழுதிக்கொள்ளும்படி எஞ்சியிருந்த நான்கு மாணவர்களுக்கு உத்தரவுசெய்தார். எல்லா வரிகளையும் முடித்து, எழுதவேண்டியவைகளை யெல்லாம் எழுதியான பிறகு, மற்றும் ஒருமுறை முன்போலவே கைப்பிடிகள் திருப்பப்பட்டன ; வரிகள் வாசிக்கப்பெற்றன ; வார்த்தைகள் எழுதப் பெற்றன. இங்ஙனமே மூன்று நான்குமுறை நடந்தது. ஒவ்வொரு முறையிலும் பதங்கள் பற்பலவாறு மாறுபட்டு வரும்படி, யந்திரம் அமைந்திருந்தது.

மாணவர்கள் ஒவ்வொருநாளும் ஆறுமணி நேரம் இந்த வேலையில் முனைந்திருப்பார்கள். இவர்கள் இங்ஙனம் யந்திரத்தைத் திருப்பி அது காட்டிய குறை வாக்கியங்களை எழுதிப் புஸ்தகம் புஸ்தகமாய் வைத்திருந்தார்கள். அத்தகைய புஸ்தகங்கள் அநேக மிருந்தன. அவைகளை யெல்லாம் நிபுணர் எனக்குக் காட்டி "இந்தப் புஸ்தகங்களிலுள்ள குறை வாக்கியங்களை,சேர்க்கவேண்டிய முறைப்படி சேர்த்தால், சகலவிதமான சாஸ்திரங்களும் ஏற்பட்டுவிடும். ஆனால், யந்திரம் இது ஒன்றுமட்டும் போதாது. ஜனங்கள் திரவியம் சேகரித்து லகாடோ

நகரத்தில் மட்டும் ஐந்நூறு யந்திரங்கள் ஸ்தாபிப்பார்களானால், அவைகளால் தெரியவரும் வாக்கியங்கள் எல்லாவற்றையும் திரட்டி அந்தந்த சாஸ்திரங்களைச் செய்து கொள்ளலாம்" என்றார்.

நான் இந்த மேதாவியர் புத்தி நுட்பத்தை வியந்து, "ஐயா, ஏதோ நற்காலமிருந்து நான் என் ஜன்ம தேசத்திற்குச் சென்றால், இந்த ஆச்சரியமான யந்திரத்தைக் கண்டுபிடித்தவர் நீரே என்பதைப் பிரசித்தப்படுத்துவேன்" என்று சொல்லி, அந்த யந்திரத்தின் அமைப்பையும் இயக்கும் முறையையும் கடிதத்தில் குறித்துக்கொள்ள உத்தரவு பெற்றுக் குறித்துக்கொண்டேன். மீட்டும் நான் அவரை நோக்கி, "ஐயா, நாகரீகமுள்ள எங்கள் ஐரோப்பாகண்டத்தில் பல மேதாவியர் பலவகையானவைகளைக் கண்டு பிடிப்பதுண்டு. ஆனால் ஒருவர் கண்டுபிடித்ததை மற்றொருவர் திருடிக்கொண்டு, தாம் கண்டு பிடித்ததாகக் கூறுவது வழக்கம் இதனால் என்ன ஆகிற தென்றால் உண்மையில் கண்டு பிடித்தவர் இன்னாரென்று தெரிகிறதில்லை. ஆயினும், உம் விஷயத்தில் அவ்விதமான எதிரி ஒருவரும் ஏற்படாதபடி நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறி அவரிடம் விடை பெற்று அடுத்த அறைக்குச் சென்றேன்.

அது பாஷாதத்துவம் கற்பிக்கப்படும் இடம். நான் அங்கு சென்றபோது, பாஷா தத்துவ சாஸ்திரிகள் மூவர், தங்கள் சுயபாஷையை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் செய்துகொண்டிருந்தனர்.

அவர்கள் ஆலோசனைகளில் முதலாவது: வார்த்தைகளைக் குறைக்க வேண்டுமென்பது. இதற்கு உபாயங்களாவன: பல அசைகளாலாகிய வார்த்தைகளை ஓரசையாகக்

குறுக்குவதும், வினைகளையும், வினையெச்சங்களையும், பெயரெச்சங்களையும் நீக்கிவிடுவதுமே காணப்படும் பொருள்கள் யாவும் பெயரால் குறிக்கப்படுவனவாகவே இருப்பதால் பெயர்ச்சொல்லைத் தவிர மற்ற சொற்கள் வேண்டுவதில்லை யென்பது அவர்கள் அபிப்பிராயம்.

இரண்டாவது ஆலோசனையாவது என்னவென்றால், எல்லாவகையான சொற்களையுமே அடியோடு நீக்கிவிட வேண்டுமென்பது. இது தேக சௌக்கியத்திற்கு மிகவும் அனுகரணமானதாம். எவ்வாறெனில், நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் சிறிது சிறிது சுவாசம் செலவாகிறதென்பது தெளிவான விஷயம். இங்ஙனம் சுவாசம் செலவாகச் செலவாக அதற்கேற்ற அளவு நம் ஆயுளும் குறையும் என்பது சொல்லாமலே அமையும். ஆதலால், இக்குறையை நிவர்த்திக்க அவர்கள் யோசித்துக் கண்டுபிடித்துள்ள மார்க்கமாவது: 'பொருளின் பெயர்களே சொற்களானதால், ஒவ்வொருவரும் தம் கருத்துக்களை வெளியிட சொற்களை உபயோகித்து, சுவாசங்குறைந்து, ஆயுள்குறைவதிலும், அச்சொற்கள் குறிக்கும் பொருள்களைத் தம் கைவசம் வைத்துக்கொண்டு அவைகளைக் காட்டித் தம் கருத்துக்களை வெளியிடுவது மிகவும் சிறந்தது என்பதாம். இந்த உபாயத்தை அனுசரித்தால், எல்லோரும் தேக சௌக்கியமும் தீர்க்காயுளும் பெற்றிருப்பார்கள். ஆனால், ஸ்திரீகளும் கல்வி யறிவற்ற பாமரரும் இதற்குக் குறுக்காக இருந்தார்கள். தங்கள் மூதாதையர் வழக்கப்படி நாவாற் பேசச் சுதந்தரங் கொடாவிட்டால் கலகம் விளைப்பார்கள்போல் தோற்றியது. எப்பொழுதும், அறிவின் அபிவிருத்திக்கு இடையூறாய்

நிற்பவர்கள் இந்தப் பாமரஜனங்களே. ஆயினும், கல்வியிற் சிறந்த மேதாவியர் பலர், இப்புதிய முறையை அனுசரித்தொழுக முன்வந்தார்கள். ஆனால், அதில் ஒரே ஒரு அசௌகரியம் இருந்தது. அதாவது, ஒருவர் பலவகைப் பட்ட முயற்சி யுடையவரா யிருந்தால், அதற்கேற்ப, அவர் தம் முதுகின்மீது பலவகையான பொருள்களைச் சுமந்துகொண்டு போகவேண்டி யிருந்தது. அப்பொருள் களைச் சுமக்க இயலாவிட்டால் பலமுள்ள இரண்டொரு வேலைக்காரர்கள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். நான் இரண்டு புத்திமான்களை ஆடிக்கடி காணுவதுண்டு. அவர் கள் தம்முதுகிற் சுமந்து செல்லும் பாரம் இடுப்பொடியத் தக்கதாயிருந்தது. ஒருவரை யொருவர் சந்தித்தபோது, அவர்கள் தமது மூட்டைகளை இறக்கிக் கீழேவைப்பார் கள். பிறகு தத்தம் பைகளைத்திறந்து அதிலுள்ள பொருள் களில் அவசியமானவற்றை எடுத்தெடுத்து வாய்திறவாது ஒரு மணி நேரம்போல் சம்பாஷிப்பார்கள். சம்பாஷணை முடிந்தபிறகு மூட்டையைக் கட்டி ஒருவர்க்கொருவர் மூட் டையைத் தூக்கிவிடத், தூக்கிக்கொண்டு தத்தம் வழியே செல்வார்கள்.

ஆனால், சிறு சம்பாஷணைகளுக்கு அவ்வளவு பெரிய மூட்டை வேண்டுவதில்லை. சட்டைப்பையில் சில பொருள் களைப் போட்டுக் கொண்டால் போதும். அல்லது, தோ ளில் ஒரு சிறு பையைக்கட்டித் தொங்கவிட்டு அதிற் போட்டுக்கொண்டு போனாலும் போதுமானது. வீட்டி லேயே ஒருவர் ஒருவரோடு பேசுவதானால் இவ்வளவு கஷ் டம்கூட இல்லை. சம்பாஷணைக்கென்று ஓர் அறை அமை த்து அதில் சகலவிதமான பொருள்களையும் சித்தமாக வைத்துக் கொள்ளலாம்.

இந்த முறையில் உள்ள மற்ெருரு பெரிய சௌகரியம் என்னவென்ருல், இது உலகத்தில் உள்ள எல்லோருக்கும் ஒரேபாஷையாக உபயோகப்படக் கூடியது. அயல் நாட்டு அரசர்களைக் காணச்செல்லும் ராஜதூதர்களுக்கு அவ்வந் நாட்டுப் பாஷைகளைத் தெரிந்து கொள்வதைவிட இந்த முறையை அனுசரிப்பது சுலபம் இது நிற்க

நான், கணித பாடசாலையைப் போய்ப் பார்த்தேன். அங்கு, உபாத்தியாயர் மாணுக்கர்களுக்கு ஒரு நூதன முறையில் பாடங்கற்பித்தார். அது ஐரோப்பியராகிய நமக்கு விளங்கவே விளங்காது. அம்முறையாவது கணிதமும், அதைக்கணிக்கும் முறையும் மெல்லிதாய்ச் செய்த ஓர் அப்பத்தின்மீது மூளையின் ரசக்கலப்புள்ள மையினுல் எழுதப்படும். இந்த அப்பத்தை மாணவன், வெறும் வயிற்றில் விழுங்கிவிட்டு, அன்று தொடங்கி மூன்று நாள் வரையில் ரொட்டியும் தண்ணீரும் தவிர வேறெதுவும் சாப்பிடாதிருக்க வேண்டியது. அப்பம் ஜீரணமாக ஆக, அதில் உள்ள மூளைரசம், அதனுலெழுதப்பட்ட கணிதத்தையும் இழுத்துக்கொண்டு மூளைக்கேறும். ஆனுல் இந்த முறை அதுவரையில் கைகூடிவரவில்லை அதற்குக் காரணம், மூளைசாரம் மையில் கலப்பது தக்க அளவோடு கலக்கப் படாதிருக்க வேண்டும்; அல்லது, மாணவர்களின் குற்றமாயிருக்கவேண்டும். மாணவர்கள் குற்றமென்ன வென்ருல், அந்த அப்பவாசனை அல்லது ருசி அவர்களுக்குப் பிடிக்க வில்லை போலிருக்கிறது. அதனுல், அவர்கள் சாப்பிட்ட கணித அப்பம் உள்ளேபோய் வேலைசெய்யும் முன், மறைவாய்ச் சென்று அதை வாந்தி செய்து வெளிப்படுத்திவிடுகிருர்கள் இதையல்லாமல், குறித்த மூன்று நாளும் பத்தியத்தைக் காப்பாற்றுவது மில்லை.

# ஆரும் அத்தியாயம்

---

ராஜதந்திர போதனசாலையைச் சென்று பார்த்ததில் எனக்கு மற்றவிடங்களில் உண்டான மகிழ்ச்சி உண்டாக வில்லை அங்கிருந்த போதகாசிரியர்கள், சித்தப்பிரமை கொண்டவர்களாக எனக்குத் தோற்றினர்கள். அவர் களைப் பற்றி எப்பொழுது நினைத்தாலும் எனக்கு மிகவும் விசனமுண்டாகா திருப்பதில்லை. பாவம், இவர்கள் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் உடையவர்களையே, அரசர்கள் தமக்கு நண்பர்களாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், அமைச் சர்கள் பொது ஜனநன்மையை நாடுமாறு கற்பிக்கப்பட வேண்டுமென்றும், பெருங் காரியங்களைச் செய்த மேதா வியர்க்குப் பரிசளிக்க வேண்டுமென்றும், இளவரசர்களுக் குக் குடிகள் நலத்தையே தமது நலமாகக் கருதக் கற்பிக்க வேண்டுமென்றும், வகிக்கும் திறமுள்ளவர்களுக்கே உத்தி யோகம் அளிக்கவேண்டு மென்றும், இன்னும் இவை போன்ற பல அசாத்தியமானவும், அதுவரை எவர் மனத் திலும் தோற்ருதவும், வீண் மனோராச்சியமாக முடியத் தக்கவுமான காரியங்களைச் சாதிக்க யோசனை செய்து கொண்டிருந்தனர். இதை நோக்கவும், "அறிவிற் சிறந்த கலைஞர்கள் சிலர், உண்மையென்று எவைகளை நாட்டுகிருர் களோ, அவைகளைப் போல அசாத்தியமும் அறிவீனமு மான விஷயங்கள் வேறெவையும் இரா" என்ற முதுமொழி யின் மெய்மை எனக்கு நன்கு விளங்கியது.

ஆயினும், சங்கத்தின் இப்பகுதியில் உள்ளவர்கள் அனைவரும், அவ்வாறு மனக்கோட்டை கட்டுகிறவர்கள் என்று கூறுவது நியாயமல்ல. மகா நிபுணரான வைத்தியர் ஒருவர் இங்கிருந்தார். அவர், ராஜாங்க முறையையும் முற்றும் உணர்ந்தவராகக் காணப்பட்டார். இந்த மேதாவியர், தம் கல்வியறிவைக் கொண்டு, ஆள்பவர்கள் புரியும் அநீதியாலும் ஆளப்படுபவர்களது ஒழுக்கக் குறைவாலும் பலவகையான ராஜநிர்வாகங்களிலும் ஏற்படுகிற குற்றங் குறைகளைப் போக்குவதற்குத் தக்க மருந்துகள் கண்டு பிடித்திருக்கிறார். உதாரணமாக: சகல கிரந்த கர்த்தாக்களும், தர்க்க சாஸ்திரிகளும், இயற்கை அங்கத்துக்கும் ராஜாங்கத்திற்கும் ஒற்றுமை மிகுதியும் உண்டென்று ஆராய்ந்து அறிந்து கூறியிருக்க, இந்த இரண்டங்கங்களைப் பாதுகாக்கவும், இவைகளைப் பற்றும் நோய்களைத் தீர்க்கவும் ஒரே முறை தான் அனுசரிக்கப்பட வேண்டுமென்பது தெளிவாகப் புலப்படவில்லையா? ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்த மோதாவிகள் பலர், பலவகை வியாதிகளால் பீடிக்கப்படுகிறார்களென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்: சிலர் மனக்கொதிப்பால் வருந்துவர்; சிலர்க்கு மூளைபலம் குறைவதுண்டு. ஆனால் அனேகர்க்கு பலஹீனம் காணப்படுவது இருதயத்திலேதான்; சிலர்க்கு இரண்டுகை நரம்புகளும் குறுகிப் போவதுண்டு, ஆயினும் பெரும்பாலும் குறுகுவது வலதுகை நரம்புகளே; சிலர்க்கு உதர வாயுவும், தலை கிறுகிறுப்பும் கண்டு உன்மத்தங்கொண்டவர்களைப் போல் ஆக்கிவிடுவதுண்டு; சிலர்க்கு அஜீரணத்தால் புளியேப்பம் வருவதுண்டு. அவைகளையெல்லாம் பெயர் குறித்துச் சொல்லவேண்டிய அவசியம்

இல்லை. இவ்வகை நோய்களால் சரீரம் வருந்துவது போலவே மந்திராலோசனைச் சபையும் வருந்துவதால், வைத்தியர் பின்வருமாறு ஒரு பிரேரபணை செய்தார்: மந்திராலோசனைச் சபை கூடுங்காலத்தில் சில வைத்தியர்கள் ஆஜராராக இருக்கவேண்டியது. சபை கூடும் முதல் மூன்று நாட்களிலும், அன்றாடம் சபை கலையும்போது அவ்வைத்தியர்கள் சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவர்க்கும் கைபார்க்க வேண்டியது. இவ்வாறு மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல் கைபார்த்தால் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் உள்ள வியாதிகள் இன்னின்னவென்று தெளிவாய்த் தெரியும். ஆதலால், நாலாம் நாள் சபைக்கு வரும்போது வைத்தியர்கள், அங்கத்தினர் ஒவ்வொருவர்க்கும் தக்க மருந்து கொண்டுவர வேண்டும். சபை கூடுவதற்கு முன்னமே, அந்தந்த வியாதியஸ்தர்களுக்கு அதற்குத் தக்க மருந்துகளை,—சாந்தமான மருந்து உட்கொள்ள வேண்டியவர்களுக்கு சாந்தமான மருந்து, கார்ப்பான மருந்து உட்கொள்ள வேண்டியவர் களுக்குக் கார்ப்பான மருந்து, விரோசனம் வேண்டுவோர்க்கு அதற்கடுத்த மருந்து, மலக்கட்டுள்ளவர்களுக்கு அதற்கேற்ற மருந்து இவ்வாறே—கொடுக்க வேண்டும். மறுநாள் சபை கூடுங் காலத்தில் முன்னாள் கொடுத்த மருந்தால் உண்டாயிருக்கும் குணத்தையறிந்து அதற் கேற்றவாறு, அதே மருந்தையோ, வேற மருந்தையோ, அளவைக் கூட்டியோ, குறைத்தோ கொடுக்க வேண்டிய முறைப்படி கொடுக்க வேண்டும்.

இந்தப்படி செய்வதால், பொது ஜனங்களுக்கு அதிக கஷ்டமில்லை. ஆலோசனைச் சபையார்க்கே சட்டநிருபணம்

செய்யும் அதிகாரம் உள்ள தேசங்களுள் இம்முறை மிக வும் உபயோகமுள்ளதாயிருக்குமென்பதே, எனது தாழ்மையான அபிப்பிராயம். இம்முறையால் கருத்தொருமைப்பாடு உண்டாகிறது; குதர்க்கம் குறைகிறது; மூடியிருக்கும் வாய்கள் திறக்கின்றன; திறந்திருக்கும் வாய்கள் மூடுகின்றன; மடமை நீங்குகிறது.

மேலும், ராஜதயவுடையவர்களுக்கு ஞாபகக் குறைவென்னும் வியாதி பெரும்பாலும் காணப்படுவதால், அவ்வைத்தியரே அதற்கு மொருசில சிகிச்சைகள் கூறினார். அவையாவன, அன்னாரிடத்தில் யார் எவ்விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமானாலும், சென்று அவ்விஷயத்தைத் தெளிவான வார்த்தைகளால் எவ்வளவு சுருக்கமாகத் தெரிவிக்கக் கூடுமோ அவ்வளவு சுருக்கமாகத் தெரிவித்துவிட்டுத் திரும்பும்போது அவர் மூக்கைப்பிடித்து ஒருமுறை திருகிவரவும்; அல்லது அவர் வயற்றில் ஓர் உதைகொடுத்துவரவும்; அல்லது அவர்கை சிவக்கும்படிக் கிள்ளிவிட்டுவரவும்; இவ்வாறே சொல்லிய காரியம் முடிகிறவரையில் ராஜசபை கூடும் ஒவ்வொரு நாளும் செய்து வரவேண்டியது.

ஒரு ராஜாங்கத்தில் கட்சி பிரதிகட்சிகள் பலமாயிருந்தால் அவைகளை ஒருமைப் படுத்துவதற்கு ஓர் ஆச்சரியமான உபாயம் கண்டு பிடிக்கப்பட்டது. அதாவது: ஒவ்வொரு கட்சியிலும் நூறு நூறு தலைவர்களைத் தெரிந்தெடுப்பது; அவர்களில் ஒருகட்சியில் இருந்த ஒருவரையெடுத்து அவர் தலைக்குச் சற்றேறக்குறைய சமமான தலையுள்ள மற்றொருவரை மறுகட்சியிலிருந்து எடுத்து ஜோடியாக நிறுத்துவது. இப்படியே இருநூறு பேர்களை

யும் நூறு ஜதைகளாய்ப் பிரித்தபிறகு, ஒவ்வொரு ஜதையில் உள்ள இருவர்கள் மூளைகளையும், தக்க ரணவைத்தியர்களைக் கொண்டு கீறி எடுத்து ஒவ்வொரு மூளையையும் இருபாதியாக்கி ஒருபாதி மூளையில் மற்றமூளையின் ஒரு பாதியையும், மறுபாதியை மற்றமூளையின் மறுபாதியோடும் சேர்த்து, முன்போல் தலையில்வைத்துப் பொருத்திவிடுவது. இங்ஙனமே நூறு ஜதைத் தலைவர்களுக்கும் செய்யப்படும். இதனால் ஒவ்வொருவர்க்கும் தம் மூளைபாதியும் எதிரியின் மூளைபாதியும் கலந்த ஒவ்வொரு மூளை இருக்கும். இது சற்று ஜாக்கிரதையுடன் செய்யவேண்டிய வேலை. ஆனால் இதைக் கண்டுபிடித்த வைத்தியர், "சிறிது சாமர்த்தியத்தோடுமட்டும் இவ்வாறு செய்துவிட்டால் இதனால் நன்மை சித்திப்பதற்குச் சிறிதும் தடையில்லை. ஏனெனில், ஒரே மண்டைக்குள் இருவேறு வகைப்பட்ட அபிப்பிராயங்களுடைய இரண்டு மூளைகள் ஒன்றுக்கொன்று தர்க்கமிட்டுத் தமக்குள் ஒரு முடிவுக்கு வந்துவிடும். அதனால் நிதானம் ஏற்படும். உலகத்தின் நடவடிக்கைகளைச் சீர்ப்படுத்தி மேற்பார்ப்பதற்கென்றே தாங்கள் அவதாரம் செய்துள்ளதாகக் கருதும் சிலர்க்குள்ள ஒழுங்கீனமும், நிதானமற்றவுமான நினைப்புகள் நீங்கி சீர்ப்படும்" என்று உறுதியாய்ச் சொன்னார்.

குடிகளை வருத்தாமல் ராஜாங்கத்துக்குப் பணம் சேகரிக்கும் உபாயங்களைப் பற்றி இரண்டு நிபுணர்கள் மிக ஊக்கத்தோடு வாதித்துக் கொண்டிருந்ததைக் கேட்டேன். அவர்களுள் ஒருவர் "தீயொழுக்கத்திற்கும் மூடத்தனத்துக்கும் வரி ஏற்படுத்துவதே நியாயம்; அப்படி ஒவ்வொருவனும் செலுத்தவேண்டிய வரி இவ்வளவென்பதை வேறு

சிலர் கூடித் தீர்மானிக்கவேண்டும்'' என்றார் மற்றவர், இதற்குநேர் விரோதமான அபிப்பிராயமுள்ளவராயிருந்தார். அவர் கூறியதாவது: “மனிதர் தமது சரீரத்திலும் மனத்திலும் எந்த குணங்களைச் சிறந்தனவாக மதிக்கின்றனரோ, அந்த குணங்களுக்கே வரி விதிக்கவேண்டும். வரியின் அளவு குணங்களின் ஏற்றத்தாழ்வுக்குச் சரிபாய் முறையே மிகுந்தும் குறைந்தும் இருக்கவேண்டும். அதை அவரவர்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டும்'' ஸ்திரீகள் யாரிடத்தில் மிகுதியும் பிரியம் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கே மற்றெல்லோரையும் விட அதிக வரி ஏற்பட்டிருந்தது பிரியம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக் கவ்வளவு வரியும் அதிகம். சாதுரியம், தைரியம், மரியாதை இவைகளுக்கும் அங்ஙனமே அதிக வரி ஏற்பட்டிருந்தது. ஆனால் மானம், ஞானம், நியாயம், கல்வி இவைகளுக்கு வரியே கிடையாது. ஏனென்றால் இவைகள் மிகவும் அபூர்வமானவை. இவைகள் பிறனிடம் இருப்பதாக ஒருவனும் ஒப்பமாட்டான்; தன்னிடம் இருப்பதற்குத் தக்கன என்று கருதவும் மாட்டான்.

ஸ்திரீகளுக்கு, அவரவர் அழகுக்கும், அலங்கார சாமர்த்தியத்திற்கும் தக்கவாறு வரி விதிக்கப்பட்டது. ஆனால், கற்பு, பதிவிரதாதர்மம், நற்குணம், நல்லறிவு இவைகளுக்கு வரியே கிடையாது. ஏனெனில் இவைகளுக்கு வரி விதித்தால் அதை வசூல் செய்வதற்காகும் கூலி கூடத் தேறாது.

ஆலோசனை சபையாரை அரசின் சார்பாக வைத்துக் கொள்வதற்கு ஒரு தந்திரம் செய்யப்பட்டது. அவ்வுத்தி

யோகம் வேண்டும். ஒவ்வொருவரும் தம் பெயரைத் தெரிவித்துவிட வேண்டியது. இங்ஙனம் தெரிவிக்கப்பட்ட பெயர்களை யெல்லாம் ஒவ்வொரு சீட்டி லெழுதி, முடிவில் சீட்டு குலுக்கப்படும். அதிலிருந்து எத்தனை உத்தியோகஸ்தர்கள் வேண்டுமோ அத்தனை சீட்டு பொறுக்கப்படும். அந்தச் சீட்டுகளிற் கண்ட பேர்களுக்கே உத்தியோகம் கொடுக்கப்படும். மற்றவர்கள் மறுதரம் சீட்டுக் குலுக்கும் வரையில் காத்திருக்க வேண்டியது. இப்படிச் செய்வதால் ஒருவரும், பிறர் மேற் குறைசொல்ல இடம் இல்லை; சொன்னால் தம் அதிர்ஷ்டத்தின்மீது தான் சொல்லவேண்டும். ஆனால் இந்தச் சீட்டில் சேரும் ஒவ்வொருவரும், தமக்கு சீட்டு விழுந்தாலும் விழாவிட்டாலும் தாம் அரசின் சார்பாகவே இருப்பதாக வாக்குறுதி செய்து கொடுக்க வேண்டும்.

மற்றொரு மேதாவியர், ராஜாங்கத்திற்கு விரோதமாகச் செய்யும் சதியாலோசனைகளைக் கண்டு பிடிப்பதற்கேற்ற உபாயங்கள் அடங்கிய ஒரு பெரிய கடிதத்தை எனக்குக் காண்பித்தார். அதில், கௌரவமுள்ள ஜனங்கள் எல்லாருடைய ஆகாரம், ஆகாரம் உண்ணும் வேளை, அவர்கள் படுக்கும் பக்கம் முதலியவைகளை யெல்லாம் பரீட்சிக்கும்படி சிறந்த ராஜதந்திரிகளுக்குப் போதித்தார். இன்னும் பலநூதன விஷயங்கள் அதில் எழுதியிருந்தார். ஆனால் அவ்வியாசம் முடிவு பெற்றதாகக் காணப்படவில்லை ஆதலால் நான் எனக்குத் தெரிந்த உபாயங்கள் சிலவற்றை, அவர்க்கு விருப்பமானால், தெரிவிப்பதாகக் கூறினால் சாதாரணமாக இவ்வகை நூலாசிரியர்கள் பிறர் கூறுவனவற்றை ஏற்றுக்கொள்வது அரிது. ஆனால் இவரே,

'தாங்கள் ஏதாவது நூதனமாகக் கூறினால் வந்தனத்துடன் ஏற்றுக் கொள்வேன்' என்று மகிழ்வோடு கூறினர்.

அதன் மேல் நான் சொன்னதாவது: "நான் என்னுடைய பிரயாணங்களில், ஒரு முறை ட்ரிபீனியா என்னும் ராஜ்யத்திற்குச் செல்ல நேரிட்டது. அதை அங்குள்ளவர்கள் **லாங்டன்** என்று சொல்லுகிறார்கள். அதில் உள்ள ஜனங்களில் பெரும்பாலார், சாட்சிகளாகவும், வாதிகளாகவும், பிரமாணம் செய்பவர்களாகவும், துப்பறிபவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுக் கெல்லாம், ராஜாங்க மந்திரிகளிடத்திலேயே உத்தியோகம். அந்த ராஜாங்கத்தில் நடக்கும் சதியாலோசனைகளெல்லாம், சிறந்த ராஜதந்திரிகளெனப் பெயரெடுப்பதையும் தம் சொந்த லாபத்தையும் கருதும் ராஜாங்க உத்தியோகஸ்தர்களிடத்திலேயே உற்பத்தியாகின்றன. அவர்கள், தமக்குள் ஆலோசித்து யாரை ராஜதுரோகியாகக் கைப்பற்றலாமென்று தீர்மானிப்பார்கள். அப்பால், அங்ஙனம் தீர்மானித்துக் கைப்பற்றப் பெற்றவர்களுடைய கடிதம் முதலியவைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்ப் பார்த்து ஒன்றுவிடாமல் எடுத்துக்கொண்டு அவர்களை விலங்கிட்டு விடுவார்கள். பிறகு தாங்கள் எடுத்த கடிதங்களை, அதற்கென்றுள்ள நிபுணர்கள் கையில் கொடுத்து அவைகளிலுள்ள வார்த்தைகளின் அந்தரங்கக் கருத்தை அறியச் சொல்வார்கள். உதாரணமாக 'வாத்துக்கூட்ட' மென்பது ஆலோசனைச் சபையார்களைக் குறிக்கலாம். 'வாந்திபேதி' என்பது நிலையான சேனை என்பதைக் குறிக்கலாம்; 'வார்கோல்' என்பது புரட்சி(Rovolution) என்று பொருள்படலாம்; 'எலிக்கூடு' என்பது உத்தியோகம் என்று பொருள்படலாம்; 'பெருங்

குழி, என்பது பொக்கிஷம் என்று அர்த்தமாகலாம்; 'ஓடிந்த நாணல்' என்பது நியாயஸ்தலம் என்று அர்த்தமாகலாம்; 'புரைகொண்டபுண்' என்றால் ராஜாங்கத்தைக் குறிக்கலாம். இந்த உபாயம் பிரயோஜனப்படாவிட்டால், இதைவிடச் சிறந்த உபாயங்கள் பலவுண்டு."

நான் கூறியதைக்கேட்ட மேதாவியர் எனக்கு மிகவும் மரியாதை செய்து, தம்முடைய புத்தகத்தை அச்சிடுங்கால் அதில் என்னைப்பற்றி கௌரவமாய்க் குறிப்பதாக வாக்களித்தார். இது நிற்க,

அந்த நாட்டில் அதற்கு மேலும் இருப்பதனால் ஏதும் பிரயோஜனம் இருக்குமென எனக்குத் தோற்றவில்லை. ஆதலால் நான் திரும்பி எனது தாய் நாடாகிய இங்கிலாந்து செல்வதைக் குறித்து ஆலோசிக்கலானேன்.

## ஏழாம் அத்தியாயம்

அமெரிக்காவில், **கலிபோர்னியா**வுக்கு மேற்கே யுள்ள நிலப்பரப்பு இன்னதென்று ஒருவருக்கும் தெரியாது. நான் தங்கியிருந்த **லகோடா** ராஜ்யம் எந்தக் கண்டத்தைச் சார்ந்ததோ அந்தக் கண்டம் கிழக்கே மேற்கூறிய நிலப் பரப்பு வரையிலும், வடக்கே, **லகோடா**வுக்கு நூற்றைம்பது மைல் தூரத்திற்குள்ளிருக்கும் **பஸ்பிக்** மகா சமுத்திரம் வரையிலும் எட்டி யிருக்கிறதென்று நம்ப இடமுண்டு. இந்த வடபாகத்தில் ஒரு நல்ல துறைமுகம் இருக்கிறது வட கிழக்கேயுள்ள **லக்நாக்** என்னும் தீவிலிருந்து இந்தத் துறைமுகத்துக்கும் வியாபாரக் கப்பல்கள் அடிக்கடி வருவதுண்டு. **லக்நாக்** என்னும் இத்தீவு ஜப்பான் தேசத்துக் குத் தென் கிழக்கே சுமார் நூறு லீக் (League) தூரத்தில் உள்ளது. இந்தத் தீவின் அரசற்கும் ஜப்பானிய சக்கரவர்த் திக்கும் ஓர் உடன்படிக்கையால் மிகவும் நண்புரிமை உண்டு. ஆதலால், நான் ஐரோப்பாவுக்குத் திரும்பிச் செல்லும் கருத்துடன் இந்த வழியே பிரயாணப்படத் தீர்மானித் தேன். என் சிறு மூட்டையைச் சுமப்பதற்கும், எனக்கு வழிகாட்டிச் செல்வதற்கும் இரண்டு கோவேறு கழுதை களையும், வழிகாட்டி ஒருவனையும் கூலிக்கு அமர்த்திக் கொண்டேன். என்னை மிகவும் உபசாரத்தோடு தம்மிடம் வைத்திருந்த பிரபுவிடம் என் ஊருக்குப் போய் வருவதா கச் சொல்லி விடைபெற்றுக்கொண்டேன். அவர் ஞாப கார்த்தமாக எனக்கு ஒரு சிறந்த வெகுமதி கொடுத்தார். அதையும் பெற்றுக்கொண்டேன்.

என்னுடைய பிரயாணத்தின் இடையே, இங்கே குறிக்கத் தக்கதாக அவ்வளவு முக்கியமான சம்பவங்கள் ஒன்றும் நிகழவில்லை. நான் துறைமுகத்தை (அதன் பெயர் மால்டோனடா) அடைந்தபோது, கப்பல்கள் தங்குமிடத்தில், லக்நாக் தீவுக்குச் செல்லும் கப்பல்கள் ஒன்றும் இல்லை. அங்கு செல்வதிற்கு வரும் கப்பல்கள் வரவும் சில நாட்கள் செல்லுமெனத் தெரிந்தது. ஆதலால் நான் அந்தத் துறைமுகத்திலேயே தங்க நேரிட்டது. அந்தப் பட்டணம் போர்ட்ஸ்மத் நகர் அளவு பெரிதாயிருந்தது. நான் வெகு சீக்கிரத்தில் அந்நகர வாசிகள் சிலரைச் சிநேகமாக்கிக்கொண்டேன். அவர்கள் என்னை மிகவும் உபசாரத்தோடு வரவேற்றார்கள். ஒரு கனவான் என்னை நோக்கி, "லக்நாக் தீவுக்குச் செல்லும் கப்பல் வர இன்னும் ஒரு மாதகாலம் செல்லும். அதற்குள் நாம், இந்நகருக்குத் தென்மேற்கே சுமார் ஐந்து லீக் தூரத்திலிருக்கும் க்ளுப்டட்ரிப் என்னும் ஒரு சிறிய தீவுக்குச் சென்று வரலாம். நானும் என் சிநேகிதர் ஒருவரும் உம்மோடு துணையாக வருகிறோம்'' என்றார்.

க்ளுப்டட்ட்ரிப், என்னும் பதத்திற்கு, எனக்குத் தெரிந்தவரையில், 'மாந்திரீகர் தாந்திரீகர் நிறைந்த தீவு, என்பது பொருளாகத் தோற்றுகிறது. அது ஐல் ஆப் வைட்டில் மூன்றில் ஒருபங்கு விஸ்தீரணமுடையது; மிகவும் வளமுள்ளது. இத்தீவை, மாந்திரீகமே தொழிலாகவுடைய ஒரு கூட்டத்தாரின் தலைவன் ஆண்டு வருகிறான். இக் கூட்டத்தார் கொள்வினை கொடுப்பனை யெல்லாம் தமக்குள்ளேயே செய்துகொள்வார்கள். தம் குலத்தில் மூத்தவன் எவனோ அவனே அத்தீவிற்கு அரசன்.

மூவாயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் சுற்றிலும் இருபத்து நாலடி உயரத்திற்குக் கருங்கற் சுவர் எழுப்பப்பெற்றதுமான ஒரு பூந்தோட்டத்தின் நடுவே அரசனது உன்னத அரண்மனை அமைந்திருக்கிறது.

அரசனுக்கும் அவன் குடும்பத்தார்க்கும் உணவு சமைப்பது, பரிமாறுவது முதலிய வேலைகளைச் செய்ய நூதனமான வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். அரசன் தனக்குள்ள மந்திரசக்தியால், இறந்தொழிந்தவர்களுள் தனக்கிஷ்டமானவர்களைக் கூப்பிட்டு அவர்களிடம் வேலை வாங்கிக்கொள்ளச் சக்தியுண்டு. ஆனால் அவர்களை இருபத்துநான்குமணி நேரத்திற்குமேல் வைத்திருக்கக்கூடாது. அன்றியும், மிக்க அவசியம் நேர்ந்தாலொழிய ஒரு முறை வந்து போனவர்களையே, மூன்று மாதத்திற்குள்ளாக மறுமுறையும் கூப்பிடக் கூடாது.

நாங்கள் காலை சுமார் பதினொரு மணிக்கு அந்தத் தீவை யடைந்தோம். அப்பொழுது, எனக்குத் துணையாக வந்தவர்களில் ஒருவர் அரசரிடம் சென்று, அந்நிய நாட்டார் ஒருவர் அவரைத் தரிசிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். அதன் மேல் நான் அரண்மனைக்குள் செல்ல அரசர் உத்தரவு கொடுத்தார். உடனே நாங்கள் மூவரும் அரண்மனை வாயிலைக் கடந்து உட்புகுந்தோம். வழியில் இருபுறத்திலும் அரண்மனைப் பாதுகாப்பாளர்கள் ஆயுதபாணிகளாய் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் தரித்திருந்த போர் உடைகளும், ஆயுதங்களும் கர்நாடக காலத்தனவாயிருந்தன. அவர்கள் முகத்தோற்றம் ஒருவகையாயிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க என்னால் இன்ன தன்மைத்தென்று கூற முடியாத ஒருவகை பயங்கரம் என்

மனத்தில் உண்டாயிற்று. என் உடம்பு சிலிர்த்தது. இவ்வகையான காவலாளர்களால் காக்கப்பட்டுள்ள பல கட்டுகளைக் கடந்து நாங்கள் அரசர் கொலுமுகத்தை அடைந்தோம். அரசர் ஓர் உயர்ந்த சிம்மாதனத்தில் அமர்ந்திருந்தார். அவருக்கு மூன்று முறை வந்தனம் செய்துவிட்டு, சில கேள்விகளுக்கு விடை யளித்தபிறகு, சிம்மாதனத்தின் கீழ்ப்படிக்கருகே இருந்த மூன்று இருக்கைகளில் நாங்கள் மூவரும் அமருவதற்கு உத்தரவுபெற்று அமர்ந்தோம்.

இந்தத் தீவில் வழங்கும் பாஷை வேறொன்றா யிருந்த போதிலும், அரசர்க்கு பால்னிபார்பியில் வழங்கும் பாஷையும் தெரிந்திருந்தது. அவர், நான் செய்த பிரயாணங்களைப்பற்றி சிறிது சொல்லும்படிக் கேட்டார். மேலும், என்னிடத்தில் தாராளமாய் வார்த்தையாட விரும்பி, தம் அருகே நின்ற ஊழியர்களை யெல்லாம் அப்பாற் போகும்படித் தம் கைவிரலால் ஒரு சைகை செய்தார்; அவ்வளவுதான், மறு நொடிக்குள் அங்கிருந்த வேலைக்காரர்கள் அனைவரும், சென்றவகை தெரியாது மறைந்துவிட்டனர். கனவிற்காணும் காட்சி கண்விழித்த கணமே மறைந்தொழிவதுபோல, அவர்கள் மறைந்து போனதை நினைக்க நினைக்க எனக்குப் பெரு வியப்பா யிருந்தது. சிறிது நேரம் எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தேன். அதைக் கண்ட அரசர், "பயப்படாதீர். உமக்கு ஒன்றும் தீங்கு நேரிடாது" என்றார். நான் என் கூட்டாளிகள் இருவர் முகத்தையும் பார்த்தேன். அவர்கள் இதைப்பற்றிச் சிறிதும் மனமயங்கியதாகத் தோற்றவில்லை. இதற்குமுன் பலமுறை இங்ஙனம் நிகழப் பார்த்துள்ளார்கள் போலும். எவ்வாறாயினும்,

அவர்களைப் பார்க்கவும் எனக்குச் சிறிது தைரிய முண்டா யிற்று. நான், அரசர் கேட்டுக்கொண்டபடி, என் பல பிரயாணங்களிற் சிலவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி னேன். அப்பொழுது, முன்னம் மறைந்த வேலைக்காரர்கள் திடீரென்று எங்கிருந்தாவது தோன்றுவார்களோ என்று கருதி அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண் டேன். என் பிரயாண வரலாற்றை ஒருவாறு கூறி முடித்தபிறகு, அரசர் எங்கள் மூவரையும் தம்மோடு போஜ னங் கொள்ள அழைத்து கௌரவப்படுத்தினர். நாங்கள் போஜனமுண்டபோது, எங்களுக்கு உணவு பரிமாறினவர் கள் முன்னிருந்த வேலைக்காரர்கள் அல்லர்.

அன்று பொழுதுபடும் வரையில் நாங்கள் அரசரோ டிருந்தோம். அத்தீவில் உள்ளவரையில் எங்களை அரண்மனை யிலே வசிக்கும்படி அரசர் கூறினர். ஆனால் நான் அதற்கு இணங்காது என் ஜாகையை அரண்மனைக்கு வெளியி லேயே வைத்துக்கொள்வதாக அவரிடம் மிகவும் பணி வாகக்கூறி அங்ஙனமே செய்ய அவர் உத்தரவைப் பெற்றுக் கொண்டேன். மறுநாள் காலையில் தம்மை வந்து பார்க் கும்படி அரசர் கட்டளையிட்டார். அதற்குடன்பட்டு, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, நானும் என் நண்பர் இருவரும் அரண்மனையை விட்டு வெளிவந்துவிட்டோம்.

அத்தீவின் தலைநகரான அவ்வூரிலேயே ஒரு சிறு வீட் டில் நாங்கள் மூவரும் தங்கியிருந்தோம். அன்றிரவு கழிந் தது. மறுநாள் காலை, நாங்கள் அரசர் உத்தரவுப்படி அவ ரைப் பார்க்கச் சென்றோம். பகல் முழுதும் அரசரோ டிருந்து அந்திப்பொழுதாகவே எங்கள் ஜாகைக்கு வந்து விட்டோம். இங்ஙனமே நாங்கள் அத்தீவில் தங்கியிருந்த

பத்து நாட்களும் பகற்பொழுதை அரண்மனையிலும், இராப்பொழுதை எங்கள் ஜாகையிலுமாகக் கழித்தோம். அரசர்க்கு வேலைக்காரர்களாயிருந்த சூட்சும சரீரிகளை ஒவ்வொருநாளும் பார்க்க நேர்ந்ததால், இரண்டு மூன்று நாட்களுக்கப்பால் அவர்களைக்கண்டால் எனக்குண்டாகும் மனக்குழப்பம் மாறிவிட்டது. அவர்கள் எனக்குச் சர்வ சாதாரணமாய் விட்டார்கள் அதுமட்டுமல்ல, இறந்து போயொழிந்தவர்களுள் எவரை வேண்டுமானாலும் நான் கூப்பிட்டால் அவர் தமது சூட்சும சரீரத்தோடு வந்து நான் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கச் செய்வதாக அரசர் எனக்குக் கூறினர். ஆனால் அப்படி சூட்சுமசரீரத்தோடு வருகிறவர்களை நான் கேட்கும் கேள்விகள் அவர்கள் ஸ்தூல சரீரத்தோடு வசித்தகாலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றியதாயிருக்க வேண்டுமென்று தெரிவித்ததோடு அவர்கள் வசிக்கும் உலகத்தில் பொய்கூறிப் பயனில்லையாதலால் அவர்கள் கூறுவனவெல்லாம் உண்மையாகவே இருக்குமெனவும் கூறினர்.

அரசர் என்மீது இத்துணைப்பரிவு கூர்ந்ததற்காக, நான் என் மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியறிதலையும் அவர்க்கு மிகவும் வணக்கமாய்த் தெரிவித்தேன். அரசரும் நாங்களும், பூந்தோட்டத்தை நோக்கிய ஓர் அறையிலிருந்தோம். முன் காலத்திருந்த அரசர்கள் முதலியோருடைய பெருமையையும் ஆடம்பரத்தையும் கண்ணுற் பார்க்கவேண்டுமென்ற இச்சையே எனக்கு மிகுதியாயிருந்ததால் அலெக்ஸாண்டர், அர்பீலா யுத்தமுடிவில் சேனைகளுக்குத் தலைமைபூண்டு நின்ற காட்சியைப் பார்க்க விரும்பினேன். அப்போது அரசர் தமது விரலை ஒரு

சுழற்றுச் சுழற்றினர். உடனே நாங்கள் இருந்த அறையின் ஜன்னலுக்கருகே திரண்ட படைவீரர்களும் அவர்களுக்குத் தலைமையாக அலெக்ஸாண்டரும் தோன்றினர். அலெக்ஸாண்டரை மட்டும் அரசர் அறைக்குள் அழைத்தார். அலெக்ஸாண்டரோடு நான் பேசினேன். ஆனால் அவர் பேசிய க்ரீக் பாஷையை அறிந்துகொள்வது எனக்கு மிகவும் பிரயாசையாயிருந்தது. எனக்குத்தெரிந்த க்ரீக்பாஷை அவரோடு பேசுவதற்கு உபயோகப்படவில்லை. அவர் தாம் விஷமிட்டுக் கொல்லப்படவில்லை யெனவும், குடிமிகுதியால் உண்டான ஒரு தீயசுரத்தால் இறந்ததாகவும் வாக்குறுதியாகச் சொன்னார்.

அப்பால், நான் ஹனிபால் என்பவர் ஆல்ப்ஸ் மலைத் தொடரைக் கடந்து செல்வதைப் பார்த்தேன். இவர் தம் பாசறையினுள் ஒரு துளிகூட புளிங்காடி வைத்திருந்ததில்லையென்று எனக்குத் தெரிவித்தார்.

பிறகு, யுத்தத்துக்குப் புறப்படுங்கால், ஸீசர், பாம்பே இவர்கள் இருவரும் தமது படைவீரர்களுக்குத் தலைமை வகித்து நின்ற நிலையைக் கண்டேன். ஒரு பெரிய அறையில் ரோமாபுரியின் ஆலோசனைச் சங்கத்தாரும், அதையடுத்தாற்போல் மற்றோர் அறையில் சமீபகாலத்திய ஆலோசனைச் சங்கத்தாரும் தோற்றவேண்டுமென்றும் விரும்பினேன். அங்ஙனமே இவ்விருதிறத்தாரும் தோன்றிய போது, முன்னவர்கள் தெய்வத்தன்மை பொருந்திய வீரர்களாகவும், பின்னவர்கள் ஒழுக்கமற்ற வழிப்பறிகாரர்களாகவும் காணப்பட்டார்கள்.

எனது வேண்டுகொள்மீது, அரசர், ஸீசர், ப்ரூட்டஸ் இருவரையும் எம்மருகே அழைத்தார். ப்ரூட்டஸ் முகத்

தில் நன்றாய் விளங்கிய மனோதீரமும், மெய்யான தேச பக்தியும், ஜீவகாருண்யமும் என் மனத்திற் பதிய என்னை அறியாமலே அவரிடத்து எனக்கு ஒருவகை பயமும் பக்தியும் உண்டாயின. இவர்கள் இருவரும் ஒருவரொருவரிடத்து வைத்திருந்த நன்கு மதிப்பைக்கண்டு என்மனம் மிகவும் மகிழ்ந்தது. உயிரோடிருந்து தாம்செய்த பெருஞ்செயல்களின் மகிமை, தம் உயிரைவிட்டதாகிய மகிமைக்கு ஈடாகாது என்று ஸீசர் தாமே சற்றும் ஒளியாது ஒப்புக்கொண்டார். நான் ப்ரூட்டஸ் பெருமானோடு நெடுநேரம் பேசும் பாக்கியத்தைப் பெற்றேன். அவரும், அவர்க்கு முன்னோர்களான, ஜூனியஸ், ஸோக்ரட்டீஸ், எப்பாமினொண்டஸ், காட்டோ (இளையவர்), ஸர் தாமஸ்மோர் இவர்களும் எக்காலத்தும் ஒன்றாய் இருப்பதாக அறிந்தேன். எத்தனை யுகங்கள் சென்றாலும் இவ் அறுவரோடு ஏழாம் ஒருவரை இவ்வுலகம் அளிக்க வல்லதோ?

பண்டைக்காலத்து இவ்வுலகத்தில் தோன்றி, நின்று, மறைந்த மகான்களையெல்லாம் பார்க்கவேண்டுமென்ற பேரவாவால், நான் அன்னார் பலரை அழைக்கச்செய்தேன். அவர்கள் பெயர்களையெல்லாம் இங்கெழுதில் இதைப் படிப்பார்க்குச் சலிப்புண்டாகும். முக்கியமாக, கொடுங்கோன்மையையும் அநீதியையும் அழித்து, துன்பமுற்ற மன்பதைகளுக்குச் சுதந்தரமளித்து, நீதியை நிலைநாட்டித் தம் வெற்றுடம்பு மாயப் புகழுடம்பு நிறுத்திச் சென்ற மகான்களின் திருமேனிகளைக் கண்குளிரக் கண்டு கண்டு மனம்பூரித்தேன். ஆனால், இங்ஙனம் நான் என் மனத்திற் கொண்ட ஆனந்தத்தின் அளவை, இதை வாசிப்போர் அறிந்து மகிழத்தக்கவாறு எழுதுவது அசாத்தியமாகும்.

# எட்டாம் அத்தியாயம்

அழியாப் புகழ்பெற்ற பண்டைக்காலத்துப் புலவர் பெரு மக்களைப் பார்க்க எனக்கு மிகவும் விருப்பமிருந்தது. ஆதலால், அவர்களைப் பார்ப்பதற்காக வென்று ஒருநாள் தனியாக வைத்துவிட்டேன். முதல் முதல், ஹோமர், ஆரிஸ்டோட்டில் இவ்விருவரையும், இவர்கள் நூல்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்களையும் பார்க்கவேண்டுமென்றேன். அந்தப்படியே அவர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால் உரையாசிரியர்கள் தொகை அளவிடமுடியாது. அவர்கள் பெருங்கூட்டமாக விருந்தனர். நாங்கள் இருந்த அறையில் இடம்போதாமல், நூற்றுக்கணக்கான உரையாசிரியர்கள் அறைக்கு வெளியே நிற்கநேர்ந்தது. ஆனால் இவ்வளவு பெருங்கூட்டத்திலும், மேற்கூறிய நூலாசிரியர்கள் இருவர் இன்னாரென்று வெகு சுலபமாக, ஒருதரம் பார்த்த மாத்திரத்தில் அறிந்துகொண்டேன். அவ்விருவருள் ஹோமர் மற்றவரைவிட நெட்டையாகவும், அழகாகவும் இருந்தார். அவருடைய வயதை நோக்குமிடத்து, அவர் நிமிர்ந்து நடந்த நடை மிகக் காம்பீரமானதென்றே சொல்லவேண்டும். அவர் பார்வை மிகக் கூர்மையாகவும், நுண்ணிதாகவும் இருந்தது. அத்தகைய பார்வையுடையவர்களை நான் அதுவரையிற் பார்த்ததேயில்லை. ஆரிஸ்டோட்டில் மிகத் தளர்ந்த நடையுடையவரா யிருந்ததுமன்றி, ஊன்றுகோலும் உபயோகித்தார். அவர் முகம் அவ்வளவு தெளிவாகவில்லை ; குரலும் மிகத் தாழ்ந்த குரலாயிருந்தது.

இவர்கள் இருவரும், தம்மோடு தோன்றிய கூட்டத்தில் எவரையும் அறியார்கள் என்பதையும், எவரைப்பற்றியும் கேள்விப்பட்டதுமில்லை யென்பதையும் கண்டுகொண்டேன் இந்த உரையாசிரியர்கள் கூட்டத்திலிருந்த ஒருவர், தாங்கள் வசிக்கும் உலகத்தில், தம்மைப்போன்ற உரையாசிரியர்கள், வெட்கத்தாலும், குற்றமிழைத்த நெஞ்சு உறுத்தலாலும், அக்கிரந்தகர்த்தாக்கள் இருவரையும் நெருங்குவதில்லை யெனவும், அவ்விருவர் இருக்குமிடத்திற்கும் தாங்கள் இருக்குமிடத்திற்கும் வெகுதூரமெனவும், என்னிடம் இரகசியமாகத் தெரிவித்தார். நான், **டிடிமஸ், யுஸ்டாதியஸ்** என்னும் உரையாசிரியர்கள் இருவரையும் கவிஞராகிய ஹோமருக்குக் காட்டி அவர்கள் அவர் நூலுக்குச் செய்துள்ள உரைகளைப்பற்றியும் கூறினேன். அதைக் கேட்ட அவர், 'கவிகளின் உண்மைக் கருத்தையறியும் ஆற்றல் இவர்களுக்குச் சிறிதும் இல்லை' என்றார். அங்ஙனமே **ஆரிஸ்டோட்டிலுக்கு**, நான் **ஸ்கோட்டஸ், ராமஸ்** என்னும் உரையாசிரியர்களைக் காட்டி அவர்கள் உரைத்திறத்தைப்பற்றியும் கூறியபோது, அவருக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று அவர், அவ்விருவரையும் நோக்கி, 'இதோ உங்களோடு வந்திருக்கும் மற்ற உரையாசிரியர்களும், உங்களைப்போல மூடசிரோமணிகள் தாமோ?' என்றுகேட்டார்.

இங்ஙனமே நான் வேறு பல பண்டைக்கால வித்வசிரேஷ்டர்களை வரவழைக்கச்செய்து, அவர்களை யெல்லாம் கண்ணாரக்கண்டு களித்ததில் ஐந்து நாட்கள் கழிந்தன.

என்னை அத்தீவுக்கு அழைத்துச் சென்ற நண்பர்கள் இருவரும், தங்களுக்குச் சொந்த வேலைகள் மிகுதியும் இருப்பதால், இன்னும் மூன்று நாட்களுக்குள் தம் ஊருக்குத்

திரும்பிவிட வேண்டுமென்றார்கள். ஆதலால், நான் அந்த மூன்று நாட்களில், சென்ற இருநூறு முந்நூறு வருஷங்களுக்குள் நம்முடைய நாட்டிலும், ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளிலும் இறந்துபோன மேதாவிகளைப் பார்த்து விடவேண்டுமென்று தீர்மானித்தேன். அந்தப்படி, சமீப காலத்தில் இறந்துபோன பத்துப்பன்னிரண்டு அரசர்களை யும், அவர்களுக்கு முன் ஏழெட்டு தலை முறைகளில் இருந்த அரச குடும்பத்தாரையும் பார்க்க விரும்பினேன். அங்ஙனமே அவர்கள் தோன்றியபோது, அதற்கு முன் எனக்கு அவர்களிட மிருந்த மதிப்புங் குறைந்து, என் மனமும் நொந்தது. இங்ஙனம் நேருமென்று நான் சிறி தும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், அதில் பலர், மேளக் காரர்களாகவும், அம்பட்டர்களாகவும், பூசாரிகளாகவும் இருந்தனர். முடிமன்னர்களிடத்து நான் மிகவும் பயபக்தி யுள்ளவனாதலால், இவ்விஷயத்தைப்பற்றி அதிகம் எழுத எனக்கு மனமில்லை.

இத்தகையவர்களையெல்லாம் பார்க்கப்பார்க்க, எனக் குத் தற்கால தேச சரித்திரங்களில் மிகவும் அருவருப்புண் டாயிற்று. ஏனெனில், சென்ற நூறுவருஷ காலத்துக்குள் இருந்த, பிரசித்திபெற்ற ராஜாங்க உத்தியோகஸ்தர்களை யெல்லாம் நேரிற்கண்டு அவர்கள் தன்மையைப் பரீட்சித்த தில் நான் அறிந்து கொண்டதாவது: புகழுக்கும் பொரு ளுக்கும் அடிமைப்பட்டு சரித்திரம் எழுதப்புகுந்த சிலர், பேடிகளை வீரர்களென்றும், மூடர்களை நிபுணர்களென்றும், முகஸ்துதிசெய்யும் பொய்யர்களை மெய்யர்களென்றும், தேசத்துரோகிகளை நடுவுநிலையுள்ளவர்களென்றும், நாஸ்தி கர்களை ஞானிகளென்றும், உண்மை பிறழ எழுதி உலகை

வஞ்சித்துவிட்டன ரென்பதே பெருங் காரியங்களில் தலையிடுவதற்குப் பலர்க்கு மூலகாரணமாயிருந்த அற்ப எண்ணங்களையும், அக் காரியங்கள் நிறைவேறுவதற்கு நேர்ந்த குருட்டதிஷ்டத்தையும், எத்தனை பாதகர்கள் உயர்ந்த பதவியும், மிகுந்த அதிகாரமும், திரண்ட செல்வமும் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நினைக்க நினைக்க, மனிதர் ஒழுக்கம், ஞானம், வீரம் முதலியவைகளில் எனக்கிருந்த மதிப்பு குறைவதாயிற்று

அந்த அரசன் விஷமுண்டிறந்தான் எனவும், அருகில் வேறெவரும் இல்லாத காலத்தில் அவ்வரசனுக்கும் இம்மந்திரிக்கும் இன்னவாறு சம்பாஷணை நடந்ததென்றும், எல்லாவற்றையும் நேரிற்கண்டவர்கள் போலவும் கேட்டவர்கள் போலவும், தமக்குத் தோற்றியவற்றை எழுதி இது உண்மை வரலாறெனவும், அந்தரங்க சரித்திரம் எனவும் பட்டஞ் சூட்டும் சிலருடைய துஷ்டத்தனமும் அறியாமையும் நன்கு விளங்கின. உலகம் அதிசயிக்குமாறு நேர்ந்த பல பெரிய சம்பவங்கள் உண்டான வகையை உள்ளவாறறிந்தேன். ஒரு ஸ்திரீயால் பிரதான மந்திரிகள் ஆளப்படுவதும், பிரதான மந்திரிகளால் ஆலோசனைச் சபையார் ஆளப்படுவதும், ஆலோசனைச் சபையாரால் உலகம் அரசாளப்படுவதும் கூடும் என்பதை யுணர்ந்தேன். ஒரு சேனாபதி தம்முடைய கோழை மனத்தாலும் ஒழுக்கவீனத்தாலுமே தாம் வெற்றியடைந்ததாகக் கூறினார். ஒரு தளகர்த்தர் தாம் அறியாமையாற் செய்த காரியத்தால் பகைவரைத் தோற்கடித்ததாகக் கூறினார். மூன்று அரசர்கள், தம்முடைய அரசாட்சியில், தாம் நம்பிய மந்திரிகளுடைய சதியோசனையாலும் துர்ப்புத்தியாலும் ஒவ்

வொருகால் மேதாவியர்களை ஆதரிக்க நேர்ந்ததே யன்றி, மனமார ஒருமேதாவியரையாவது ஆதரித்ததில்லை யென்று என்னிடம் ஒளியாது உரைத்ததுமன்றி, இனி ஒருகால் தாங்கள் அரசாட்சியை ஏற்க நேருமானால், மேதாவியர்களை அருகில் வரவிடுவதில்லை யெனவும் கூறினார்கள். மேலும் தகுந்த ஆதாரங்களைக்கொண்டு, ஒழுக்கக் குறைவின்றி அரசு நிற்காதென்று ரூபித்துக் காட்டினார்கள்.

பிறகு, அனேகர் பெரும் பட்டங்களும் சிறந்த பதவிகளும் அடைகிறார்களே, அது எவ்வாறென்று அறிய விரும்பினேன். இந்த விஷயத்தைப்பற்றிச் சமீபகாலத்திலுள்ளவர்களையே விசாரித்தேன். ஆனால் தற்காலத்து நிலைமைக் கிளரவில்லை. ஏனெனில், என் தேசத்தாருக்காயினும், அயல் தேசத்தாருக்காயினும் மனோவருத்தம் உண்டாக்க எனக்கு விருப்பமில்லை. இப்பொழுது நான் கூறப்போவது என் தேசத்தாரைப்பற்றி மாத்திரமல்ல வென்பதை இதை வாசிப்பவர்கள் அறிந்துகொள்வார்களென்றெண்ணுகிறேன். நிற்க, மேற்குறித்த விசாரணைக்காகப் பலரை வரவழைத்தேன் அவர்களைக் கொஞ்சம் பரீட்சித்ததுமே எனக்கு அவர்கள்மீது மிகவும் அசுசி உண்டாயிற்று. பெருமையடைவதற்கு அனுசரிக்கப்படும் சாதனங்களுள், பொய்மை, தயையின்மை, மோசம், வஞ்சகம் இவைபோன்றன சாதாரணமானவைகளாம். இவைகளோடு போகவில்லை. சிலர், தமது பெருமைக்குச் சாதனமாயிருந்தவை, கொடுங்கொலை, ராஜ துரோகம், தேசத்துரோகம், நீதிபிறழச்செய்து எளியோரை வருத்துதல் என்னும் இவைபோன்றன வெனக் கூறக் கேட்டபோது, பெரும் பதவியிலுள்ளவர்களிடத்து எனக்கு இயற்கையாக உள்ள

மதிப்பு குறைவதாயிற்று. மேலான பதவியில் உள்ளார்க்குத் தாழ்ந்த பதவியிலுள்ளவர்களாகிய நாம் மரியாதை செய்ய வேண்டுவதே நியாயமாயினும், இவர்கள் அடைந்துள்ள பதவிக்கு மூலகாரணங்கள் முன் குறிப்பிட்டவாறு அவ்வளவு கேவலமாக விருக்குமாயின் அவர்களிடத்து எனக்கு அருவருப்புண்டாவது குற்றமாகாதென்று நம்புகிறேன்.

நற்காரியங்கள்செய்து துன்ப மனுபவித்த பலரைக் கண்டேன். அவர்களுள் ஒருவர் விஷயம் மிகவும் நூதனமாயிருந்தது அவரை நான் பார்த்தபோது அவருக் கருகே சுமார் பதினெட்டு வயதுள்ள வாலிபன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவர் என்னிடம் சொன்னதாவது: "நான் அனேக வருஷங்களாக ஒரு கப்பலுக்குத் தலைமை வகித்திருந்தேன். அக்டியம் கடற்சண்டையில் ஏதோ அதிஷ்டவசத்தால், எதிரியின் கப்பற்படைகளிடையே புகுந்து அவர்கள் கப்பல்களுள் சிறந்த மூன்றை முழுக்கடித்து விட்டேன்; நாலாவது கப்பலொன்றையும் பிடித்தேன். அது ஒன்றே அண்டோனி ஓடியதற்கும் நாங்கள் ஜயமடைந்ததற்கும் காரணம். எனது ஏகபுத்திரனை இதோ என் அருகில் நிற்கும் வாலிபன் இந்த யுத்தத்தில்தான் இறந்தான். யுத்தம் முடிந்தபிறகு, நான் எனது வீரத்தன்மையிற் சிறிது பெருமையுற்றவனாக, ரோமதேசம் சென்று, அகஸ்டஸ் சமுகத்தில் எனக்கு வேறொரு பெரிய கப்பலில் தலைமை வகிக்கும் உத்திபோகம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்தப் பெரிய கப்பலின் தலைவர் யுத்தத்தில் இறந்துவிட்டார். என்னுடைய வேண்டுகோளைப் பொருட்படுத்தாது, நான் அடையவிரும்

பிய உத்தியோகம், லிபேர்ட்டினுவின் குமாரனும், அது வரையிற் கடலையே பார்த்திராதவனுமாகிய ஒரு சிறு பையனுக்குக் கொடுக்கப்பட்டது. அதன்மேல் நான் திரும்பி எனது பழைய உத்தியோகத்திற்குச் சென்றபோது, நான் என் கடமையை அலட்சியம் செய்துவிட்டதாகக் குற்றஞ் சாட்டப்பெற்றேன். அதனால் அவ்வேலையினின்று நீங்க நேரிட்டு, ரோமாபுரிக்கு வெகுதூரத்திலுள்ள ஒரு சிறு கிராமத்திற்குச்சென்று அங்கேயே என் குறை ஆயுளையும் கழித்தேன்.''

இவ் வரலாறு எவ்வளவு தூரம் உண்மையென்று அறிய எனக்கு மிகவும் ஆவலிருந்தது. ஆதலால், அவ்வரலாற்றிற் கூறப்பட்ட யுத்தத்தில், தளகர்த்தராயிருந்த **அக்ரிப்பா** என்பவரை வரவழைத்தேன். அவர் தோன்றி அவ்வரலாற்றின் உண்மையை ஸ்திரப்படுத்தினர்.

தோன்றிய ஒவ்வொருவரும் தாம் உலகத்தில் ஜீவித்திருந்த காலத்தில் எவ்விதமா யிருந்தார்களோ அவ்விதமாகவே காணப்பட்டார்கள். அவர்களைக் கண்ட பிறகு, சென்ற ஒரு நூற்றாண்டுக்குள்ளாக, மனிதவர்க்கத்தைச் சார்ந்த நாம் எவ்வளவு சீர்குலைந்துவிட்டோ மென்பது எனக்கு நன்றாய்த் தெரிந்தது. அதை நினைக்க நினைக்க மனத்துக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று.

கடைசியாக, பழையகாலத்து இங்கிலீஷ் குடியானவர்களைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினேன். அப்படியே அவர்கள் தோன்றியபோது அவர்களுடைய கள்ளங் கபடமற்ற ஒழுக்கமும், ஆடம்பரமற்ற ஊண் உடைகளும், நியாயநெறியும், உண்மையான சுதந்தர புத்தியும், வீரமும், தேசாபிமானமும் என் மனத்தைக் கவர்ந்தன. இறந்து

போன அவர்களையும், தற்காலத்தில், தமது சுதந்தரத்தை யும், ஒழுக்கத்தையும், கேவலம் பொன்னுக்கும் பொருளுக் கும் விற்றுப் பெருமையிழந்து உயிர் வாழ்ந்திருக்கும் அவர் கள் சந்ததியார்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது என் மனம் மிகவும் நெகிழ்ந்தது.

# ஒன்பதாம் அத்தியாயம்

நாங்கள் புறப்படும் நாள் வந்துசேர்ந்தது. நான் க்ளுப் பேட்ரிப் தீவின் அரசரிடம் விடைபெற்றுக்கொண்டு, என் தோழர்கள் இருவரோடும் புறப்பட்டு, மல்டானேடா போய்ச்சேர்ந்தேன். அப்பால், பதினைந்து நாட்கள் கழித்து லக்நாக் செல்வதற்கு ஒரு கப்பல் சித்தமாயிற்று. என் தோழர்கள் இருவரும் மற்றும் சிலரும் மிகவும் பட்சத்தோடு, கப்பலில் எனக்கு வேண்டியிருந்த உணவுகளைச் சித்தம்செய்து கொடுத்ததுமன்றி என்னைக் கப்பலிற் கொண்டுவந்து ஏற்றிப் பிரயாணப்படுத்தி யனுப்பினார்கள். இந்தப் பிரயாணத்தில் நான் ஒரு மாதகாலம் கப்பலில் இருக்கவேண்டியிருந்தது. 1708-ஆம் வருஷம் ஏப்ரல்மீ 21உ லக்நாக் தீவிற்குத் தென்கிழக்கே க்ளமேக்நிக் என்னும் துறைமுகத்தில் உள்ள ஆற்றின் முகத்துவாரத்தில் கப்பலைச்செலுத்தி, பட்டணத்திற்கு ஒரு லீக் தூரத்தில் நங்கூரம் பாய்ச்சி, துறைமுகத்துக்கு எம் வரவைக் குறிப்பித்தோம். சற்றுநேரத்தில் துறைமுக வழிகாட்டிகள் இருவர் எம் கப்பலுக்கு வந்து பட்டணத்தை நெருங்கக் கப்பலை செலுத்துவதற்கு வழிகாட்டினார்கள். அவ்வாற்றின் முகத்துவாரத்தில் கருங்கற்பாறைகள் இங்குமங்கும் மிகுந்திருந்தன வாதலால் கப்பல் மிக ஜாக்கிரதையாய்ச் செல்ல நேர்ந்தது.

அந்தக் கற்பாறைகளை யெல்லாம் கடந்து கப்பல் பத்திரமாய்க் கரையை யடைந்தது. எங்களுக்கு வழிகாட்ட

வந்த இருவரிடத்திலும், கப்பலோட்டிகள் சிலர், நான் அந்நிய நாட்டானெனவும், பலவூர்களைச் சுற்றிப் பார்த்தவனெனவும் தெரிவித்தார்கள். அவர்கள் வஞ்சகமாக அவ்விதம் தெரிவித்தார்களோ, அன்றி கபடமற்றுத் தெரிவித்தார்களோ என்னால் சொல்லமுடியாது. அந்த வழிகாட்டிகள் இருவரும் அதைக்கேட்டு, துறைமுக அதிகாரி ஒருவரிடம் அதைச் சொன்னார்கள். அவர் நான் கரையில் இறங்கியதும், என்னைப் பரிசோதித்தார். பல்னிபார்பி சிறந்த வியாபார ஸ்தலமாதலால், கப்பலோட்டிகள், துறைமுக அதிகாரிகள் பலர்க்கு அவ்விடத்திய பாஷை நன்றாய்த் தெரிந்திருந்தது. என்னைப் பரிசோதித்த துறைமுக அதிகாரியும் அந்தப் பாஷையிலேயே என்னைப் பல கேள்விகள் கேட்டார். அவைகளுக்கெல்லாம் நான் கூடியவரையில் சுருக்கமாகவும் முன்னுக்குப் பின் முரணுமலும் விடையளித்தேன். ஆனால், என்னுடைய உண்மைத் தேசத்தை மறைத்து ஹாலண்ட் தேசத்தான் என்று கூறவேண்டியிருந்தது. ஏனென்றால் நான் ஜப்பானுக்குப்போக எண்ணமுடையவனா யிருந்தேன். அங்கு ஹாலண்ட் தேசத்தாராகிய டச்சுக்காரர் தவிர வேறு ஐரோப்பியர் எவரும் செல்ல உத்தரவுகொடுக்க மாட்டார்களென்பது எனக்குத் தெரியும். ஆதலால், நான் அந்த உத்தியோகஸ்தரிடம், கப்பல் வழிதப்பி என்னை பால்னிபார்பி கரையை அடுத்த கற்பாறை ஒன்றில் மோதி சிதறிவிட்டதாகவும், அந்தக் கற்பாறையில் நான் கடல் அலைகளால் தள்ளப் பட்டுக் கிடக்கும்பொழுது, லபுடா அல்லது பறக்குந்தீவினர் என்னைக்கண்டு தம் தீவில் எடுத்துச் சென்றதாகவும், அங்கு சிலநாட்களிருந்து பிறகு ஜப்பானுக்குப் பிரயாணப்

பட்டதாகவும், ஜப்பான் சேர்ந்தபிறகு அங்கிருந்து என் சுயதேசம் போய்ச் சேர்ந்துவிடக் கருதியிருப்பதாகவும் தெரிவித்தேன். இதைக்கேட்ட பிறகு அந்த உத்தியோகஸ்தர், தாம் என்னைப்பற்றி ராஜாங்கத்தார்க்கு உடனே எழுதுவதாகவும், அங்கிருந்து உத்தரவு வரும்வரையில் நான் காவலிலிருக்க வேண்டுமென்றும், உத்தரவு பதிஞன்கு நாட்களுக்குள் வந்துவிடுமெனவும் தெரிவித்தார். அந்தப்படியே என்னை ஒரு ஜாகையில் கொண்டுபோய் விட்டு, வாசலில் ஒரு சேவகனைக் காவல் வைத்துவிட்டார்கள். ஆனால் ஜாகை செளகரியமா யிருந்தது ; அதைச் சுற்றிலுமிருந்த பெரிய தோட்டத்தில் நான் தாராளமாய்ப் போகவர சுதந்தரமுள்ளவனுக விருந்தேன் ; ராஜாங்கச் செலவிலேயே எனக்கு வேண்டிய உணவு முதலியவைகள் குறைவின்றித் தரப்பட்டன ; உத்தியோகஸ்தர்கள் என்னிடம் மிகவும் பட்சமாகவே நடந்து வந்தார்கள். நான் வெகு தூரத்திலுள்ள தேசத்திலிருந்து வந்திருப்பதாகத் தெரிந்து, என்னைப் பார்க்கப் பலர் வந்துகொண்டிருந்தனர்.

நான் வந்த கப்பலில் என்னோடு வந்த ஓர் இளைஞனை, நான் துபாஷியாக என்னிடம் வைத்துக் கொண்டேன். அவன் லக்நாக்கில் பிறந்தவனே. ஆனால் மால்டானோடா வில் சிலகாலம் வசித்தவனுகையால், இரண்டு பாஷைகளும் தெரிந்தவனுக இருந்தான். அவனுடைய உதவியால், என்னைப் பார்க்க வந்தவர்களிடம் நான் சம்பாஷிக்க இயன்றது. இந்த சம்பாஷணை யெல்லாம் கூடி அவர்கள் கேள்விகளும் எனது விடைகளுமே.

நாங்கள் எதிர்பார்த்த காலத்திலேயே, ராஜாங்கத்திலிருந்து உத்தரவு வந்தது. அந்த உத்தரவில், நானும்

என்னைச் சேர்ந்தவர்களும், ட்ரால்ட்ரேக்டுப் அல்லது ட்ரில் ட்ரோக்ட்ரிப் (இருவகை யாகவும் உச்சரிக்கிறார்கள்) என்னும் தலைநகர்க்கு, பத்துக் குதிரைச் சேவகர்கள் காவலோடு கொண்டு வரப்படவேண்டு மென்று குறித்திருந்தது. என்னைச் சேர்ந்தவர்கள் யார்? எனக்குத் துபாஷியாக விருந்த இளைஞன் ஒருவன்தான். அவனை நான் என்னுடனே வரும்படி வற்புறுத்தினேன். என்னுடைய வணக்கமான வேண்டுகோளுக்கிணங்கி, அதிகாரிகள் எனக்கும் அவ்விளைஞனுக்கும் ஏறிச் செல்வதற்கு ஒவ்வொரு கோவேறு கழுதை கொடுத்தார்கள். எங்களுக்கு முன் அரைநாட் பிரயாணத்தில், எனது வருகையை அறிவிக்குமாறு ஒரு தூதன் அனுப்பப்பட்டான். அவன் சென்று அரசனிடம் எனது வருகையைத் தெரிவித்து, மாட்சிமை தங்கிய அரசர் அவர்கள், தமது திருப்பாத தூளியை நக்கும் கௌரவத்தை எனக்கு அளிப்பதற்கு விரும்பும் ஒரு தினத்தையும் மணியையும் தெரிவிக்கும்படி, வேண்டுவானும். இதுவே ராஜாங்க பாஷைநடை. ஆனால் உண்மையில் நடப்பது இதற் கதிகமாகவுள்ளது. நான் குறித்தவிடம் சென்று சேர்ந்தேன். அதற்கு மூன்றும் நாள், நான் ராஜசமுகத்துக்குக் கொண்டுபோகப் பட்டேன். அங்கு சென்றதும் என்னை, மார்போடே நகர்ந்து, தரையை நாக்கால் நக்கிக்கொண்டே செல்லும்படிக் கட்டளையிட்டார்கள் ஆயினும் நான் அவ்வூர்க்குப் புதியவனாகையால், தரையில், அருவருக்கத்தக்க தூசிதும்பு இல்லாமல் சுத்தம் செய்துவைத் திருந்தார்கள். ஆனால், ராஜசமுகத்திற்குச் செல்லும் உயர்ந்த அந்தஸ்துள்ள கனவான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு இந்த கௌரவம் கொடுப்ப

தில்லையாம். சில சமயங்களில், ராஜனைக் காணச் செல்வோர் ராஜசபையிலுள்ளவர்கள் எவருக்கேனும் விரோதியாகவிருந்தால், தரையில் வேண்டுமென்றே புழுதியைத் தூவி வைப்பார்களாம். ஒரு பெரிய தனவந்தர், தரையை நக்கிநக்கி ராஜசிம்மாதனத் தருகே வந்து எழுந்தபோது புழுதியை நக்கிவந்ததால் வாய்திறந்து பேசமுடியாது அவதிப்பட்டதை, நானே நேரில் பார்த்தேன். இதற்கு ஒரு வகையான பரிகாரமுமில்லை. ஏனென்றால், ராஜசமுகத்திலிருக்கும்பொழுது எவரும் கனைக்கவாவது, காறித்துப்பவாவது கூடாது. அங்கே, இன்னொரு வழக்கமிருந்தது. அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதாவது: ஓர் அரசன் தன்னுடைய பிரபுக்களில் எவருக்காவது மரணதண்டனை விதிக்க விரும்பினால், விஷங்கலந்த ஒரு வகைப்பொடியைத் தரையில் தூவச்செய்கிறான். அந்தப் பிரபு அதை நக்கிக்கொண்டு செல்வதால் விஷம் உள்ளிறங்கி அவரை இருபத்துநான்கு மணிநேரத்தில் கொன்றுவிடுகிறது. ஆனால் இவ் அரசர் மிகவும் சாந்த குணமுள்ளவர்; குடிகள் உயிரை ஜாக்கிரதையாகப் பார்ப்பவர். (இவ் விஷயத்தில் ஐரோப்பிய அரசர்கள் இவரைப் பின்பற்றினால் நல்லது.) ஆதலால், எவருடைய தண்டனைக்காகவாவது விஷத்தூள் தூவப்பட்டால், அந்த தண்டனையானதும், அவ்விடத்தை நன்றாய்ச் சுத்தம் செய்யும்படித் தம் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடுகிறார். வேலைக்காரர்கள் அதை நிறைவேற்றுவதில் சிறிது அஜாக்கிரதையாயிருந்தாலும் தண்டனைக் குள்ளாவார்கள். ஒரு முறை ஒரு வேலைக்காரன் ஒரு பிரபுவுக்காகத் தூவிய விஷத்தூளை அப் பிரபு நக்கியான பிறகு, தரையைச் சுத்தம் செய்யும்படி

கட்டளையிடப்பட்டான். அவன் அதைச்சரியாய் சுத்தம் செய்யாததால், வேறொரு பிரபு அரசனைக் காண வந்து தரையை நக்கிச் சென்றதில் விஷமூட்கொண்டு இறந்துவிட்டார். அதையறிந்த அரசர் அந்த வேலைக்காரனுக்குச் சவுக்கடி கொடுக்கும்படிக் கட்டளையிட்டார். ஆனால் சிறிதுநேரத்தில் கோபந்தணிந்து அவனுக்கு இட்ட தண்டனையை மன்னித்து இனி அவ்விதம் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாதென்று எச்சரித்து விட்டுவிட்டார். இது நிற்க,

நான் தரையை நக்கி நக்கி நகர்ந்துகொண்டே, சிம்மாதனத்துக்கு நாலுகஜ தூரத்திற்போய்ச் சேர்ந்ததும், மெதுவாய் எழுந்து முழங்காலிட்டு, நெற்றியை ஏழுமுறை பூமியிற்பட ஒற்றி ஒற்றி எடுத்து, முன்னாள் இரவு எனக்குக் கற்பிக்கப்பட்ட பின்வரும் வாக்கியத்தைச் சொன்னேன்: **இங்ப்ளிங் க்ளாப் த்ராப் ஸ்க்யு ட்ஸேரம் ப்ளிஹியாப் ம்லாஷ்ஞல்ட் ஜ்வின் ட்ஞட் பால்சப் ஹிஸ்தியாபாட் க்ர்ட் லுபாஷ்ட்.** ராஜ சமுகத்துக்குச் செல்லும் ஒவ்வொருவரும் இந்த ஸ்தோத்திர வாக்கியத்தைச் சொல்ல வேண்டுமென்பது அந்நாட்டுச் சட்டம். இதைத் தமிழில் பின் வருமாறு மொழி பெயர்க்கலாம்: "தெய்வீக அரச! நின் ஆயுள் சூரியன் காலத்தையும் பதினொன்றரை சந்திரன் காலத்தையும் கடந்து வளர்வதாக."

இந்த ஸ்துதியைக் கூறியதும் அரசர் என்னை ஏதோ கேட்டார். அது இன்னதென்று எனக்குத் தெரியாவிட்டாலும், எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டபடி நான் அக்கேள்விக்குப் பின்வருமாறு பதில் கூறினேன்: **"ட்ளுட் ட்ரின் யேலரிக் ட்வுல்டன் ப்ர்ட்டஸராட மிர்ப்டஷ்"**

இதன் சொற்பொருள், "என் நா எனது நண்பன் வாயி லிருக்கிறது" என்பதாகும். இதன் கருத்து 'எனது துபாஷியைக்கொண்டுவர உத்தரவாகப் பிரார்த்திக்கிறேன்' என்பதே அப்பால் எனது துபாஷியாகிய இளைஞன் ராஜ சமுகத்துக்குக் கொண்டுவரப் பட்டான். அவன் மூலமாக அரசர் ஒருமணி நேரமாக என்னைக் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் விடையளித்தேன். அரசர் என் கூட்டத் தில் மிகவும் விருப்புடையவராகி எனக்குத் தம் அரண்மனை யிலேயே ஒரு ஜாகை அமைத்துக்கொடுத்து வைத்துக் கொண்டு என் கைச்செலவுக்கும் மிகுந்த பொருள் கொடுத் தார்.

அரசர் ஆக்கினைக்கடங்கி நான் அந்நாட்டில் மூன்று மாதகாலமிருந்தேன். அவர் என்னை மிகவும் அன்பாகவும் கௌரவமாகவும் வைத்திருந்தாராயினும், நான் என் குறை நாட்களை மனைவிமக்களோடு கழிப்பதே நீதியும் புத்தி சாதுரியமுமாகுமெனக் கருதினேன்.

# பத்தாம் அத்தியாயம்

---

லக்நாக்கியர் அருளும் அடக்கமும் உடைய ஜனங்கள். ஆனால், சாதாரணமாகக் கீழ்நாட்டார்க்குள்ள தற்பெருமை அவர்களுக்கும் சிறிது இல்லாது போகவில்லை. இருந்த போதிலும், அவர்கள் அந்நிய நாட்டாரிடம்—அதிலும் அரசரால் பாராட்டப்படும் அந்நிய நாட்டாரிடம்—மிகவும் மரியாதையாக நடந்துகொள்கிறார்கள். மிகவும் உயர்ந்த வகுப்பாரில் அனேகர் எனக்குப் பழக்கமானார்கள். எனது துபாஷி எப்பொழுதும் என்னுடனேயே இருந்ததால், அவர்களோடு சம்பாஷிப்பது அதிக சிரமமில்லாதிருந்தது.

ஒருநாள், சிறந்த நண்பர்கள் சிலரோடு இருக்கும் போது, ஒரு கனவான் என்னை நோக்கி, "ஐயா, நீர் எங்கள் நாட்டு ஸ்ட்ரல் ட்ப்ரக்குகள் அல்லது சிரஞ்சீவிகளில் யாரையாவது பார்த்திருக்கிறீரா?" என்றுகேட்டார். நான், "பார்த்ததில்லை. அதென்ன அது? அற்ப ஆயுளுடைய மனிதர்களுள் சிரஞ்சீவிகளைப் பார்ப்பதென்றால் எப்படி? தயவு செய்து விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றேன். அதற்கு அவர் "சிலசமயங்களில், வெகு அபூர்வமாக, ஏதாவது ஒரு குடும்பத்தில் சிரஞ்சீவியாக ஒரு குழந்தை பிறப்பதுண்டு. அதற்கடையாளம் என்னவென்றால், அக்குழந்தையின் இடது புருவத்துக்கு நேராக நெற்றியில் வட்டவடிவான சிகப்புக்குறி ஒன்றிருக்கும். அந்தக் குறியிருந்தால், அந்தக் குழந்தைக்கு இறப்பில்லையென்பது நிச்சயம்" என்று சொல்லி அந்த வட்டக்குறியின் அளவையும் காண்பித்

தார். அது, ஓர அரைக்கால் ரூபா அளவு இருக்கும். ஆனால் அந்த வட்டம் என்றும் அவ்வளவினதாகவே இரா தாம். நாளாக நாளாக அகலமாகுமாம். நிறமும் வேறு படுமாம். எவ்வாறென்றால் குழந்தைக்கு பன்னிரண்டு வய தாகவும் அதன் நிறம் பச்சையாகுமாம். இருபத்தைந்து வயது வரையில் அதே நிறமாயிருந்து, பிறகு கருநீலமாயும், நாற்பத்தைந்தாம் வயதில் மிகக் கறுப்பாகவும், ஓர் அரை ரூபாயைவிடச் சற்றுப் பெரிதாகவும் மாறுமாம். அதற்கு மேல் ஒருவகையான மாறுதலும் உண்டாகாதாம். இன்னும் இப்பிறப்பைப்பற்றி அவர் சொன்னதாவது: "இவ்வகையான பிறவி அருமை. இவ்விராச்சிய முழுவதிலும், இவ்வகையான பிறவிகள், ஆண் பெண் இருவகையிலும் ஆயிரத்து நூறுக்குமேல் இராது. இத் தலைநகரில் உள்ளவை ஐம்பதுக்கு மேற்படா. இவ்வகையான குழந்தைகள் பிறப்பது இன்ன குடும்பத்தில்தா னென்று ஒரு நியதி இல்லை. இந்த ஸ்ட்ரல்ட்பிரக்குகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் தம்பெற்றோர்களைப் போலவே சிரஞ்சீவிகளாயிருக்குமென்பதில்லை; சாதாரண மனிதர்களைப் போலவே அற்ப ஆயுள் உள்ளவைகளாகவும் இருக்கும்."

இந்த வரலாற்றைக் கேட்கவும் எனக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. இவ்வரலாற்றைக் கூறியவர்க்கு, எனக்குத் தெரிந்த பால்னிபார்பி பாஷையில் நான் ஆனந்த மிகுதியால் வாய்விட்டு, "ஆ! இந்நாட்டார் எவ்வளவு பாக்கியசாலிகள்! பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களையும், நீதி நெறிகளையும், கலைஞானங்களையும் நன்குணர்ந்த முதியோர் எவ்வளவு பெயர் இவர்கள் நாட்டில் இருக்கின்றனர். அந்த ஸ்ட்ரல்ட்ப்ர்க்குகளைப் போல்

புண்ணியசாலிகள் வேறு எவர்? சதா இறப்பை நினைத்து நினைத்து மனமொடிந்து போகாது, இறப்பு நேரும் என்ற பயம் அணுத்துணையும் இல்லாது, கவலைபற்ற மனத்தினரா யிருக்கும் அவர்களன்றோ பிறந்து பயன்பெற்றவர்கள்'' என்றேன். ஆனால் எனக்கு மற்றொரு விஷயம் ஆச்சரிய மாகத் தோற்றியது. இந்த அரும்பிறவி வாய்ந்தவர் எவ ரையும் நான் ராஜசமுகத்திற் பார்த்ததே இல்லை. எவரே னும் இருந்தும், நான் கவனியாதிருந்திருக்கலாம் என்று நினைப்பதற்கும் இடமில்லை. ஏனென்றால், நெற்றியில் ஓர் அரை ரூபாய்க்குமேல் பெரிதான கறுப்பு வட்டக்குறி ஒன்று எவர்க்கேனும் இருந்தால், அவ்வளவு அதிசயமான மனிதரை கவனியாதிருக்க முடியுமா? மேலும், அரசர் மிக வும் புத்திமான். அப்படிப்பட்டவர், நெடுங்காலமாய் உயிர் வாழ்ந்திருப்பதால் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந் திருக்கவேண்டிய அந்த ஸ்ட்ரல்ப்ரக்குகள் பலரைத் தம் ஆலோசனை சபையில் வைத்திராமலிரார். ஆனால் மற் றொரு விஷயம் கவனிக்கவேண்டி யிருந்தது. இந்த முதி யோர்கள், சற்றும் பிசகாத ஒழுக்கமுடையவர்களா யிருப் பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ராஜ கிரகங்களில் காணப்படும் ஒழுக்கக் குறைவுகளும், சிற்றின்ப மிகுதியும் அருவருப்பாயிருக்கும். அன்றியும், இளைஞர்கள் மமதை யுள்ளவர்களாய், பட்டுத்தேறிய பெரியோர் புத்திமதிகளைக் கேட்டு நடக்க மனமில்லாதவர்களா யிருப்பதை நாம் அனு பவத்தில் பார்க்கிறோம். ஆயினும், அரசர் என்னிடத்தில் நெருங்கிப் பேசுவதுண்டாகையால், நான் அவரை மறு முறை பார்க்கும்பொழுது, இவ்விஷயத்தைப்பற்றி எனக் குள்ள அபிப்பிராயத்தைச் சிறிதும் ஒளியாமலும், விளக்க

மாகவும், என் துபாஷியின் உதவியைக்கொண்டு சொல்வதாகத் தீர்மானித்தேன். அரசர் நான் சொல்வதைச் செவியேற்றாலும் ஏற்காவிட்டாலும், ஒன்றுமட்டும் நிச்சயப்படுத்திக்கொண்டேன். அதாவது, அரசர் என்னைப் பலமுறை, தம் நாட்டிலே இருந்துவிடும்படிக் கூறியுள்ளதால், இப்பொழுது அவர் விருப்பப்படியே இருந்து இந்த ஸ்ட்ரல்ட்ப்ரக்குகளாகிய புண்ணியசாலிகள் சிநேகம் கிடைக்குமானல், அவர்களோடு நெருங்கிப் பழகி என் குறை ஆயுளைக் கழிப்பதென்பதே.

எனது விருப்பத்தை இச்சிரஞ்சீவிகளைப்பற்றி எனக்குச் சொல்லிய கனவானிடம் நான் தெரிவித்தபோது, அவர் புன்னகையோடு என்னைநோக்கி, "நல்லது, எப்படியாவது நீர் எங்கள் நகரில் இருந்தால் எங்களுக்கு மிகவும் சந்தோஷமே. நீர் கூறியவற்றை இந் நண்பர்களுக்குத் தெரிவிக்கட்டுமா?" என்றார். ஏனெனில், மற்ற நண்பர்களுக்கு நான் பேசியபாஷை தெரியாததலால் நான் கூறியவை அவர்களுக்குப் பிரிந்திராது. "அப்படியேசெய்யுங்கள்" என்றேன் நான். அவர் அப்படியே செய்தார். அவர்கள் எல்லோரும் தங்கள் பாஷையில் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த பாஷையில் எனக்கு ஒரு வார்த்தைகூடத் தெரியாததலால், அவர்கள் பேசியது சிறிதும் விளங்கவில்லை. என் கருத்துக்களைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவர்கள் முகக்குறியால் கண்டுபிடிக்கவும் கூடவில்லை. அவர்கள் பேசிமுடித்துச் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்கள். அப்பால் என்னிடம் முன் பேசியவரே, என்னை நோக்கி, "ஐயா, உம்முடைய அபிப்பிராயங்களைக் கேட்டு என் நண்பர்

களும் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். நீர், இந்த ஸ்ட்ரல்ட்ப்ரக்குகளில் ஒருவராகப் பிறந்திருந்தால் எவ்வாறு ஜீவிப்பீர் என்று அறிய விரும்புகிறார்கள்" என்றார்.

அதற்கு நான் பின்வருமாறு பதில் கூறினேன்: "அதைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் கூறலாமே. அதிலும், நான் பலசமயங்களில், ஓர் அரசனாகவோ, அல்லது ஒருபெரிய பிரபுவாகவோ, அல்லது ஒரு படைத்தலைவனாகவோ நான் பிறந்திருந்தால் இன்னின்னவாறு நடப்பேன் என்று எனக்குள்ளாக யோசித்துக் கொள்வதுண்டு. இந்த இறவா வாழ்க்கையைப்பற்றியோ, நான் பலமுறை நினைத்து நாம் என்றும் இறவாதிருந்தால் இன்னின்ன காரியங்களைச் செய்யலாமென்று எண்ணியதுண்டு. ஆதலால், அவ் வெண்ணங்களையே இப்பொழுது சொல்கிறேன் கேளுங்கள்:

"முதல் முதல், என்னென்ன சாதுரியத்தால் பொருள் தேடக்கூடுமோ, அந்தந்த வகைகளாலெல்லாம் முயன்று பொருள் சப்பாதிப்பேன். அப்படிச் சம்பாதிப்பதோடு, சிக்கனமாக, அவசியம் செலவழிக்கவேண்டிய விஷயங்களுக்குமட்டும் பொருளைச் செலவழித்து, எஞ்சியதைச் சேர்த்து வைப்பதால், சுமார் இருநூறு வருஷங்களுக்குள் இவ்விராச்சியத்திலுள்ள செல்வர்களுக்கெல்லாம் மேலான பெருஞ் செல்வவந்தனாகி விடுவேன். இரண்டாவது, சிறு வயது முதற்கொண்டே சகல சாஸ்திரங்களையும் முயன்று கற்றுக் கூடிய விரைவில், மற்றெல்லாரையும் விட சிறந்த பண்டிதனாகிவிடுவேன். கடைசியாக, உலகத்தில் நடக்கும் முக்கியமான சம்பவங்களை அவ்வப்போது மிகவும் ஜாக்கிரதையாக எழுதி வைத்துக்கொள்வேன்; தலைமுறை தலை

முறையாக வரும் அரசர், மந்திரிகள், பிரதானிகள் முதலியவர்கள் சரித்திரங்களை பட்சபாதமின்றி எழுதி, ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் என்சொந்த அபிப்பிராயத்தையும் குறித்துவைப்பேன். ஆசார அனுஷ்டானங்கள், ஊண் உடைகள் முதலியவைகள் காலத்துக்குக் காலம் மாறுவது இயல்பாதலால் அவைகளை அவ்வப்பொழுது எழுதி வைத்துக்கொள்வேன். இவ்வாறு பலவிஷயங்களைப் பற்றி ஆதார பத்திரங்கள் என்னிடம் இருக்குமாகையால், நான் சர்வஞான களஞ்சியமாய்விடுவேன்.”

“அறுபது வயதுக்கப்பால் விவாகமே செய்துகொள்ள மாட்டேன். பரோபகாரமாக இருப்பேன். ஆனால் பண விஷயத்தில் சிக்கனமாகவே இருப்பேன். சிறுவர்களுக்கு என் அனுபவஞானத்தால், நல்லொழுக்கத்தின் நலத்தைத் தெளிவாய் எடுத்துக்காட்டி நெறிதவறாதிருக்கச்செய்வேன். ஆனால், என்னைப்போன்ற சிரஞ்சீவிகளுடன்தான் நெருங்கிப் பழகுவேன். அவர்களிலும் என்னோடு சதா இருக்கக் கூடியவர்களாக, வெகு காலத்துக்கு முன் பிறந்தவர்கள் தொடங்கி, என்காலத்திற் பிறந்தவர்கள் வரையிலுமுள்ளவர்களில் சிறந்தவர்களாகப் பன்னிரண்டு பெயரைத் தெரிந்தெடுத்துக்கொள்வேன் அற்ப வாழ்நாளுடைய உங்களில் மிகவும் நல்லவர்களாகப் பார்த்துச் சிலரைத்தான் எனது சகவாசத்திற் கேற்றவர்களாக வைத்துக்கொள்ள இணங்குவேன். ஆனால், ஒருவன் தான் வளர்க்கும் புஷ்பச்செடியொன்று பட்டுப்போமானால், அதையொரு பொருட்படுத்தாது எடுத்தெறிந்துவிட்டு, வேறுசெடி வைத்துக்கொள்வதுபோல, எனது ஆயுளின் நீட்சியானது என் மனத்தைக் கடினப்படுத்தி உங்களைப்போன்ற அற்ப ஆயுளாளர் எவ

ரேனும் இறந்தால் அதைப்பற்றி வருத்தமுறாது, அல்லது அதிக வருத்தமுறாது செய்துவிடும்.

"இதையல்லாமல், உலகத்தில் உண்டாகும் புரட்சிகளைக் காண்பதால் உண்டாகும் இன்பம் எவ்வளவு! பெரும் பட்டணங்களாயிருந்தன எத்தனை அழிந்து பாழாய்ப் போகின்றன! எத்தனை குக்கிராமங்கள் பெரும்பட்டணங்களாகின்றன! கடல்கள் நிலமாகின்றன; நிலங்கள் கடலாகின்றன. எத்தனை நிலப்பகுதிகள் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படுகின்றன! காட்டு மனிதர் எவ்வளவு நாகரீகர்களாகின்றனர்!

"வானசாஸ்திரத்தில் எவ்வளவு நூதன விஷயங்கள் கண்டுபிடிக்கலாம்! எவ்வாறென்றால், இத்தனை வருஷங்களுக்குப் பின் இன்னின்ன கிரகங்கள் இவ்வாறு மாறும் என்று சோதிடர் கணிப்பதன் உண்மையை, நேரிலேயே பரீட்சித் தறியலாமன்றோ?"

இன்னும் இவ்வகையாகவே, பலவிஷயங்களைப் பற்றியும் விரிவாயெடுத்துரைத்தேன். நுண்ணிய இன்பானுபவத்தோடு கூடிய இறவா வாழ்க்கையில் இயற்கையாக உள்ள இச்சையால் எனக்கு இவ்விஷயங்களெல்லாம் தோன்றின. நான் கூறவேண்டுவனவற்றை யெல்லாம் கூறி முடித்தபிறகு, முன்போலவே என் நண்பர் தாம் கேட்டவைகளின் சாராம்சத்தைத் தம் மற்ற நண்பர்களுக்குத் தமது பாஷையில் கூறினர். பிறகு அவர்கள் எல்லோரும் கூடி ஏதேதோ பேசிக்கொண்டார்கள். இடையிடையே என்னைக் கடைக்கண்ணால் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். அப்பால், என்னோடு பேசிய கனவான், என்னைநோக்கிப் பின்வருமாறு கூறலாயினர்:

"ஐயா, மனிதர்க்குச் சிலவிஷயங்களில் அறிவு விளங்காதிருத்தல் இயல்பே. ஆதலால் நீர்கொண்டுள்ள சில தப்பபிப்பிராயங்களைத் திருத்தும்படிக் கூறுகிறார்கள். இந்த ஸ்ட்ரல்ட்ப்ரக்குகள் இந்த நாட்டில் தவிர வேறெந்த நாட்டிலும் இல்லை. பால்னிபார்பியிலாவது ஜப்பானிலாவது இவ்வகையான மனிதர்கள் இல்லை. இவ்விரண்டு நாடுகளிலு முள்ளவர்கள் இவ்விஷயத்தை நம்புவதற்குக் கூடப் பின் வாங்குகிறார்கள். ஆனால் இந்த இரண்டு நாடுகளிலு முள்ளவர்களோடு இவ்விஷயத்தைப் பற்றிப் பேசியதில், இறவா வாழ்க்கையில், மனிதர் எல்லோர்க்கும் இச்சை இருப்பதாகத் தெரிகிறது. யமன் வீட்டுவாயிலில் வந்த பிறகுங்கூட, அவன் கைக்ககப்படாமல் தப்ப மனிதர் ஒவ்வொருவரும் எவ்வளவு ஆவலோடு முயல்கின்றனர்! மிகவும் வயது முதிர்ந்தவர்களுங் கூட, மரணமென்றால் மனம் நடுங்கி, அது தம்மை நெருங்கிய காலத்தும் இன்னும் ஒருநாள் இவ்வுலகில் உயிர் தரித்திருக்கமாட்டோமா' என்றெண்ணி ஏங்குகின்றனர். ஆனால் இந்த லக்நாக் தீவில் மட்டும் அவ்வாறில்லை. ஏனென்றால், என்று மிறவா ஸ்ட்ரல்ட்ப்ரக்குகளின் நிலையைப் பார்க்கப் பார்க்க, இறப்பின்மீது அவர்களுக்கு வெறுப்புத் தோன்றுவதில்லை.

"நீர் சொல்லுகிறபடி உயிர்வாழ்தல் இயற்கைக்கும் விரோதம்; இயல்வது மாகாது. நீர் சொல்லுகிறபடி பார்த்தால், உயிர் மாளாதிருந்தால், ஊக்கமும் இளமையும் மாறாதிருக்கவேண்டும். அவ்வாறிருக்கக் கூடுமென்று மிகுந்த அறிவினனும் எண்ணமாட்டானே. ஆதலால், இப்பொழுதுள்ள விஷயம், ஒருவன் என்றும் இளமையோடிருக்க இயலுமா என்பதல்ல; முடிவற்ற ஆயுளைப் பெற்

ஞன் ஒருவன், முதுமைப் பருவத்தால் நேரும் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு தன் காலத்தை எப்படிக் கழிப்பான் என்பதே. முதுமையால் நேரும் துன்ப துயரங்களுக்காளாகி என்றும் உயிர் தரித்திருக்க விரும்புவோர் அதிகம் இரார். ஆயினும், எங்கள் நாட்டைத் தவிர மற்ற நாட்டில் உள்ளார் யாவரும் தமது ஆயுள்காலம் 'இன்னும் சிறிது நீட்டிக்கலாகாதா' இன்னும் சிறிது நீட்டிக்கலாகாதா' என்றே, என்றும் விரும்புகிறார்கள். இது நிற்க.

"எங்கள் தேசத்து ஸ்ட்ரல்ட்ப்ரக்குகளின் வாழ்க்கையைச் சொல்லுகிறேன் கேளும்: அவர்கள் முப்பது வயதுவரையில் சாதாரண மனிதர்களைப்போலவே வாழ்ந்து வருகிறார்கள். அப்பால் அவர்கள் மிகவும் கவலையும் மனக்கலக்கமு முடையவர்களாகிறார்கள். நாளடைவில் இந்தக்கவலையும் கலக்கமும் மிகுந்துகொண்டே வருகின்றன இந்நாட்டில் சாதாரண மனிதர்களுக்கு எண்பது வயது பூரண ஆயுளாகக் கருதப்படுகின்றது. முடியா ஆயுளுடைய ஸ்ட்ரல்ட்ப்ரக்குகள் இந்த எண்பதாவது வயதை அடைந்ததும், அதே வயதையடைந்த மற்றவர்களுக்கு இயல்பாக நேரும் தள்ளாமை, மனத்தடுமாற்றம் முதலிய சாதாரண குணக்கேடுகளோடு, இவ்வாழ்க்கை என்றும் ஒழியாதே என்ற ஏக்கத்தால் வேறுபல துர்க்குணங்களும் தோன்றுகின்றன. அவர்களுக்குப் பொறாமையும், நிறைவேற இயலாத இச்சைகளும் அதிகம் உண்டு. அவர்கள் பொறாமையெல்லாம் இளையோர் திளைக்கும் சிற்றின்பங்களிலும், முதியோர் அடையும் மரணானுபவத்திலுமே. இளையோர்களைக் காணும்போதெல்லாம் 'இவர்கள் அனுபவிக்கும் இன்

பங்களெல்லாம் நம்மால் அனுபவிக்க இயலாவே' எனவும், வீதியிற் பிணஞ் செல்லக்கண்டால், 'அந்தோ! அவரைப் போல் நாமும் இவ்வுடலைவிட்டு இளைப்பாறுவதற்கில்லையே' எனவும் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாவார்கள். அவர்களுக்குத் தம் பால யௌவன பருவங்களில் நிகழ்ந்தனவற்றை யொழித்து வேறெதுவும் ஞாபகத்தி லிருப்பதில்லை. பால யௌவன பருவகால நிகழ்ச்சிகள் கூட நன்றாய் ஞாபகத்தில் இருப்பதருமை. முன்காலத்தில் நடந்த விஷயங்களை அவர்களிட மிருந்து அறிவதை விட, கர்ண பரம்பரையான வழக்குகளிலிருந்தறிவது உத்தமம்.

"ஒரு ஸ்ட்ரல்ட்ப்ரக், தன் இனத்திலேயே ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொள்வானாயின், தம்பதிகள் இருவரில் இளையவர்க்கு எண்பது வயதானதும், அந்த விவாகம், ராஜாங்கத்தார் அனுமதியினால், ரத்துசெய்து விடப்படும். ஏனென்றால் இவ்வுலகத்தை விட்டு ஒழிய வழியின்றித் தவிக்கும் அவர்களுக்கு ஒரு மனைவியின் பாரமும் சேர்வது நியாயமல்லவென்றே.

"அவர்களுக்கு எண்பது வயதானபிறகு சட்டப்படி அவர்கள் இறந்தவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்கள் சொத்து சுதந்தரங்களில் தங்களுக்கு, இன்றியமையாது வேண்டப்படும் ஒரு சிறு பாகம் தவிர மற்றவை அவர்கள் இறந்துவிட்டால் நியாயப்படி யாரைச் சேரவேண்டுமோ அவர்களைச் சேர்ந்துவிடும். அவர்கள் எவ்விதமான தொழிலுக்கும் அருகராகார்கள். நிலம் முதலியவைகளை வாங்க வேணும், குத்தகைக்கு எடுக்கவேணும் பாத்திரராகார்கள்.

வியாச்சிய வழக்குகளில் அவர்கள் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இம்மட்டுமல்ல.

"எண்பது வயதுக்கப்பால், அவர்கள் ஞாபக சக்தியும் குன்றும்; ஊண் உடைகளில் வெறுப்புத் தோன்றும்; வியாதி மிகும்; புத்தகங்களை வாசித்தேனும் பொழுதைக் கடத்தலாமென்றாலோ ஒரு வாக்கியத்தை வாசித்துவரும் போதே முன் படித்ததெல்லாம் மறந்துபோகுமாதலால் அவ்வாக்கியப் பொருளை அறிந்துகொள்ள இயலாது. மேலும், இந்நாட்டுப் பாஷை அடிக்கடி மாறுவதியல்பாகை யால் ஒரு தலைமுறையில் வழங்கிய வார்த்தைகள் பல, மறு தலைமுறையில் வழக்கொழிந்துவிடும். இதனால் சுமார் இருநூறு வயதானபிறகு இந்த சிரஞ்சீவிகளுக்கு மற்றவர்க ளோடு பேசி தம் கருத்துக்களை வெளியிடவாவது, மற்றவர் கள் பேசுவதின் கருத்தை அறிந்து கொள்ளவாவது இய லாது. ஆதலால், இவர்கள் தம் நாட்டிலிருந்தும் அயல் நாட்டாரைப் போலாவார்கள்"

இவர்களைப்பற்றி இன்னும் பல விஷயங்களை என் நண் பர் கூறினர். பிறகு நான் இத்தகைய ஸ்ட்ரல்ட்ப்ரக்குகள் ஐந்தாறு பெயர்களைப் பார்த்தேன். அவர்கள் நிலை என் நண்பர் கூறியதுபோல மிகவும் பரிதபிக்கத் தக்கதாயிருந் தது. இங்ஙனம், இந்த சிரஞ்சீவிகளை நான் நேரிற்கண்ட பிறகு அழியா உயிர் வாழ்க்கையில் எனக்கிருந்த ஆவல் முற்றும் ஒழிந்தது. நான் கட்டிய மனக் கோட்டைகளை நினைக்க எனக்கே வெட்கமாயிருந்தது. என் நண்பர்களும் நானும் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததை அரசர் அறிந்து என்னைப் பரிகாசம் செய்தனர். நம்மு

டைய நாட்டில், பொதுவாக எல்லோர்க்குமுள்ள மரண-பயம் இந்த சிரஞ்சீவிகளில் இரண்டொருவரைக் கண்டால் ஒழியுமென்று கருதி, இவர்களில் இரண்டொருவரை ஊருக்குச் செல்லும்பொழுது, உடன்கொண்டு செல்லலாமென்றெண்ணினேன். ஆனால், அவர்களை அந்நாட்டை விட்டு வெளியே கொண்டுபோகக் கூடாதென்பது ராஜாங்கச்சட்டமாதலால், என் எண்ணம் ஈடேறுவதற்கிடமில்லை.

அந்நாட்டார், இந்த ஸ்ட்ரல்ட்ப்ரக்குகள் விஷயமாய் ஏற்படுத்தியுள்ள சட்டங்களனைத்தும் நியாயமாகவே இருந்தன. அவ்விதமான சட்டங்களில்லாவிட்டால் அவர்களால் பொது ஜனங்களுக்கு மிகவும் துன்பமுண்டாவது நிச்சயம்.

# பதினொன்றும் அத்தியாயம்

நான் எழுதிய ஸ்ட்ரல்ட்ப்ரக்குகளின் வரலாறு படிப்பவர்க்கு மிகவும் இன்பத்தை விளைக்குமென்று எண்ணுகிறேன். ஏனெனில் இது சிறிது நூதனமானது; என் கைக்கு எட்டிய யாத்திரை வரலாற்று நூல்களில் இதைப் போன்ற நூதன விஷயம் எதுவும் என் கண்ணிற்படவில்லை. ஆதலால், என் எண்ணம் தவறுதுமானால், அதற்குச் சமாதானமாக நான் சொல்லக்கூடியதெல்லாம், ஓரே தேச யாத்திரை வரலாற்றை எழுதும் வெவ்வேறு ஆசிரியர்கள் நூல்களில் ஒன்றுக்கொன்று விஷய வித்தியாசம் இராவிட்டால், அதனால் ஒருவர் நூலிலிருந்து விஷயங்களைக் கடன் வாங்கி மற்றவர் எழுதினாரென்று கருதுவது தவறாகுமென்பதே

இந்த நாட்டிற்கும், ஜப்பானுக்கும் வியாபார சம்பந்தமுண்டாதலால், ஜப்பானிய நூலாசிரியர்கள் எவரேனும் மேற்கூறிய ஸ்ட்ரல்ட்ப்ரக்குகளின் வரலாற்றை வரைந்திருத்தலும் கூடும் ஆனால் நான் ஜப்பானில் தங்கியது மிகவும் சொற்பகாலமாதலாலும், அவர்கள் பாஷை எனக்குச் சிறிதும் தெரியாதாகையாலும் அவர்களிடமிருந்து இந்த ஸ்ட்ரல்ப்ரக்குகளைப் பற்றி ஏதும் அறிந்துகொள்ள இயலவில்லை. ஆயினும், இவ்வரலாற்றைக் கண்டபிறகு டச்சுக்காரர்கள் இதில் காணப்படும் குற்றங் குறைகளை நீக்கிவிடுவார்களென நம்புகிறேன். இது நிற்க.

அரசர், தம் சமுகத்திலேயே நான் ஏதாவது ஓர் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கவேண்டுமென்று என்னிடம் பலமுறை கூறியும், நான் அதற்குச் சற்றும் இணங்கவில்லை. ஆதலால், நான் என் விருப்பப்படி எனது ஜன்மதேசம் போவதற்கு உத்தரவு கொடுத்தார். அன்றியும் நான் ஜப்பான்தேசம் சென்றே என் ஜன்மதேசம் செல்லவேண்டியிருந்ததால், ஜப்பானிய சக்கரவர்த்திக்கு என்னைச் சிபார்சு செய்து, தம் கைப்பட ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தார். அதை யல்லாமல், தம் நாட்டு நாணயத்தில் மிகப்பெரிதான நாற்பத்துநான்கு தங்க நாணயங்களும், ஒரு சிகப்புக் கல்லும் எனக்கு இனுமாகக் கொடுத்தார். இந்தச் சிகப்புக் கல்லை நான் இங்கிலாண்டு சென்றபிறகு ஆயிரத்துநூறு பவுனுக்கு விற்றேன்.

1709 - ஆம் வருஷம் மே மாதம் 6௳ நான் அரசரிடத்திலும், மற்ற நண்பர்களிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு அந்நகரைவிட்டுப் புறப்பட்டேன். அரசர் என் மீது தயைகூர்ந்து, அந்தத் தீவின் தென்மேற்குபாகத்திலுள்ள க்ளாங்யுபேன்ஸ்டால்ட் என்னும் ராஜத் துறைமுகத்தில், என்னைக் கொண்டுபோய் விட்டுவரும்படி சில சேவகர்களை என்னோடு அனுப்பினர்.

நான் அந்தத் துறைமுகத்தை அடைந்த ஆறுநாள் ஜப்பானுக்குச் செல்லும் கப்பல் ஒன்று சித்தமாயிருந்தது. அதில் ஏறிச்சென்றேன். பதினைந்து நாட்கள் கழித்துக் கப்பல், ஜப்பானுக்குத்தென்கீழ்ப் பாகத்திலுள்ள க்ஸாமாக்ஷி என்னும் துறைமுகத்தை யடைந்தது, அத்துறைமுகத்துக்கு வடமேற்கே யீடே என்னும் தலைநகர் இருந்தது. கரையிலிறங்கியதும், அங்கிருந்த துறைமுக அதிகாரிகளி

டம், லக்நாக் அரசர், ஜப்பான் சக்ரவர்த்திக்கு எழுதிய கடிதத்தைக் காண்பித்தேன். அந்தக் கடிதத்தில் அகங்கை அகலத்தில் முத்திரையைக் காணவுமே, அவர்கள் அது இன்னாரிடமிருந்து வந்ததென்று அறிந்து கொண்டார்கள் அந்நகரத்து நியாயாதிபதி, நான் கொண்டு சென்ற கடிதத்தைப்பற்றிக் கேள்வியுற்றதும், என்னை ஒரு பிரதான மந்திரியாகப் பாவித்து வரவேற்றார். பிறகு அவர்கள், தம் செலவிலேயே எனக்கு வண்டியமர்த்திச் சில சேவகர்கள் துணையோடு என்னை யீடோவுக்கு அனுப்பினார். நான் சக்கரவர்த்தியின் சமுகம் சென்று கடிதத்தைக் கொடுத்தேன். அதை ராஜதுபாஷி ஒருவர், மிகவும் பயபக்தியுடன் பிரித்து உள்ளுறையை வாசித்து, அரசர்க்கு அதை ஜப்பானிய பாஷையில் மொழி பெயர்த்துக் கூறினார். அரசர் அதைக்கேட்ட பிறகு, துபாஷி மூலமாக, எனக்கு வேண்டுவதைத் தெரிவித்தால் லக்நாக் அரசர் பொருட்டு அதை நிறைவேற்றி வைப்பதாகத் தெரிவித்தார். துபாஷி நான் ஐரோப்பியன் என்பதை என்முகத்தால் அறிந்துகொண்டு, டச்சு பாஷையில் அரசர் கூறியதைக் கூறினார். அதன்மேல் அவரிடம், நான் ஐரோப்பாவிலிருந்து வந்த ஒரு டச்சுக்கார வியாபாரி எனவும், திசைதப்பிக் கப்பல் ஒரு தூரதேசத்தில் என்னைக் கொண்டு போய்விட்டதெனவும், பிறகு நான் லக்நாக் அடைந்து அங்கிருந்து இங்கு வந்ததாகவும், நாங்கஸாக் துறைமுகத்தில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டு மென்றும் கூறினேன். ஜப்பானுக்குச் செல்லும் டச்சுக்காரர்களுக்கு ஒரு நிபந்தனை யிருந்தது. அதாவது, அவர்கள் கிறிஸ்தவ மத அறிகுறியாகிய சிலுவையைத் தம் காலில் கீழ்ப்போட்டு

மிதிக்கவேண்டு மென்பதே. அந்த நிபந்தனைக்கு என்னை உட்படுத்தக் கூடாதெனவும் கேட்டுக்கொண்டேன். அரசர் இந்த வேண்டுகோளைக் கேட்டபோது மிகவும் ஆச்சரியப் பட்டு ஒருசமயம் நான் கிறிஸ்தவனும் இருப்பேனோ என்று சந்தேகித்தாராம். ஏனெனில் அதுவரையில் அந்த நிபந் தனையை நிறைவேற்றப் பின்வாங்கிய டச்சுக்காரர் எவரு மில்லையாம். ஆயினும், லக்நாக் அரசருக்காக என் வேண்டு கோளுக்குச் சக்கரவர்த்தி இணங்கினர். ஆனால் இவ்விஷ யம் வெளியில் எவருக்கும் தெரியக்கூடாதென்றும், தாம் ஏதோ மறந்திருந்து விட்டதுபோ லிருக்கவேண்டு மென் றும் ஆக்ஞாபித்தார். ஏனெனில், டச்சுக்காரர் இவ்விஷ யத்தை அறிவார்களானால், கப்பலிற் செல்லும்போதே என் கழுத்தை முறித்துப் போட்டுவிடுவார்களாம். இதைக் கேட்டு நான் சக்கரவர்த்தியின் ஆக்ஞைப்படி நடப்பதாக வாக்களித்தது மன்றி, எனக்கு இத்துணை தயவு காட்டிய தற்காக எனது நன்றியறிதலையும் தெரிவித்தேன்.

அச்சமயம், நாங்கஸாக் செல்லச் சில போர்வீரர்கள் சித்தமாயிருந்தபடியால், நான் அவர்களோடு அனுப்பப் பட்டேன். இக்கப்பற் பிரயாணம் மிகவும் நீண்டதாகவு கஷ்டமாகவும் இருந்தது. 1709-ஆம் வருஷம் ஜூன்மீ 9உ நான் நாங்கஸாக் துறைமுகம் சென்று சேர்ந்தேன் அங்கே ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்திலிருந்து வந்த 'அ பாய்னு' என்னும் கப்பல் திரும்பி ஹாலண்டுக்குச் செல் தற்குத் தயாராக இருந்தது. நான் அந்தக் கப்பலில் ஏறி கொண்டேன். அதிலிருந்த டச்சுக்காரர்களெல்லாம் என க்குப் பழக்கமாகி, என்னுடைய வரலாற்றை அறிய விரு பினார்கள். நான் ஹாலண்ட் தேசத்தில் வெகுகாலம் வசி

ிருந்தபடியால், டச்சுபாஷை நன்றாய்ப்பேசுவேன். ஹால ன்ட் தேசத்தில் பலர் எனக்கு அறிமுகமானவர்கள் இருந் னர். ஆதலால் நான் அக்கப்பலில் இருந்தவர்கள் மன மைதியுறுமாறு என்னுடைய வரலாற்றை ஒருவாறு கூறி, னது தாய் தகப்பன்மார்கள் இன்னாரென எனக்குத் தரிந்த இரண்டு டச்சுப் பெயர்களைச் சொல்லிவைத்தேன்.

இந்தப் பிரயாணத்தில், இங்கு எழுதத் தக்கதான ம்பவங்கள் ஒன்றும் சம்பவிக்கவில்லை. காற்று அனுகூல ாயிருந்தது. நாங்கள் இடைவழியில், நல்ல தண்ணீர் டுத்துக்கொள்வதற்காக குட்ஹோப் முனையில் மட்டும் ற்று நின்றோம். 1710ஹு ஏப்ரல்மீ 10௳, கப்பல் ூம்ஸ்ட்டர்டாம் துறைமுகம் சேர்ந்தது. வழியில் வியா யால் இறந்த மூவரும், கினியாக் கரைக்கருகே கடலில் வறி விழுந்துவிட்ட ஒருவனும் ஆக நால்வரைத் தவிர, ற்ற யாவரும் சுகமே கரையிறங்கினோம், அப்பால் சில ட்களில், நான் ஆம்ஸ்டர்டாம் நகரைவிட்டு ஒரு சிறு ப்பலில் பிரயாணமாகி இங்கிலாந்துக்குச் சென்றேன்.

ஏப்ரல்மீ 16௳ டவுன்ஸை (Downs) அடைந்தோம். றுநாள் காலை, நான் ஐந்தரை வருஷத்துக்கு முன் விட்டுப் ரிந்த என் ஜன்மதேசத்தில் இறங்கினேன். அங்கிருந்து ரே ரெட்ரிப் (Redriff) நகருக்குப் புறப்பட்டு, அன்று ற்பகல் இரண்டுமணிக்கெல்லாம் அங்குசேர்ந்து, யாதொரு றைவுமின்றி க்ஷேமமாய் என்னை எதிர்பார்த்துக் காத் ருந்த, என்மனைவி மக்களைக் கண்டேன்.

முற்றிற்று.

# சிறுவர்களுக்கான கதைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | ப. |
| லிலிபுட் யாத்திரை | ... ... ... | 0 | 4 | 0 |
| பஞ்சதந்திரம் | ... ... ... | 0 | 4 | 0 |
| விவேக சந்திரிகை | ... ... ... | 0 | 4 | 0 |
| நாற்பது திருடர் கதை | ... ... ... | 0 | 3 | 0 |
| கதைக்கொத்து மலர் 1 | ... ... ... | 0 | 3 | 0 |
| ஷை மலர் 2 | ... ... ... | 0 | 3 | 0 |
| அல்லாவுதீன் | ... ... ... | 0 | 2 | 6 |
| விக்டோரியா நல்லரசி | ... ... ... | 0 | 2 | 6 |
| பாண்டவர் சூது | ... ... ... | 0 | 2 | 6 |
| சூராத் | ... ... ... | 0 | 2 | 0 |
| இரட்டை பிள்ளைகள் | ... ... ... | 0 | 2 | 0 |
| டிக் உட்டிங்க்டன் | ... ... ... | 0 | 2 | 0 |
| மாயூரம்-இடபதீர்த்தம் | ... ... ... | 0 | 2 | 0 |
| தெனாலிராமன் கதை | ... ... ... | 0 | 2 | 0 |
| நற்பழக்கம் | ... ... ... | 0 | 2 | 0 |
| மாயத் தாமரை | ... ... ... | 0 | 2 | 0 |
| மாயப்பொம்மை | ... ... ... | 0 | 2 | 0 |
| நீதிக்கோபுரம் | ... ... ... | 0 | 2 | 0 |
| மல்லிகா | ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்மயி | ... ... ... | 0 | 2 | 0 |
| இராதா இராணி | ... ... ... | 0 | 2 | 0 |
| மூன்று பரதேசிகள் | ... ... ... | 0 | 2 | 0 |
| சீலஸம்பன்னன் | ... ... | 0 | 2 | 0 |
| மனம்போல மாங்கலியம் | ... ... ... | 0 | 2 | 0 |
| வீரோனு நகரத்து விடர்கள் | ... ... | 0 | 2 | 0 |
| வேனீஸ்வர்த்தனை | ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிம்பலீன் ... ... ... | 0 | 2 | 0 |
| லீர்மகாராஜன் ... ... ... | 0 | 2 | 0 |
| மாக்பெத் ... ... ... | 0 | 2 | 0 |
| அரிச்சந்திரன் ... ... ... | 0 | 1 | 6 |
| ஆபத்தில் நேசன் ... ... ... | 0 | 1 | 6 |
| செங்கை வளவன் ... ... ... | 0 | 1 | 6 |
| ஆராயும் அங்குட்டன் கதை ... ... | 0 | 1 | 6 |
| போலி ராஜ குமாரன் ... ... ... | 0 | 1 | 6 |
| நல்ல பாடம் ... ... ... | 0 | 1 | 6 |
| செம்படவன் ... ... ... | 0 | 1 | 6 |
| வீண்வம்பு ... ... ... | 0 | 1 | 6 |
| ஜார்ஜ் மன்னன் விபவம் ... ... ... | 0 | 1 | 6 |
| கைமன் ... ... ... | 0 | 1 | 6 |
| ஈனக் ஆர்டன் ... ... ... | 0 | 1 | 6 |
| திலகவதி ... ... ... | 0 | 1 | 6 |
| அர்ஜுனன் தீர்த்தயாத்திரை ... ... | 0 | 1 | 6 |
| நல்ல பிள்ளைகள் ... ... ... | 0 | 1 | 0 |
| நல்ல சிநேகிதர்கள் ... ... ... | 0 | 1 | 0 |
| மூன்று தங்க மாம்பழங்கள் ... ... | 0 | 1 | 0 |
| மூன்று குமாரர்கள் ... ... ... | 0 | 1 | 0 |
| வெள்ளைப் பூனை ... ... .. | 0 | 1 | 0 |
| தோட்டக்காரன் ... ... ... | 0 | 1 | 0 |
| நான்கு பாடகர்கள் ... ... ... | 0 | 1 | 0 |
| நைட்டிங்கேல் அம்மையார் ... ... | 0 | 1 | 0 |
| பால நியாயாதிபதி ... ... ... | 0 | 1 | 0 |
| வர்த்தகன் ... ... ... | 0 | 1 | 0 |
| சண்டமாருதம் ... ... ... | 0 | 1 | 0 |
| நடுவேனிற் கனவு ... ... ... | 0 | 1 | 0 |
| மாரிக்காலக்கதை ... ... ... | 0 | 1 | 0 |
| துருவாஸரும் துரியோதனனும் ... ... | 0 | 1 | 0 |
| கடற்கரை வாஸம் ... ... ... | 0 | 1 | 0 |
| கூண்டுவிட்டுக் கூண்டுபாய்தல் ... ... | 0 | 1 | 0 |

| | | | |
|---|---|---|---|
| அதிசயமான கிளி | 0 | 1 | 0 |
| நாய்காட்டிய நல்லறிவு | 0 | 1 | 0 |
| தாளில்லாக் கதவு | 0 | 1 | 0 |
| அன்புள்ள சகோதரி | 0 | 1 | 0 |
| மூன்று பூதங்கள் | 0 | 1 | 0 |
| பச்சை தேவதை | 0 | 1 | 0 |
| மறுபடி முயற்சி செய் | 0 | 1 | 0 |
| கோவிந்தன் | 0 | 1 | 0 |
| சந்திரஹாசன் | 0 | 1 | 0 |
| வீணையும் சொல்லுமோ | 0 | [illegible] | 0 |
| க்ராகாலத்து சந்திரிகை | 0 | 1 | [illegible] |
| நல்ல மாப்பிள்ளை | 0 | 1 | 0 |
| கண்ணும் கண்ணீரும் | 0 | 1 | 0 |
| நளன் | 0 | 1 | 0 |
| கம்பன் | 0 | 1 | 0 |
| குசேலன் | 0 | 1 | 0 |
| புலவர் வறுமை | 0 | 1 | 0 |
| விநோதக் கூற்றுக்கள் | 0 | 1 | 0 |
| கண்ணப்பன் | 0 | 1 | 0 |
| காதர் அலி | 0 | 0 | 6 |

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

35 சின்னதம்பித் தெரு,

சென்னை.

# தமிழ் நவீன நாவல்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஞானசம்பந்தன் ... ... ... | 1 | 0 | 0 |
| பிருதிவி ராஜன் (நாடகம்) ... ... | 1 | 0 | 0 |
| மனோரஞ்சிதம் (முதற் பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| ,, (இரண்டாம் பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| ஜெயசீலன் ... ... ... ... | 1 | 0 | 0 |
| அஞ்சனாக்ஷி முதற்பாகம் ... ... | 1 | 0 | 0 |
| திரிலோக மோஹனாங்கி ... ... | 1 | 0 | 0 |
| சந்திரோதயம் ... ... ... | 1 | 0 | 0 |
| சுகுணதீரன் (முதற்பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| ,, (இரண்டாம் பாகம்) ... | 1 | 4 | 0 |
| கீசகன் (நாடகம்) ... ... ... | 0 | 12 | 0 |
| பத்மலோசனி ... ... ... | 0 | 12 | 0 |
| லீலா ... .. ... ... | 0 | 12 | 0 |
| சுந்தரன் ... ... ... ... | 0 | 12 | 0 |
| ஆனந்த சுந்தரி ... ... .. | 0 | 12 | 0 |
| ஆங்கில சிரோமணிகள் ... ... | 0 | 12 | 0 |
| கன்னியின் முத்தம் (முதற்பாகம்) ... | 0 | 12 | 0 |
| ,, (இரண்டாம் பாகம்) .. | 0 | 12 | 0 |
| நாடகமஞ்சரி ... ... ... | 0 | 12 | 0 |
| மங்கையர்க்கரசி ... ... ... | 0 | 12 | 0 |
| பூபதி ... ... ... ... | 0 | 12 | 0 |
| புருஷோத்தமன் சரித்திரம் ... ... | 0 | 10 | 0 |
| பன்னிரு நீதிக்கதைகள் ... ... | 0 | 10 | 0 |
| மாலிகா-பூஷணி ... ... ... | 0 | 10 | 0 |
| சிவானந்தன் ... ... ... ... | 0 | 10 | 0 |
| நீலகண்டன் ... ... ... | 0 | 10 | 0 |
| ரஞ்சிதசிங் ... ... ... ... | 0 | 10 | 0 |
| ஸரஸா ... ... ... ... | 0 | 10 | 0 |
| இராமாயண சாரம் ... ... ... | 0 | 10 | 0 |
| ரம்பை ... ... ... ... | 0 | 10 | 0 |
| சாரதாம்பாள் சரித்திரம் ... ... | 0 | 8 | 0 |

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

35, சின்னதம்பி தெருவு, சென்னை.

Caxton Press, Madras, E.